குமரகுருபரன்



16 ஆண்டு மலர் தை-௴ 1965-௵ இதழ்

ஆண்டு மலர் 25 பைசா


வருடச் சந்தா ரு. 1½

"குமரகுருபரன்"

ஆசிரியர் குழு

உ

திருச்செந்திலாண்டவன் துணை



குமரகுருபர சுவாமிகள்

உ

திருச்செந்திலாண்டவன் துணை

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்



ஸ்ரீ காசிமடம் : : திருப்பனந்தாள்

ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி - திருப்பனந்தாள்.

கயிலை - குமரகுருபரர் - இவ்விரு வகுப்பறைகளுக்குரிய சிலா சாசனத் திறப்பு விழா - 27-10-63



திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து இளவரசு, வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'கயிலை' என்ற வகுப்பறைக்குரிய சிலாசாசனத்தைத் திறந்தருளியது.

ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி • திருப்பனந்தாள்.
கயிலை - குமரகுருபரர் - இவ்விரு வகுப்பறைகளுக்குரிய சிலா சாசனத் திறப்பு விழா - 27-10-63



திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து இளவரசு, வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுடன் டி ஹைஸ்கூல் கமிட்டி உறுப்பினரும், பிறரும்.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

வாழ்க! வாழ்க!

சீர்பூத்த செந்தமிழின் திறமனைத்தும் தேற்றித்
தெவிட்டாத அருள்வெள்ளம் சிந்தைகொள ஊற்றிக்
கார்பூத்த ஆணவத்தின் கட்டனைத்தும் நீற்றிக்
கருத்தழிக்கும் வினைமாயைக் கலக்கமெலாம் மாற்றி
ஏர்பூத்த செவ்வேளின் இணையடியைப் போற்றி
எம்பெருமான் திருப்புகழை எழில்திகழச் சாற்றிப்
பேர்பூத்த திருமுனிவர் குருபரனார் நற்றாள்
பெரும்புணையாப் பற்றிவளர் குருபரனே வாழ்க! 1

காண்பார்கள் - கண்ணிணைவிட் டகலாது நின்றும்
கருதுவார் உளமுழுதும் களிதுளும்ப நிறைந்தும்
பூண்பார்கள் பூணும்வகை பொன்னடிகள் தந்தும்
பொறப்புடைய அறச்செயல்கள் எண்ணிலவாய்ப் புரிந்தும்
மாண்பார்ந்த தவநெறிக்கோர் மாமுதல்வர் ஆகி
மாரியென எல்லோர்க்கும் வழங்கிமகிழ் வள்ளல்
ஆண்டருள எளிவந்த அருணந்தி எந்தை
அடியிணையைப் பற்றிவளர் குருபரனே வாழ்க! 2

அருணந்தி மாமுனிவர் ஆணையென நாளும்
அவருளமே தம்முளமாய் அறம்புரியும் அண்ணல்
குருபரனார் திருமரபின் இளவரசாய் எங்கள்
கொழிதமிழும் சிவநெறியும் குறைவறவே பேணும்
அருமைதிகழ் திருமுத்துக் குமரமுனி காட்டும்
அருள்வழியில் தலைநின்று பதினாறும் ஆண்டில்
பெருமைபல பெற்றுயர்ந்து பேருலகம் எல்லாம்
பெரிதெடுத்துப் பேசவளர் குருபரனே வாழ்க! 3

அன்பன்,
பொ. முத்தரசு

உள்ளுறை

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 16 || குரோதி-ஹு தை திங்கள் 1-ம்உ [14–1–65] || இதழ் 1

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

"குமரகுருபரன்"
பதினாறுவது ஆண்டு மலர்

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

தோற்றுவாய்

"பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்"
—குமரகுருபரர்.

"குமரகுருபர"னுக்கு, இன்று பதினைந்து ஆண்டுகள் நிறைந்து பதினாறும் ஆண்டு தொடங்குகின்றது. ஒருவற்குக் காட்சிக்கினிய கட்டிளமையும் வனப்பும் பொருந்தும் பருவம் இதுவே. அவனது கலை நிறை அழகும், எழில்வளர் வனப்பும், செயல்திற ஆற்றலும், அவனைப் பெற்றோர்க்கே யன்றி, மற்றும் ஏனையோர்க்கும் இன்பம் தருவதில்

ஐயமும் உண்டோ? கண்டும், கேட்டும், கலந்து பழகியும் அவனோடு உறவாடும் எல்லோரும் போற்றிப் பாராட்ட, இவ்வாண்டுப் பொங்கல் திருநாளில், வாசக நேயர்களது, கண்ணும், மனமும் கையும் களி கொள்ள உலா வருகின்றான் என்பதைக் காணப் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

பதினைந்து ஆண்டுகள் நிரம்பப் பெற்றுப் பதினாறும் ஆண்டு எய்தும் பருவம், ஒருவன், அறிவு, திரு, ஒழுக்கம், ஆற்றல் முதலிய பலவகை நலங்களும் நிறைந்து, பொதுப்பணிக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்ளும் பான்மையும், பயனும் உடையது. அத்தகைய இயல் பனைத்தும் நிறைந்ததொரு தவப்பெருஞ் செல்வனாக, இன்று "குமரகுருபரன்" திகழ்கின்றான் என்றால் அது மிகையாகாது. அவனைத் தோற்றுவித்து, வளர்த்து, கண்ணும் கருத்துமாய்ப் பேணிப் போற்றி வரும் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுடைய திருவருள் நோக்கப் பேருதவி, தமிழ் உலகும், சைவ உலகும், என்றென்றும் எண்ணி யெண்ணி மகிழ்தற்கும் உருகுதற்கும், இறும்பூது எய்துதற்கும் உரியதாகும். அத்தகைய அருட் கடைக்கண் நோக்கில் "குமரகுருபரன்" என்றென்றும் திளைத்து நிற்பதால் அவன் சிறந்ததோர், மொழித் தொண்டும், சிவநெறித் தொண்டும் ஆற்றுவான் என்பது உறுதியே.

ஆதி குமரகுருபர சுவாமிகள் தண் தமிழிடத்தும் சைவ நன்னெறி யிடத்தும் கொண்ட பேரன்பு அளக்கலாகா ஆழமும் பெருமையும் உடைய மாண்பினது. செயற்கருஞ் செயல்கள் பலசெய்த தவப்பெருஞ் சிங்க வேறாகிய அவரது பேரன்பு அவர் அருளிச் செய்துள்ள பாடல் களில் எங்கணும் முகிழ்த்துத் தோன்றக் காணலாம். அவர் அருளி யுள்ள பாடல்கள் "பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும், படிக்கப், பக்கநின்று கேட்டாலும் பரிந்துள் உணர்ந்தாலும்" அத்தனைக்கும் தித்திக்கும் அமுதமாய் இருப்பதோடு, வேண்டுவார் வேண்டிற்றெல் லாம் விழையுமுன் கொடுக்கும் இயல்பின வாயிருப்பதையும் உணர லாம். அதனை அறிவுச் செருக்கால் ஆராய எண்ணுதலினும், அன்புப் பிணைப்பால் நம்பிக்கையோடு அகங்குழைந்து பயின்றால், பெற்றகரும் பேறுகளை உறுதியாகப் பெறலாம் என்பது அனுபவித் துணர்ந்த ஆன்றோர் துணிவு. அத்தகைய திருவருளின்பப் பேரனுபவத்திற்கு இணையற்ற கருவூலமாகத் திகழும் அவர் அருட்பாடல்களின் பயன்,

உலகின் எம்மருங்கும் பரவி, மக்களுக்கு விழிப்பூட்ட வேண்டும் என்று திருவுளங் கொண்ட திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர், ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், காசிமடத்தின் மூல முதல்வரின் "குமரகுருபரன்" என்ற திருப்பெயர் தாங்கியே அது நிலவ வேண்டும் எனத் திருவருள் பாலித்தது தமிழுலகம் செய்த தவப்பேறே. அவர்கள் பொன்னார் திருவடிகளில் இப்பதினாறுவது ஆண்டு மலரை அன்புக் காணிக்கையாகச் சமர்ப்பித்து மகிழ்கின்றேன்.

வள்ளல் தன்மையே வடிவமாகவும், பயன் கருதாப் பொதுநலப் பணியே முழு மூச்சாகவும், உலகின்புறக்கண்டு தாமின்புறுவதே வாழ்க்கையின் குறிக்கோளாகவும், "குமரகுருபரனை" வளர்க்கும் அறப் பெருஞ் செவிலியாகவும், மையறு மாதவப் படிவம் ஈதென வயங்கும் பேரொளியாகவும் இலங்கி, அடியேனையும் இப்புண்ணியப் பெருந் தொண்டில் ஈடுபடுத்தித் தடுத்தாட் கொண்டருளும் தவப்பெருஞ் செல்வர் சிவசிவ ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பொன்னடித் தாமரைகளைத் திசை நோக்கித் தொழுது வழிவழித் தொண்டு பூண்டொழுகும் பேற்றினை வழங்கியருளும் கருணைக்கு, மனமொழி மெய்களாலாகிய வணக்கத்தையும் நன்றியையும் பணிவுடன் விண்ணப்பித்துக் கொள்கிறேன். அவர்கள் ஆணைவழி நின்றொழுகும் ஸ்ரீகாசிமடம் இளவரசு வித்துவான் ஸ்ரீலஸ்ரீ முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், தமக்குரிய எத்தனையோ பெரும் பொறுப்புக்களினிடையே ஆசிரியர் குழுவின் பணியில் மகிழ்வுடன் ஈடுபட்டுக் "குமரகுருபரன்" வளர்ச்சிக்கு வேண்டிய எல்லா நல்லுரைகளையும் அவ்வப்போது அருளி வருகின்றார்கள். ஸ்ரீலஸ்ரீ இளவரசு சுவாமிகள் அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் அன்பும், அருளும் அறிவுரைகளும் ஆற்றுப்படுத்த, ஸ்ரீலஸ்ரீ இளவரசு சுவாமிகளின் நல்லுரைகள் துணை நிற்க, இப்பதினாறும் ஆண்டில் "குமரகுருபரன்" முன்னிலும் பன்மடங்கு வலிமையும் ஆற்றலும் கொண்டு பொதுநலப் பணி புரிவான் என்பது திண்ணம்.

மனங்கரைத்து மலங்கெடுக்கும் திருவாசகத்துக்குச் சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றிய திருவாசக அநுபூதி உரை

என்னும் திருவாசக வியாக்கியானத்துள், தேர்ந்தெடுத்த பாடல்களின் அநுபூதி உரையுடன், திங்களுக்கு ஒருபாடல் வீதம் "குமரகுருபரனில்" வெளியிடுமாறு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் அருளிப்பாடு செய்திருக்கும் வண்ணம் இந்த இதழிலிருந்து வெளியிடப்பெறும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதி குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்துள்ள நூல்களுள், தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணி மாலைக்குத் தொண்டைமண்டலாதீனம் மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள் எழுதியருளும் பொருள்விளக்கக் கட்டுரைகளும், டாக்டர் திரு. பா. நடராசன், M. A., D. Litt, அவர்களின் திருமந்திர ஆங்கில மொழிபெயர்ப்பும் தொடர்ந்து வெளிவரும். மேலும் வழக்கம்போல் வெளிவரும் பொருள் விளக்கக் கட்டுரைகளும், மொழி பெயர்ப்புக்களும் தொடர்ந்து இடம் பெறும். காலம் வாய்க்கும் போதெல்லாம், சமய இலக்கிய செப்புப் பட்டய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வரும், திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி முதல்வர் சிவநெறிச் செல்வர் திரு. K. M. வேங்கடராமையா அவர்கள் M. A., B. O. L., தேவகோட்டை சிந்தாந்தப்புலவர் மாமணி பாலகவி, வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள், சென்னை 'திருப்புகழ் அமிர்தம்' ஆசிரியர், திருமுருக கிருபானந்தவாரி அவர்கள், மைலாப்பூர் ஸ்ரீ இராமகிருஷ்ணமடம் 'ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்' ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ பரமாத்மா நந்தா சுவாமிகள் அவர்கள், அண்ணாமலைப் பல்கலை கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர், திரு. கோ. சுப்பிரமணியம் அவர்கள், M.A., B.L., தமிழ் மொழி இயல் துறைப் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள், M.A., B.L. M.O.L., பனசை செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள், காசி இந்துப் பல்கலை கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A., சென்னை, தணிகைமணி திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள், திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள், M.A., கல்வெட்டு ஆராய்ச்சியாளர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள், ஸ்ரீவைகுண்டம் அருள்நந்திநகர் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திரு. கு. பழநிசாமி அவர்கள் M.A., தென்காசி வழக்கறிஞர் திரு. A. C. சண்முகநயினார் அவர்கள், B.A., B. L., திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், திருப்பனந்தாள் தேவாரமணி திரு. K. A.

சட்டையப்பன் அவர்கள், இன்னும் பல பேரறிஞர்கள் எழுதும் எழுத்தோவியங்கள் 'குமரகுருபர'னில் இடம்பெறுகின்றன.

பல்வேறு துறைகளில், புதுப்புதுக் கருத்துக்கள் அமைத்து, நுண்மாண் நுழைபுலம் செறிந்த கட்டுரைகளையும், கவிதைகளையும் இசைப் பாடல்களையும், மொழி பெயர்ப்புக்களையும் மக்கள் நலனும் தமிழார்வமும், சமயப் பற்றுமே அடிப்படையாகக் கொண்டு எழுதிவரும் எல்லா அன்பர்களுக்கும் எம் நன்றி என்றென்றும் உரியதாகும். "குமரகுருபரன்" நல்ல முறையில் திங்கள் தோறும் வெளிவருவதற்கு எப்பொழுதும் உதவிவரும் ஸ்ரீவைகுண்டம் அருள்நந்தி நகர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆர்ட்ஸ் காலேஜ் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் திரு. பொ. முத்தரசு M.A.B.T., அவர்களுக்கும், 'குமரகுருபரன்' வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் ஆசிரியர் குழுவினர்க்கும், உரிய காலத்தில் அச்சுப்பணியை நிறைவுசெய்து உதவும் "குமரகுருபரன்" அச்சகப் பணியாளர்களுக்கும் இதழ்களைக் குறித்த காலத்தில் அனுப்பி உதவிவரும் கலைக்கோயில் சிப்பந்திகளுக்கும் நம் நன்றி உரியது.

திருச்செந்திலாண்டவன் துணை முன்னிற்க

தமிழும் சைவமும் தழைத்தினிது ஓங்குக. குமரகுருபரன் வளர்க.

இங்ஙனம்,

ஸ்ரீவைகுண்டம்,
14-1-1965.

T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A., B.L.,
நிர்வாக ஆசிரியர்

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம் — முதற் கொத்து

இவை, முதற்கொத்துத் திருப்பாவாவன பத்திலும் தேகத்திற் காணும் பரிபாக சின்னங்களைச் செலுத்தும் சிவசத்தியின் பெருமையின் திருவருள் விநியோகமாவன:—

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

(இதன் பொருள்). மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன்விரை ஆர் கழற்கு (என்றது)—நாதனே! தேவரீருடைய அருள் மணம் வீசும் பொற்பாத கமலங்களை அடியேன் திருவருளால் தேகம் பரவசமுற்றுப் புளகாங்கிதமாக, உரோமக் கால்தோறும் மயிர்க் கூச்சிட்டது (எனக் காண்க); கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி (எ-து).—இரண்டு கைகளும் சிரசின்மேல் அஞ்சலி கூப்பி இரண்டு கண்களிலும் ஆநந்த நீர் ததும்பி (எ-க); வெதும்பி உள்ளம் பொய்தான் தவிர்ந்து(எ-து)- 'எனது உள்ளம் யான்' என்ற பொய் திருவருளால் நீங்கவே, அதனால், ஆராமை வெப்பம் கொண்டு எனது என்ற புறப்பற்றும் தவிர (எ-க); உன்னைப் போற்றி சய சய போற்றி என்னும் (எ-து)- தேவரீர் திருவடி கண்டு, இப்பாவுக்கு முன் அகவலில் இறுதியிற் சொல்லிய தொடர்ச்சியாகவே, மீ மிசையாகவே, அடிமையை இரட்சிக்க வேண்டுமெனத் திருவடியில் வணக்கமுற்றிருப்பவனை என்னை (எ-க); கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே (எ-து)—சுதந்தர ஈனனைச் சருவ சுதந்தரமாக்கி, என்னை அநாதியே அடிமை கொண்ட நாதா! என்னை இரட்சிப்பாய் (எ-க). (1)

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷெ நூல் நிலையத்தில் கிடைக்கும். 20% கழிவு உண்டு.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

பொங்கல் வாழ்த்து

பொங்குக பொங்குகவே — அருள்
பொங்குக பொங்குகவே

1. பொங்கல் பொங்குக பொற்பு நிறையவே
போகாத் துரிசெலாம் போக்கி ஒளிரவே
எங்கும் களிப்பொலி எங்கும் எழிற்சுவை
எல்லாம் பொலிவுறும் ஏற்றம் மிளிரவே (பொங்)

2. இன்பம் மிகுந்திடத் துன்பம் தொலைந்திட
ஏக்கம் மறைந்திட ஊக்கம் பிறந்திட
முன்பு விதைத்தது முற்றும் விளைந்திட
மூடும் கடும்பனி ஓடி ஒழிந்திடப் (பொங்)

3. நாட்டில் பெருந்துயர் மூட்டித் திரிபவர்
நாடித் தன்னலம் தேடிக் களிப்பவர்
கேட்டை விழைந்தெதிர் கூவும் அழிதகர்
கீழ்மைத் தொழிலெலாம் கெட்டுப் பொடிபடப்(பொங்)

4. நாட்டை மறந்தவர் கேட்டை அடைந்தனர்
நாடு சிறப்புற நாளும் உழைத்தவர்
ஏட்டில் நிறைந்தனர் யாதும் குறைவிலர்
என்றும் நிலைபெறும் குன்றாப் புகழ்பெறப்(பொங்)

5. பொற்பார் தமிழ்வளம் போற்றும் உளத்தவர்
பூணும் பணியெலாம் மாணச் சிறக்கவும்
நிற்பார் திகைப்பினை நீக்கித் தளர்விலா
நேச உணர்வினால் நேர்மை வளர்க்கவும் (பொங்)

6. ஏழை கலக்கமும் ஏங்கும் அழுகையும்
இல்லா தொழிந்தெழு செல்வம் செழிக்கவும்
மோழை அறிவினால் பாழே புரிபவர்
மூடம் ஒழிந்துளம் முற்றும் திருந்தவும் (பொங்)

7. மாறு படுமொழி கூறும் அவர்உரை
நீறு படஅதன் கேடு களையவும்
தேறும் அறவுரை செப்பி உலகுளோர்
செம்மை நெறிசெலும் திண்மை உயரவும் (பொங்)

8. யாண்டும் புகழ்பெறும் ஆண்மை தழைக்கவே
எல்லா உயிர்களும் இன்பில் திளைக்கவே
வேண்டி முயல்பவர் வீறு நிலைக்கவே
வீரர் செயலையே நூல்கள் விரிக்கவே (பொங்)

ஸ்ரீவைகுண்டம்
14-1-1965

பொ. முத்தரசு,
தமிழ்ப் பேராசிரியர்.

தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை

(கட்டுரை 9)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

கட்டளைக் கலித்துறை

முருந்தடர்ந் தார முகிழ்த்தபுன் மூரன் முதல்விகயல்
பொருந்தடங் கண்விழிக் கும்புலி யூர்பொன் மார்பின்மற்றுன்
பெருந்தடங் கொங்கை குறியிட்ட வாகண்டப் பிஞ்சுகர்க்குன்
கருந்தடங் கண்ணுங் குறியிட்ட போலுங் கறைக்கண்டமே. 8

சிவகாமியம்மையார்க்குத் தோன்றும் புன்னகை முத்துப் போல் விளங்கின. மூரல், புன்னகை, முறுவல், புன் சிரிப்பு என்னும் வழக்கு எவரும் அறிந்ததே. மூரல் ஈண்டுப் பற்களையும் குறிக்கலாம்.

"முகரக் களிவண்டு அடைகிடக்கும்
முளரிக் கொடிக்கும் கலைக்கொடிக்கும்
முருந்து முறுவல் விருந்திடுபுன்
மூரல் நெடுவெண் ணிலவெறிப்ப
மகரக் கருங்கட் செங்கனிவாய்
மடமான் கன்று வருகவே".

என்னும் அங்கயற்கண்ணியம்மை பிள்ளைத் தமிழ்ச் செய்யுளின் கண், இங்குள்ள 'முருந்து' 'மூரல்' இரண்டும் உள்ளவாறும் 'முறுவல்' என்ற சொல் அதில் வேரு நிறுவ நின்றவாறும்

அறிக. அங்கு 'முறுவல் என்றது பற்களையும் 'முரல்' என்றது புன்னகையையும் குறித்து நின்றன. 'முறிமேனி முத்தம் முறுவல் - (குறள். 1113) என்றதறிக. 'முதல்வி என்றது அண்மை விளி. 'முருந்து அடர்ந்து ஆரம் முகிழ்த்த புன்மூரல் முதல்வி' என்றதன் பொருள் :— மயிலிறகின் அடிக்குருத்தைத் தாக்கி முத்துப் போலத் தோன்றிய புன்முரலையுடைய முதல்வி, என்பது. முருந்து - மயிலிறகின் அடிக் குருத்து. ஆரம் - முத்து. ஆரம் முகிழ்த்த - ஆரத்தைப் போலத் தோன்றிய (புன்முரல்). முரல் முதல்வி - முரலையுடைய முதல்வி. புன்முரல் - பொன் போலும் அருமையில் தோன்றும் முரல். பொன் என்ற சொல் புன்னென மருவுதல் உண்டு. 'பொன்னார் சடைப்-புண்ணியன்' என்றதை அறியாத சைவர் உளரோ? பொன்சடையைப் புன் சடை என வழங்குதலையும் அவர் அறிவர். அங்குப் புன்மை (அற்பம்) எனக் கொண்டு அற்பச்சடை எனப் பொருள் உரைப் பார்க்கு நரகமே இக்காலக் கிரகம் (முற்காலக் கிருகம் அன்று).

கயல் என்னும் மீன் வகையுள் ஒன்றனைக் கண்ணுக்கு உவமம் ஆக்குவது கவி மரபு. 'கயல் கண் விழிக்கும் புலியூர்' என்றது, அப்புலியூர் நீர் நிலை முதலியவற்றுள் கயல் கண் போலத் தோற்றும் உண்மையைக் குறித்து, அவ்வூர் நீர்வளம் (முதலியன) உடைமையை அறிவித்தார் ஆசிரியர். 'தடங்கண்' விசாலாட்சம். 'வாட்டடங்கண்மாதே' என்றதை இத்திங்களில் குழந்தை குட்டியெல்லாம் அறியும். 'பெருங்கண்' பொருமைகண்-பொருங்கண். பொருமை-ஒப்பாந்தன்மை. பொருமை - பொர்மை பொம்மை, பெருமகன் - பெர்மகன். பெர்மான் - பெம்மான் (அம்மான்) மகன் - தேவன். மகள் - தேவி. திருமகள் கலைமகள்.

கண் விழிக்கும் என்றதற்கு இங்குக் கண்போலத் தோன் றும் என்றலே பொருந்திய வுரை. 'கயல்கள் கண்களைப் போலத் தோற்றுதற்கு இடமான புலியூர்' என்ற தமிழ்த் தெய்வத்தின் உரையே உண்மை யுடையது. தோற்றுதற்கு எழுவாய் கயல். 'சேற்றிதழ்க் கமலம் கண்மலரும் தண்வயல் சூழ் திருப்பெருந் துறை' செப்புறு கமலம் கண் மலரும் தண்வயல் சூழ்திருப் பெருந்துறை' என்ற திருவாசகத்தில், கமலங்கள் கண்களைப் போல மலரும் என்று பொருள் கொள்ளலும் பொருந்தும்.

பொருந்தவே, 'கமலங்கள் மலரும்' என்று பிரித்துக் குடிகெடுக்கும் உலகர் செந்தமிழ்க்குத் தம்மைத் தக்காராகச் செய்துகொள்ள மாட்டாத கலகரே. இவ்வாறே அத் திருவாசகத்திற்கு நாலாவதாகிய திருவாசகத்திலும் 'எங்கண் முன்வந்து' என்ற தொடரை எங்கள் முன்வந்து, எனப் பிரிப்போரே பலர். எம் கண் முன் வந்து என்னும் பொருள் தாராதவாறு செய்யும் கொடும் பிரிப்பு ஏற்றுக்கோ?

புலி-வியாக்கரபாத முனிவர். புலியூர்-வியாக்கிரபாதபுரம். 'பெரும்பற்றப் புலியூர்' என்று திருமுறை கூறிற்று. அதன் பொருளை,

"விரும்புற்ற தவம்விரதம் சீலம் எல்லாம்
மேல்விளைவென் றறிந்தெவையும் விமலன் கூத்தென்
றிரும்புற்ற மனம்அழலின் மெழுகா யென்றும்
யான்செய்தேன் பிறர்செய்தார் எனுங்கோள் நீக்கி
அரும்புற்றங் கெண்ணுதியான் என்னும் பாசத்
தவர்மருவும் புறப்பற்றே டகப்பற் றென
பெரும்பற்றை யகன்றருளைப் பெறுவோர் ஞானப்
பெரும்பற்றப் புலியூரைப் பிரியார் தாமே."

என்றதில் ஒரு சிறிது குறித்திருக்கின்றது. கட்டிற் பெருமபுற்றைத் தோற்றி வீட்டிற் பெரும்பற்றை வளர்க்கும் பொருட்டும் ஆம் என்றும் உளர். பெரும்பற்றுண்டாக்கும் புலியூர்; எதில் பெரும்பற்று உண்டாக்கும் என்பது வினா. கட்டு நீங்கி வீடு பெறுவதில் என்பது விடை. இது சைவ சம்பிரதாயம்.

'கயல் பொருந் தடங்கண் விழிக்கும் புலியூரர்' என்றதில் அர்ஈறு நீங்கிய நிலையில், அடைமொழின் பொருத்தம் அறிதற்பாலது. விழிக்கும் புலியூர் என்றதில், பெயரெச்சம் இடப் பொருள் கொண்டது. யான் உண்ணும் வீடு என்றதிற் போலக் கொள்ளுக.

சிதம்பரேசுவரர் திருமார்பில், அம்பிகையின் கொங்கைக் குறியும் செங்கைக் குறியும் உற்ற வரலாறு முன்னரே தெரிந்தது இதன் ஏழாவது கட்டுரையிலும் குறிக்கப்பப்பட்டுள்ளது. அதிற் காண்க.

சிவபெருமான் திருமார்பிற் குறியிட்டன நின்கொங்கை. அக்கொங்கையின் செயலை நின்செங்கண் அறிந்தன. அறிந்து நாமும் அம்மார்பிற்கு மேற்பட்ட இடத்திற் குறியிட்டு, அக் கொங்கையினும் உயரிய இடத்தில் இருக்கும் நம் உயர்வை நிலை பெறச் செய்துகொள்வோம் என்று கண்கள் எண்ணியிருக்க லாம் போலும். திருக்கழுத்தை நோக்கிக் கண்களும் குறியிட்டன போலும். அதன் விளைவேயாக அத் திருக்கழுத்திலே நஞ்சு அடங்கிற்று. நஞ்சணி கண்டன், நஞ்சுண்டவன் என்றதற்குத் தகத் தற்குறிப்பேற்றமாகக் கற்பித்தவாறு இது. கண்ணில் நஞ்சுள்ளதாக (மயக்கும் மகளிர் விழிக்கு இயல்பாக)க் கூறுங் கவிமரபைக் கற்றோர் அறிவர்.

"புலியூரர் பொன்மார்பில் மற்றுஉன் பெருந்தடங் கொங் கை குறியிட்டவா(று) கண்டு அப்பிஞ்ஞகர்க்கு உன் கருத்தடங் கண்ணும் குறியிட்ட போலும் கறைக்கண்டமே"

இதில் மார்பிற் குறியிட்ட கொங்கைச் செயலை அறிந்து கண்களும் கண்டத்தில் குறியிட்டன என்ற நயம் மிக்க சுவை பயப்பதாகும். முலைத் தழும்பும் வளைத்தழும்பும் அம்மையார் நம் அப்பனுக்கு இட்ட வரலாறு மட்டும் அறிந்த எல்லா அன்பர்க்கும் விழித்தழும்பும் இறைவனைத் திரு நீலகண்டனுக்கிற்று என்னும் புது நிகழ்ச்சி மிக்க வியப்பாக்கும். முதலிருதழும்பும் காஞ்சியில் உற்றவாறு போல விழித்தழும்பு தில்லைச் சிதம்பரத்தில் உற்றது போலும்.

கறை-கறுப்புற்ற. கண்டம்-கழுத்து. 'இரத்தக் கறை' என்பது போல இது விடக்கறை. ஆலகாலவிடம். இரத்தத்தால் ஆகும் கறை இரத்தக் கறை. நஞ்சாலாகுங் கறை நச்சுக்கறை. கறைக்கண்டம்-கறுப்பையுற்ற கண்டம். ஐயீறு கண்ணறை பறவை வெள்ளை பச்சை முதலாயவற்றுள் வினை முதலையுணர்த்தும்.

வெண்மை பசுமை என்னும் பண்பின் முதனிலையுடன் ஐயீறு புணர்ந்து வெள்ளை பச்சை என முடிந்து வெண்மையுடைப் பொருளும் பசுமையுடைப் பொருளுமாகிய பண்பியை யுணர்த்தும். வெண்ணிறத்தோனாகிய பலதேவனை "மேழிவலன் உயர்த்த வெள்ளை" என்றார் இளங்கோவடிகள்.

ஒழுகுதற்கருவியாகிய சகடத்தை (வண்டியை) யுணர்த்தும் ஒழுகை முதலியவற்றுட் கருவியைக் குறிக்கும். ஒழுகை சகடமா தலைக் "குப்பையேறி உமணர் உப்பொய் ஒழுகை எண்ணுப" எனக் கபிலர் பாடியதால் அறிக. உப்புஒய்தல்—உப்பு விற்றல். ஒய்தல் என்றார் அரசஞ்சண்முகனார் என்னும் பெறலரிய பெரும் புலவர்.

நடவை சேக்கை முதலியவற்றுள் நிலம் உணர்த்தல் காண்க.

கொலை முதலியவற்றுட் செயல் உணர்த்தும். வைகறை, மாலை முதலியவற்றுட் காலம் காட்டும். மாலை மயங்கற் காலம் எனப் பொருள்படும். தொடை முதலியவற்றுட் செயப்படு பொருள் புலப்படும். இங்குக் காட்டிய உதாரணங்களால் ஐயீறு வினைமுதல், கருவி, நிலம், செயல், காலம், செயற்படு பொருள் எனச் சொல்லற்பட்ட அறுவகைப் பொருளையும் பிறவற்றையும் உணர்த்துதலை அறியலாம். 'கறை' என்பது நஞ்சினது கறுப்பை உணர்த்திற்று. நஞ்சு கறுத்தலாயவினைக்கு முதலாகும். அவ் வினை முதலின் செயல் கறுத்தல். அச்செயலைப்பட்டது கண்டத் தில் தோன்றும் கறுப்பு நிறம். அந்நிறம் நஞ்சாய வினைமுதல் ஆகாது. அந் நஞ்சால் ஆய கறுப்பை நஞ்சுஎனலாமோ? நஞ்சு வேறு அதனால் ஆன கறுப்பு வேறு. கறுத்தலாய செயலைப் பட்டது (கறையாகிய) செயற்படு பொருள். செயற்படு பொருள் என்னும் வழக்கே செயப்படுபொருள் என மருவிற்று. 'தொழிற் பயனுறுவது செயற்படு பொருளே' என்னும் உரைச் சூத்திரத்தால் அதன் உண்மை விளங்கும். *செயல் என்பது தொழிற்பயனைக் குறிக்கும். 'வனைந்தான்' என்பதற்கு வனைதலைச் செய்தான் என்று சேனாவரையர் முதலோர் விரித்து உரைத்தவாற்றால், அது புலப்பட்ட உண்மை.

(தொடரும்)

* கறுத்தலாய தொழிலின் பயனை உற்றது கண்ணுக்குத் தோன்றும் நஞ்சினது கறுப்பு நிறம் ஆகிய செயற்படுபொருள்.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,

Member. Legislative Assembly,

MADRAS-31.

மலர் 15. இதழ் 12-ன் தொடர்ச்சி

ஞானியின் அகிலத்துவம்

The Unitive attainment of Gnani

52. இருக்கும்சேம இடம்பிரம மாகும்
வருக்கம் சராசர மாகும்; உலகம்
தருக்கிய ஆசார மெல்லாம் தருமே;
திருக்கிலா ஞானத்தைத் தேர்ந்துணர்ந் தோர்க்கே.

The Brahmam shall be his impregnable abode,
The Universe, his kith and kin;
The diverse paths the world presenteth
-All, all shall be his.
For, verily he hath realised
The pure Gnana, free from doubts.

ஐயந்திரிபற்ற பேரறிவைப் பெற்ற ஞானி, பிரம்மத்திலே உறைவிடம் கொள்கிருன்; உலகனைத்தையும் அவன் உறவு கொள்கிருன்; உலகினில் மாறுபட்டு நிற்கும் சமய நெறிகளை யெல்லாம் வேறுபாடின்றிக் கருதுகிருன்.

ஞானமே முத்திநெறிக்குப் புணை

Gnana is the life-boat

53. அறிவும், அடக்கமும், அன்பும், உடனே
பிறியா நகர்மன்னும் பேரரு ளாளன்;
குறியும், குணமும், குரைகழல் நீங்கா
நெறியறி வார்க்கிது நீர்த்தோணி யாமே[1]

The Lord is of Infinite Grace,
In His Celestial City are Love, Light and Peace [eternal,
To them that seek to know His Form
And understand His Attributes
And attain His Holy Feet
–To them, this is the Path
–This, this the boat to cross Life's turbulent waters.

இறைவன் பேரருளாளன். அறிவு, அமைதி, அன்பு நிறைந்த தெய்வப் பெருநகரிலே அவன் வீற்றிருக்கின்றான். அவன் குறி, குணம் ஆகியவற்றை உணரவும், மலரடியைச் சேரவும் ஞானநெறியே உகந்தது. அது வினைக்கடல் கடத்தற்கு உயிர்த் தோணியாக அமைகின்றது.

[1] பாடம்: நீர்த்தோனியாமே. ஆனால் பின்வரும் பாடலை நோக்குகை யில், 'நீர்த்தோணி' என்பதே பொருத்தம்.

ஞானி ஒண்சுடராகுமாறு

How the Gnani becomes the Light Divine

54. ஞானம் விளைந்தெழு கின்றதோர் சிந்தையுள்
ஏனம் விளைந்தெதி ரேகாண் வழிதோறும்
கூனல் மதிமண் டலத்தெதிர் நீர்கண்டு
ஊனம் அறுத்துநின் றொண்சுட ராகுமே.

In whose thoughts Gnana ripens and swells,
In his path, along the Life-Boat appeareth and greeteth him;

And thus doth he reach the surging waters of the
Crescent Moon's sphere,
And there, rid of Impurities
He himself the Effulgent Light becometh.

முதிர்ந்த ஞானம் பிறக்கின்றவர்கள் சிந்தையில், பிறவிக் கடலைத் தாண்டவல்ல புணை தோன்றுகின்றது; அதன் துணை கொண்டு அமுத தாரை சுரக்கும் மதி மண்டலத்தை அடைகின்றார்கள். பின்னே மும்மலத்தினையும் அறுத்து, சிவத்தோடு கலந்து ஒளியாகின்றார்கள்.

ஞானி பெறுவது ஏனையோர் பெறார்
Gnani's attainments are unique

ஞானிக் குடன்குண ஞானத்தில் நான்குமாம்;
மோனிக்கு இவையொன்றுங் கூடா!முன் மோகித்து
மேனிற்ற லாம்சத்தி வித்தை விளைந்திடும்;
தானிக் குலத்தோர் சரியை கிரியையே.

For the Gnani
All four Gnana phases are his;
Not so for the silent yogic Moni;
His is only the power and Knowledge to perform
And to this order belongeth, too, [miracles;
Those who perform Sariya and Kiriya

ஞானத்தில் ஞானம், ஞானத்தில் யோகம், ஞானத்தில் கிரியை, ஞானத்தில் சரியை - என்ற இந்நான்கு படிகளும் ஞானிக்கே உரியன. இவையொன்றும் யோக நெறி நிற்கும் மோனிகளுக்குக் கிடையா. அற்புதங்கள் மீதுள்ள ஆசையால், சித்திகளைச் செய்யும் ஆற்றலையும், அறிவையும் அவர்கள் பெறுவர்; அவ்வளவே. அதுபோலவே தான் சரியை கிரியை பாதங்களில் நிற்போரும்.

குறிப்பு: மோனி – யோகி.

(To be continued)

விழிசொரி பழங்கண்

திரு. பொ. முத்தரசு அவர்கள், M. A., B. T.,
தமிழ்த்துறைத் தலைவர், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கல்லூரி,
அருள்நந்திநகர் – ஸ்ரீவைகுண்டம்,

'விழியொழுகி வற்புறுத்தல்' என்னும் அகப்பொருள் துறையைச் சார்ந்தது, கல்லாட நூலின் மூன்ருவது பாடல். பொருள் தேடுதற்காகப் பிரிந்து சென்றிருக்கும் தலைவனை எண்ணி எண்ணிப் பொறுக்க இயலாத துன்பத்தில் ஆழ்ந்திருக்கின்ருள் தலைவி. அவளை ஆற்றுவிக்க வேண்டிய கடமையுடையவள் தோழி. தலைவியின் வருத்தத்தின் ஆழத்தைக் கூர்ந்து நோக்கிய தோழி, அவளைத் தேற்றுதற்கும் தக்க முறையைச் சிந்தித்துச் செயலாற்றுகிருள். அவள் செயல், மனித மனத்தின் உணர்ச்சிக் கூறுகளை நன்கு அறிந்த தொன்ருக விளங்குகிறது. வருத்த மிகுதியால் செயலற்றுச் சோர்ந்தும்,மகிழ்ச்சிச் செருக்கால் மறதிவயப்பட்டுச் சோம்பியும் இருப்பவரைத் தெளிவிப்பதற்கு வெவ்வேறு வழிகளைப் பின்பற்றுதல் வேண்டும். இருவரிடமும், நேரிடை அறிவுரை எவ்வகைப் பயனையும் தராது. மாருக வெறுப்பையும், வெகுளியையும் தோற்றுவிக்கும். இதனை நன்குணர்ந்த தோழி, தலைவியின் மிக்க வருத்தத்தில் தனக்கும் பங்கு உண்டு என்று காட்டியும், அவ் வருத்தத்துக்குரிய காரணங்களை அடுக்கிக் கூறியும், தலைவியின் கருத்தை முதலில் தன்பால் ஈர்த்துக் கொள்கிருள். தன் பேச்சுக்குச் செவி சாய்க்கக் கூடிய மனநிலையைத் தலைவியிடம் ஏற்படுத்திக் கொண்டு, தன் கடமையைச் செய்து வெற்றி பெறுகிருள்.

திருக்கோவையார் :

இத் துறைக்குரியதாய்க் கல்லாடனுர் விளக்க எடுத்துக் கொண்ட திருக்கோவையார்ச் செய்யுள்:

மதுமலர்ச் சோலையும் வாய்மையும் அன்பும் மருவிவெங்கான்
கதுமெனப் போக்கும் நிதியின் அருக்கும்முன் னிக்கலுழ்ந்தால்
நொதுமலர் நோக்கமொர் மூன்றுடை யோன்தில்லை நோக்கலர்போல்
இதுமலர்ப் பாவைக்கென் னோவந்த வாறென்பர் ஏந்திழையே!

"என் அருமைத் தோழியே! என்னவோ எண்ணத்தில், ஆழ்ந் திருக்கிறுய் போலும்! அவரை முதல் முதல் பார்த்தாயே சோலை; அச்சோலை வாழ்க; எவ்வளவு அழகிய பூக்கள்; எத்தகைய இனிய மணம்; என்ன இனிய வண்டின் யாழிசை; அச்சோலையில் அல்லவா நம் பெருமானைக் கண்டாய்; அவர் "உன்னைப் பிரி யேன்; பிரியின் தரியேன்" என்று அன்போடு சொன்ன சூளுரை யைக் கூட என்னிடம் கூறி யுள்ளாயே; அத்தகையவர் அடிக் கடி தேடிவந்து அளவளாவிச் செல்லவில்லையா? ஒருகாலைக் கொருகால் அவர் அன்பு வளர்பிறைபோல வளர்ந்து வந்த தல்லவா? அளவுகூற இயலாத சிறந்த அன்போடு நம்முடன் கலந்து பழகியவர் திடீரென எங்ஙனம் பொருள்தேடப் பிரிந்து சென்று விட்டார்? அவர் தேடக்கூடிய பொருள்தான் அவ்வளவு எளிதில் கிடைத்து விடுமா? திரும்பிவர எத்துணைக் காலம் ஆகுமோ?" — என்றெல்லாம் தோழி, முந்திய நிகழ்ச்சிகளை அடுக்கிச் சொல்லும் போது, தலைவியின் உள்ளம் தோழியின் சொற்களில் முற்றும் ஈடுபடுகிறது. அவளும், இவற்றைத் தானே எண்ணிக் கொண்டிருக்கிறுள். தன் உள்ளத்தில் உள்ள எண்ணங்களையே தோழியும் சொல்லவும், அவள் பேச்சில் மெய்ம் மறந்து ஈடுபடுகிறுள். இதுவே தலைவியின் வழி யொழுகுதல் ஆகும். அவள் மனநிலையை நன்கு அறிந்து கொண்ட தோழி பின்னும், "இப்படி யெல்லாம் பழைய நினைவுகளில் மனத்தைச் செலுத்தி வருந்துகின்றுய்; உனக்கு வருந்தத்தான் தெரிகிறதே அல்லாமல் வருத்தத்தின் விளைவுகளை உணர்ந்து கொள்ளும் ஆற்றல் இல்லை. உன்மேனி எங்ஙனம் மாறுபட்டுப் போய்விட் டது என்பதும், நீ எப்படி மெலிந்துவிட்டாய் என்பதும், அடிக் கடி உன் கண்களில் நீர்மல்க, நீ பித்துப்பிடித்தவள் போல் இப்படி

இருப்பதும், உனக்குத் தெரியாமல் போகலாம்; அயலார் கண்களில் படாமல் இருக்குமா? அவர்கள் எல்லோரும், 'திருமகள் போல இருந்தாளே; அவளுக்கு என்ன வந்து விட்டது; ஏன் இப்படியிருக்கிருள்; தில்லையை நினைந்து வழிபடாத மடவோருக்கு வரக்கூடிய துன்பம் இவளுக்கு ஏன் வரவேண்டும்,' என்று தொடர்பில்லாமல் பல பல பேசுவதற்கு இடம் வைத்து விட்டாயே! ஆகையால் என் தோழியே! நீ வருத்தத்தைப் புறத்தே தோன்ற விடாமல் பொறுத்துக் கொள்ள வேண்டும்,'' என்றுகூறி வற்புறுத்துகிருள். இப்பேச்சு தலைவியின் நெஞ்சில் இடம் பெறுகிறது; அவள் வருத்தத்தையும், பிரிவையும் பொறுத்துக் கொள்கிருள் என்பது உய்த்து உணரக் கூடியது.

கல்லாடர் விளக்கம் :

இப்பாடற் கருத்தை விளக்கப் புகும் கல்லாடனுர், மாணிக்கவாசகர் விரித்துரைத்த செய்திகளைப்பற்றி ஏதும் கூறவில்லை. அவற்றைக் கோவையாரைக் கொண்டே, உய்த்துணரவைக்கிருர். தலைவன் பிரிந்து சென்ற கானகத்தின் இயல்பினை விளக்குமுகத்தான், அரசியலறிவு சிறிதும் இல்லாத வேந்தனுல் ஆளப்படும் ஒரு நாடு கரிந்து காடாவதை உணர்த்துகிருர். தில்லைப் பெருமான் திருப்புகழுக்கு ஈடாக, ஆலவாய் அண்ணலின் அருட்புகழ் ''இறையனுர் களவியல்'' எழுந்த வரலாற்ருேடு இணைத்துக் கூறப்படுகிறது. இனி, கல்லாடர் பாடற் பொருளைக் காண்போம்.

நாடு கரிந்த காடு :

ஒரு வேந்தன், தானுகவும் எதனையும் திறம்படச் செய்ய மாட்டான்; தக்கார் ஏவல் வழியும் நிற்கமாட்டான். அவனுக்கு நெடுநாளாகப் பகைவேந்தன் ஒருவன் உண்டு. அது தீராப் பகை என்பதனையும் உணராது அவ்வேந்தனேடு நட்புச் செய்ய முற்பட்டான். அவன் இவனேடு நட்புச் செய்யும் பான்மையில், இவனுக்குத் துணையாவாரைப் பிரிக்க முயன்றதைக் கண்டும், அவரைப் பேணிக் கொள்ளாது பிரிப்பதற்கு இடம் கொடுத்தான். தன் மூடச் செயல்களால் வேறு சில துணைவர்களையும் பிரித்தான். வலியும், காலமும், இடமும், அறியாது தனக்குப் பெரிய

தோர் பகையை உண்டாக்கிக் கொண்டான். புறப்பகைக்கு இடங் கொடுத்ததோடு அமையாது, அப்பகையின் வெற்றிக்கு உதவுவது போல உட்பகை தோன்றவும் வழியமைத்தான். இன்னோரன்ன அறிவிலாச் செயல்களில் மேலும் மேலும் ஈடுபடத் தக்க வண்ணம் பகைவன் நயவஞ்சகமாக உரைத்த சொற்களையே, விளைவறியாது, உண்மையென ஏற்றுக்கொண்டான். தன் ஆட்சி சிறப்பதற்காக, தன் பகைவனை, அவனுக்குப் பகைவனும் இன்னொருவனைத் தூண்டித் தன் வெற்றிக்கு ஆவன செய்யாது, இருவரையுமே தனக்குப் பகையாக ஆக்கிக்கொண்டான். இத்தகைய அறிவற்ற செயல்களை முன்பின் எண்ணிப் பாராது தானே செய்து வைத்துக்கொண்டு, இவற்றைத் தவறென இடித்துரைத்துத் தன்னைத் தெருட்டும் கண்போன்ற அமைச்சர்களையும் தழுவி ஒழுகாத அரசன் நாடு நிச்சயமாகக் கரிந்து போகும் என்பதில் யாருக்கும் ஐயம் நிகழுமோ? அத்தகைய கொடிய வெம்மை நிறைந்த கானகத்தைத் தாண்டித்தான் தலைவன் பொருளீட்டச் சென்றிருக்கின்றான்.

விழிசொரி பழங்கண்:

அவன் கடந்து சென்ற காடோ கரிந்தது. தேட வேண்டிய பொருளோ அரியது. யாருக்காகப் பொருளீட்டச் சென்றிருக்கின்றான்? தங்களுக்குத் துன்பத்தை மிகுவித்த சுற்றத்தாருக்குக் கொடுப்பதற்காக; அதாவது தலைவியின் பெற்றோர்க்கு, தலைவியின் பரிசப் பொருளாகக்கொடுக்க வேண்டியதைத் திரட்டுவதற்காக. இற்செறிப்பு, காவல், அலர்தூற்றல் முதலிய செயல்களால் பொறுத்தற்கரிய துன்பம் செய்தவர்க்குக் கொடுப்பதற்காக, அரிதின் முயன்று பொருள் ஈட்டச் சென்றிருக்கும் தலைவனின் பெருந்தன்மையை நினைய நினையத் தலைவியின் தாமரைக் கண்கள் நீர் சொரிந்தன. அது தேன் நிரம்பிய தாமரை மலர், பொங்கி வழியும் தேன்துளிகளைச் சிந்துவது போன்றிருந்தது. இத்தோற்றம் அவர்கள் அன்பினைப் புலப்படுத்துவதாயினும், அது அயலார்க்குத் தெரிதல் நல்லதல்லவே! அதனால் தோழி அவளை வருந்தாதிருக்க வேண்டி வற்புறுத்துகிறாள். நீர் துளும்பும் கண்களையும், அதற்குக் காரணமான மனத் துயரத்தையும்,

இதழ்நிறை மதுவம் தாமரை துளித்தென
விழிசொரி நீருடன் பழங்கண் கொண்டால்

எனக் கல்லாடர் உணர்த்துவது காண்க. காரணம் அவள் ஒரு குடிக்கு ஒரு பெண். தவமிருந்து பெற்ற தையல். சுற்றத்தார் யாவராலும் கண்மணிபோல் பேணப் பெறுபவள். நீர் நிறைந்த குளத்துள் ஒற்றைத் தாளில் நின்று நெடுந் தவம் செய்து, தாமரை அன்போடு பெற்ற திருமகளைப் போன்றவள் அவள். அவள் கண்கள் கலங்குவது கண்டால் பெற்றோரும் உறவினரும் தாங்கமாட்டார்கள். அதன் காரணம் என்ன வென்று ஆராயத் தொடங்குவர். அதன் விளைவுகள்......? எனவே, தலைவி ஆற்றி யிருக்க வேண்டும். இவள் துன்பங் கண்டவர், "இது இவளுக்கு வரக்கூடிய துன்பம் அல்லவே! இது கூடிற் பெருமானை வணங்கி அவன் திருப்புகழ் கூருதவர்க்கல்லவா வரும்" என்று பேசுவரே. பிறர் பேச்சுக்கு இலக்காவதா என்று கேட்கிருள், தோழி.

தமிழ்ச்சுவை திரட்டிய தென்தமிழ்க் கடவுள் :

உலகியலைக் குறைவற உணர்த்தி, மக்கள் வாழ்க்கையை நிலைநிறுத்துவது பொருளியல் மரபு. அம்மரபு காலங்கணக்கிட இயலாத் தொன்மையுடையது. அதன் இயல்பினை முழுவதுமாக உணர்த்துவது ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம். கடைச் சங்கத் திறுதிக் காலத்தில் நேர்ந்த கொடிய பஞ்சத்தால், அம் மரபு நாட்டில் அருகியது. பொருள் இலக்கணம் வல்லார் கிடைக்கவில்லை. எனவே சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னனும், சங்கப் புலவர்களும் மயங்கினர். அவர் களது கலக்கம் தவிர்க்கத் திருவுளங் கொண்டான் ஆலவாய் அண்ணல். அதனுல் பொருளிலக்கணப் பெருங்கடலைக் கடைந்து அதன் சுவையைத் திரட்டிக் கரையில் வைத்தாற் போன்று "அன்பின் ஐந்திணை" என்று தொடங்கும் அறுபது நூற்பாக் களைக் கொண்ட "இறையனர் களவியல்"என்னும் அகப்பொருள் நூலைத் தந்தருளினுன்.

பேராசிரியர் போன்ற பண்டைய உரையாசிரியர்கள், இந் நூல் ஆலவாய் அண்ணலால் அருளப் பெற்றதே என்பதை

உடன்பட்டுப் போற்றியுள்ளனர். எனினும், தொல்காப்பியப் பொருளதிகாரத்தையும், களவியலையும் ஒப்பிட்டுக் காணும் இன்றைய ஆராய்ச்சியாளர் தொல்காப்பிய அகப்பொருட் பகுதிக்கு, இது ஓர் அழகிய சுருக்கமாக அமைந்திருப்பதாலும், தொல்காப்பியத் தொடர்கள் பல இதன் நூற்பாக்களுள் இடைமிடைந்து வருவதாலும், கருத்து முரண் யாண்டும் இன்மையாலும், தொல்காப்பியத்தைத் துறைபோகக் கற்ற இறையனார் என்ற ஒரு புலவரால் இயற்றப் பெற்றதே களவியல் என்று துணிந்துரைப்பர். கல்லாடனார் முன்னைய மரபுப்படியே இதனை ஆலவாய்ப் பெருமான் அருட்புகழாகக் கோத்தெடுத்து ஏத்தியுள்ளார்.

வழியொழுகி வற்புறுத்தும் துறைப் பொருளை விளக்கும் கல்லாடர், சிறந்ததோர் அரசியற் கருத்தைப் புலப்படுத்தியிருப்பது இப்பாடலின் சிறப்பு. யாரொடும் பகை கொள்ளாமல் இருக்கும் சிறந்த அரசியல் நெறியையே, திருவள்ளுவர் போற்றியுரைத்துள்ளார். அதுவே போரொடுங்குவதற்கும், புகழ் வளர்வதற்கும் உரிய வழியாகும். ஆயினும் அத்தகைய உள்ளத் தெளிவில்லாத வேந்தர் சிலர் உலகில் இருப்பர். அவர் பகைத்தால் தற்காத்துக் கொள்ளச் சில அரசியல் நெறிகள் தேவை. அந்நெறிகளிற் சிலவற்றையே - இன்றியமையாதனவற்றையே - கல்லாடர் இப்பாடலுள் விதந்தெடுத்துக் கூறியுள்ளார். இவை இந்நாளைய குடியாட்சி அரசியலுக்கும் பெரிதும் பொருத்தமானவை என்பது கூறாமலே விளங்கும்.

பொங்கல் வாழ்த்து

வந்தது திருநாள் மகரத் தலைநாள்
செந்தமிழ் நாட்டில் திகழ்தரும் பெருநாள்!
கோதற விளைவிற் குதவிசெய் தருளும்
ஆதவ னுக்கா ராதனை புரிநாள்!
நெல்லும் கரும்பும் இஞ்சியும் மஞ்சளும்
பல்பெரு வளமும் பல்கிடும் நன்னாள்!
மடிதொடு மளவில் மடமட வெனவே
குடநிறை பாற்பசு கொட்டிடும் பொன்னாள்!
இன்பால் சுரக்கும் இனியவா னிரைகட்
கன்பாற் பொங்கல் அளித்திடும் உயர்நாள்!
உழவினைப் புரிந்திட் டுயர்பயிர் விளைக்கும்
மழவிடை போற்றி மகிழ்தரும் நன்னாள்!
பொங்கலும் கூட்டும் பொரிக்கறி வறுவலும்
பங்கமில் எருமை பரிந்தளித் துதவும்
திங்கள் அன்ன செழுந்தயிர்த் திரளைப்
பொங்குகண் ணமுதொடும் புசித்திடும் விழாநாள்!
பொற்புடன் நண்பர்பால் பொங்கிற் றோவென
அற்புடன் வினவி யகமகிழ்ந் திடுநாள்!
செந்நெல் முதற்பயிர் செழிப்புற விளையப்
பொன்னேர் பூட்டிப் பொலிவுறும் புதுநாள்!
புதுமணம் புணர்ந்த மணமகா ரெல்லாம்
குதுகல மாகக் குலவிடும் திருநாள்
இப்பெரு நாளில்,
பசியும் பிணியும் பகையும் ஒழிக
வசியும் வளனும் மகிழ்வும் பெருகுக
சுகமே மிகுக துன்பம் தொலைக
பகவத் பக்தி பரவுக எங்கும்
வெம்பகை ஒழிக மிளிர்நட் போங்குக
அம்புய மகளிர் அருள்மிகுந் திடுக
ஐயன் பரமன் அருள்மழை பொழிய
வையக மனைத்தும்நல் வாழ்வெய் துகவே

புல
14-1-1965

E. S. வரதராசய்யர்,
பேராசிரியர்.

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

song by

St. THAYUMANAVAR

17

Owing to their ignorance, sometimes, human beings will not be able to differentiate things of similar aspects, eventhough they are of diverse kinds. They confuse themselves by naming one to be the other. Lack of Pure Knowledge, over-confidence, egoism, on their part makes them arrogant disabling them from discerning the reality.

In the Spiritual field, Sivan and Jivan are two immortal entities with no limit of origin or end. Sivan (சிவன்) cannot be deemed at any time to transform into Jivan. But some false pretenders are dogmatic in holding that the Soul is the Supreme Self, ie, Siva. This false notion is refuted by Thayumanavar, by exposing the fallacy through the following simile. The light and the lamp are two different co-existing objects and on that score,it cannot be said that the lamp will at any time become the light. The same relationship exists between Pathy (God) and Pasu (Soul) also. This is brought out in the following couplet.

விளக்கும் தகளியையும் வேறென்னார் நின்னைத்
துளக்கமறச் சீவனென்று சொல்வார் பராபரமே.

(பொ–ரை.) விளக்கும் சுடரும் ஆகுபெயரால் ஒன்றெனக் கூறப்படினும், இயல்பால் வெவ்வேறானவையே. இதை உணராதார் முழுமுதலாகிய உன்னைச் சிறிதும் நடுக்கம் இல்லாமல் சீவன் என்று சொல்கின்றனர்! என்னே பாவம்!

Oh,....Lord Supreme, Due to lack of sound knowledge, the mortals often say without any shudder that you are the Soul. It is a pity, they are so very ignorant that they are not able to differentiate Light from Lamp.

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

சிவன் பணிந்தார்

திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள், B. A.,
ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி
புளியங்குடி.

—<O>—

பார்க்கும் இடம் எங்கணும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை, "இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன்" என்று சின்னாள் பல்பிணிச் சிற்றறிவுடைய உயிர்களால் எழுதிக் காட்ட இயலாது. ஆனால் உயிர்கள் அனைத்தையும் உய்யக் கொண்டு பேரருள் பாலிப்பதே எம்பெருமானது தொழில். எனவே, அவன் தானே வந்து தன்னுடைய அளப்பரும் பேரருளால் உயிர்களுக்கு, உயிர்களில் பக்குவமுடைய சான்றோர்களுக்கு, மெய்யுணர்வாளர்க்குத் தன்னுடைய எண்ணரிய அருட்டிரு மேனிகளைக் காட்டியருளி யிருக்கின்றான். அத்திருமேனிகளுள் 'அம்மையப்பர்' திருவுருவம் 'தொன்மைத் திருக்கோலம்' என்று மாணிக்கவாசகர் போன்ற சிறந்த அடியார்களால் போற்றி வழிபடப் பெற்றுள்ளது.

இறைவனது திருவருளே அம்மை. இறைவன் எடுக்கும் வடிவங்களெல்லாம் அருளாலேயே. எனவே அம்மைக்கு வடிவு என்ற பெயரும் உண்டு. இறைவனையும், அவன் அருளையும் நம் பெற்றோராகக் கொண்டு வழிபடும் உணர்ச்சியில் புலவர்களாகிய மெய்யுணர்வாளர்களுக்குத் தோன்றும் கற்பனைகள் எத்தனையோ வகைப்பட்டன. அவற்றுள் கற்பனைக் களஞ்சியம் என்று ஆன்றோரால் பாராட்டப் பெற்ற பெரும்புலவர் ஒருவரது கருத்து இக்கட்டுரையில் இடம் பெறுகின்றது.

தங்கள் கணவன்மார் பிற மாதரை மனத்தாலும் நினைக்கக் கூடாதென்ற மனப்பான்மையுடையவர்கள் பெண்கள். இலங்கா பட்டினம் பூராவும் தேடியலைந்து சீதையைக் காண்கின்றான்,

அநுமன்; ஆனந்த மிகுதியால் குதித்துக் கூத்தாடுகின்றான். பிராட்டியார் சிறந்த மாமியர் மூவர்க்கும், இளையவர்க்கும் சொல்ல வேண்டிய வழிபாடுகளை யெல்லாம் சொல்லிக் கடைசியாக இராம பிரானிடம்

> "இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச்
> சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம்
> தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்"

என்று உரைக்கின்றார்.

மனிதரும், தேவரும், மாயா முனிவரும், கமலாலயனும், மதியுறுவேணி மகிழ்நனும் மாலும் என்றும் வணங்கும் துதியுறு சேவடியாள் ஆகிய கன்னி பார்வதி தேவியும் இந்த விதமான மனப்பான்மைக்கு விலக்கல்லள், என்பது வியப்பாக இல்லையா?

பகீரதன் பல ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தான். கங்கா தேவி பூலோகத்துக்கு வரச் சம்மதித்தாள். "நில்லாத நீர் தலைமேல் நிற்பித்தானை" என்பது திருத்தாண்டகம். ஆற்றைப் பெண்ணாக உருவகித்துரைக்கும் கவிமரபுப்படி, கங்கையாறு இங்கு கங்கை நங்கையாகக் காட்டப் பெறுகிறாள். ஆனால் அவள் விண்ணுக் கடங்காமல், வெற்புக் கடங்காமல், மண்ணுக் கடங்காமல் குபுகுபு என வந்தாள். சிவபெருமான் அவளைத் தன் சடா மகுடத்திலே அடக்கினார். சிறிய ஒரு வீட்டில் நாம் குடிபோனாலே எத்தனையோ ஆர்ப்பாட்டம் செய்கிறோம். அயன வனும், மாலவனும் அறியா வண்ணம் ஆரழலாய் நீண்டுகந்த அண்ணலின் சடை முடியே தனக்கு நிரந்தர இருப்பிடமாய்க் கிடைத்த கங்கா தேவி சும்மா இருப்பாளா? திங்கள் தங்கும் சடையின் மேல் வெண்திரைகள் புரள வீசிக் கங்கையாள் ஆர்ப்பாட்டம் செய்தாள்.

அப்பர் சுவாமிகள் வேலை நஞ்சுண்டு ஊன மொன்றில்லாத ஒருவர்க் காட்பட்ட உத்தமர். "நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்," "அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை" என்ற மனப்பான்மை யுடையவர். வங்கமலி நாகைக் காரோணத்துக்குச் சென்றார். எம்பிரானின் தலையில் இருக்கின்ற கங்கையைக் கண்டார். கங்காதேவியைச் சடையில்

தரித்திருப்பதை உமைநங்கை அறியில் பொல்லாங்கு விளையுமே என்று வருந்தியவராய் ஈசனிடம்,

“வங்கமலி கடல்நாகைக் காரோணத்தெம் வானவனே
எங்கள் பெருமானோர் விண்ணப்ப முண்டது கேட்டருளீர்
கங்கை சடையுட் கரந்தாய் அக்கள்ளத்தை மெள்ளவுமை
நங்கையறியிற், பொல்லாது கண்டாய் எங்கள் நாயகனே”

என்ற விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்.

அப்பரின் விண்ணப்பத்தைக் கேட்டும் எம்பெருமான் கங்கா தேவியைச் சடை முடியிலிருந்து விடுவித்தாரில்லை. புவனம் பதினான்கையும் பூத்த வண்ணம் காத்தவளான பார்வதி கங்கையின் ஆரவாரத்தால் எம்பிரானின் கள்ளத் தன்மையை மெல்ல அறிந்தாள். வவ்விய பாகத் திறைவனோடு மகிழ்ந்திருக்கும் வேளையில், சுவாமி, “உமது முடியில் வாழ்கின்ற மங்கை யார்?” என்று இறைவி கேட்டாள். அது மட மங்கை அல்ல, வெண் திரை கொழித்து, அழகும், குளிர்ச்சியும் பொருந்திய ஆறு, என்றார் சிவன். பெண்களுக்குக் கவனித்துப் பார்க்கின்ற சக்தி அதிகம். அம்மை சிவபெருமானிடம், ‘ஆற்றுக்குத் தூய ஒளி பொருந்திய முகமும், கரிய விழியும், காதும் வாயும் உண்டோ’ என வினவினாள். இறைவன், ‘நீ பார்த்தது முகமும், கண்ணும், காதும், வாயுமில்லை. ஆனால் முகம் போன்ற தாமரையும், கண் போன்ற குவளைப் பூவும், காது போன்ற வள்ளைக் கொடியும், வாய் போன்ற செவ்வல்லி மலரும்’ என்றார். தேவி திருப்தியடையாது பொய்யென்று நினைத்து தண்ணீருக்குத் தனபாரமும் கூந்தலும் உண்டோ? என்று வினவ, அரன், அவை நீர்க்குமிழியும் பாசியும் ஆகும். இதையும் நீ மறுத்துக் கூறுவாய் பெண்ணே’ என்றார். தலையில் தரித்த கங்கை அரன், தன்னைக் கூப்பிடுவதாய் நினைத்து “ஏன்” என்றாள். இதற்கு மேலும் தன் கள்ளத் தனத்தை மறைக்க முடியாது என்று அறிந்த சிவன், நாணித் தலை குனிந்து “என்றன் பிழை பொறுத்திடு” என்று அம்மையிடம் கேட்டுக் கொண்டார்.

மேற் சொன்ன கற்பனைக் காட்சி சிவப்பிரகாச சுவாமிகள் பாடியருளிய ஒரு பாடலில் அமைந்துள்ளது. இப்பொழுது அந்தப்பாட்டைப் பார்க்கலாம்.

'ஐய! நின் சென்னிமிசை உறைகின்ற மடமங்கை
யார்?'என்ன உமை வினவவும்,
'அன்னதுஒரு மடமங்கை அன்று; வெண்திரை கொழித்து
அழகுஒழுகு தண்புனல்' எனத்,

'துய்யஒளி ஆனனம் கரிய விழி காதுவாய்
தோயத்தில் உண்டோ?' எனச்,
'சொல்லரும் கமலமலர், காவிமலர், கொடிவள்ளை
தூய செங்குமுதம்' என்னப்,

'பொய்யென' நினைத்து 'நல் கொங்கையும் கூந்தலும்
புனலின் இடை உண்டோ?' எனப்,
'புற்புதம் சைவலம் அது எனவே மறுத்துப்
புகன்றிடுதி நங்காய்' எனத்,

தையல் அவள் 'ஏன்' என்ன, நாணொடு வணங்கி, 'எந்
தன்பிழை பொறுத்திடு' என்றே
சங்கரன் உரைத்திடத் திருவுள மகிழ்ந்தசிவ
சங்கரி உமைக் காக்கவே.

திருநாகைக்காரோணம்

தேவாரமணி, திரு. சட்டையப்பன் அவர்கள்.
திருப்பனந்தாள்.

நாகப்பட்டினம் என வழங்கும் இத்தலம், சோழநாட்டின் காவிரியின் தென்கரைத் தலங்களில் எண்பத்திரண்டாவது தல மாகும். மாமரத்தைத் தல விருட்சமாகக் கொண்டதும், தேவ தீர்த்தம் புண்டரீகத் தீர்த்தங்கள் ஆகியன வற்றையுடையது மான இத்தலம் விடங்கத் தலம் ஏழனுள் ஒன்ருகும்.

திருவாரூர், திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக் காருயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு என்னும் ஏழு தலங்களும் 'சப்தவிடங்கத்தலம்' என்பதாகும்.

நாகைத்தல விடங்கர், சுந்தர விடங்கர், அவருடைய நடனம் 'பாரா வார நடனம்' எண்டோள் 'வீசிநின்ருடும் பிரான்' இவரோ!

புண்டரீக மகரிஷியைக் காயத்தோடு ஆரோகணம் செய்து கொண்டதால் 'காயா ரோகணேசர்' எனும் நாமம் பெறுகின்ருர் இத்தலத்துறைகின்ற இறைவன். இறைவியின் பெயர் 'நீலாய தாட்சி.' இந்தப்பெயரைக் 'கருந்தடங்கண்ணி' என்று பேசுகின் ருர் அப்பரடிகள்.

இத்தலத்துப் பதிகங்கள் ஞானசம்பந்தப்பெருமான் அருளிச் செய்த 'குறிஞ்சிப்பண்' 'செவ்வழிப்பண்' ஆகியன இரண்டும், அப்பரடிகள் அருளிச் செய்த 'திருநேரிசை' 'திருவிருத்தம், 'திருக்குறுந்தொகை' 'திருத்தாண்டகம்' ஆகியனவும், சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிய 'கொல்லிக் கௌவாணம்' என்னும் பதிகத்தினையும் கொண்டு விளங்குகின்றன. முதல் திருமுறை யிலிருந்து ஆருவது திருமுறை வரை-இடையில் மூன்ரும் திரு முறை மட்டுமேயில்லை. எனினும் மூவரது பாடலும் பெற்ற தலம்

என்று எண்ணிக் கூறப்படும் தலங்களிலே இந்த நாகைக் காரோணம் ஒன்றாகும். மூவர் பாடல் பெற்ற தலங்கள் நாற்பத்து நான்கு என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானிடம் பதிகம் பாடிப் பொன் பெற்றத் தலங்கள் ஆறு. அவை திருமுதுகுன்றம், திருமுருகன் பூண்டி, திருப்புகலூர், திருவோணகாந்தன் தளி, திருப்பாச்சிலாச்சிராமம், திருநாகைக் காரோணம் என்பன.

'பத்தூர் புக்கிரந்துண்டு' எனத் துவங்கிக் காரோணத்து ஈசனைக் கசிந்துருகிப் பாடும் பதிகமானது எல்லா நலனும் அளிக்க வல்லது என்பது துணிபு.

'வாட்டமெல்லாம் தீரக்கட்டி எமக்கு ஈவதுதான் எப்போது? சொல்லீர் !' என்றுசுந்தரர் கேட்கும் நயம்

"மற்றைக் கண்தாரா தொழிந்தால் வாழ்ந்துபோதிரே"

என்ற சொல்லையும் நினைவுபடுத்துகின்றது.

முத்தாரம், மணி, வயிரம், கஸ்தூரி, கமழ்சாந்து எல்லாம் கேட்ட வன்றொண்டர் திருவீழிமிழலையில் அப்பர்—ஆளுடைப் பிள்ளைக்கு அளித்தது போல் காசும் அருள வேண்டுமென்று கேட்கிறார். அதோடுவிட்டாரா? 'காற்றனைய கடும் பரிமா ஏறுவதும் வேண்டும்' என்றும் கேட்டார். வேண்டியபடி கிடைத்து, பெற்றுக் கொண்டார். சுந்தரர்க்குக் குதிரை வாகனம் நடத்தப்பெறுவது இன்றும் உண்டு என்றால், அவர் கேட்டுக் கொண்ட விருப்பமேயாம். நயத்துக்குச் சுந்தரனாரல்லவா!

"விரிதிரை சூழ்கடல் நாகை அதிபத்தற்கடியேன்"

என்று ஓர் அடியாரை அவர் கூறுகின்றார்; திருத்தொண்டர் களைத் தொகையாக விளக்கிக் காட்டிய பேராளர் சுந்தரர்.

திருத்தொண்டர் புராணத்திலே விரவி வருகின்ற அடியார் களில் முப்பது பேர்கள் சிவலிங்க வழிபாட்டைச் செய்து முத்தி யடைந்தவர்கள்.

அப்படிப் பேறடைந்தவர்களிலே ஒருவர் அதிபத்த நாயனார். இந்த அடியார் தோன்றிய பதியினை விளக்கும் சேக்கிழார் பெருமான்,

"மன்னி நீடிய செங்கதி ரவன்வழி மரபின்
தொன்மை யாம்முதற் சோழர்தம் திருக்குலத் துரிமைப்
பொன்னி நாடெனும் கற்பகப் பூங்கொடி மலர்போல்
நன்மை சான்றது நாகப்பட் டினத்திரு நகரம்"

என்று பெருமையுடன் பேசுகின்றார்.

மேனிலை வாழ்வுடைய அன்றைய நானில மக்கள், ஆருயிரைப்போலப் போற்றினர் ஒழுக்கம் எனும் பண்பாட்டை! அதைத் திணையென்னும் பெயரால் கூறினர்—வகுத்தனர்.

காடும் காடுசார்ந்த இடமும் முல்லை; இதற்குரிய தெய்வம் திருமால். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி; இதற்குரிய தெய்வம் முருகன். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம்; இதற்குரிய தெய்வம் இந்திரன். கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல்; இதற்குரிய தெய்வம் வருணன்.

நீரோ, நிழலோ இல்லாத இடம் எதுவோ அதுதான் பாலை; இதற்குரிய தெய்வம் கொற்றவை (காளி).

"முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற்றிரிந்து
நல்லியல் பிழிந்து நடுங்கு துயருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்"

என்ற சிலப்பதிகார அடிகளால் பயனுள்ள விளைச்சல் அற்ற இடமான பாலை நிலத்தை யறிய முடிகின்றது.

முல்லை நிலத்தார் இடையர் என்றும், குறிஞ்சி நிலத்தார் குறவர் என்றும், மருத நிலத்தார் 'வெள்ளாளர்' வேளாளர்' என்றும், நெய்தல் நிலத்தார் நுளையர் (பரதவர்) என்றும் பெயர் பெற்றனர்.

'வருணன்மேய பெருமணல் உலகம்' எனத் தொல்காப்பியர் கூறுவதில் 'கடல்' தெய்வமாகக் கருத வைத்த சிறப்புத் தோன்றுகின்றது. அது 'வருணனை' என்பது விளங்கும்.

'ஆழிகடலரையன்' எனும் சுந்தரர் சொல்லாட்சியில் அடங்கியது 'வருணன்' என்பது இங்கு எண்ணவுரியது.

கடல் நிலத்திலே வாழுகின்ற பரதவர்களுக்கு வலை வளம் தப்புகின்றது; அப்படியுள்ள போது அந்த இனத்து மகளிரெல்லாம் சுற்றத்தாருடன் கூடிச் சுறுமீனின் கோடு நட்டுப் பரவுக்

கடன் கொடுப்பார்கள் என்று அகத்திணையிலே வருகின்ற நச்சினார்க்கினியரது கூற்றிலிருந்து தெரிந்து கொள்ளும் செய்தியாகும்.

அந்த வழிபாட்டிலே சுறுமீனின் கொம்பிலே கடல் தெய்வம் 'ஆவாகனம்' செய்யப்படுமென்ற கருத்தைப் பட்டினப்பாலை மிக அழகுடன் சொல்லுகின்றது.

கடைச் சங்க காலத்துக்கு முன்னால் பாண்டிய நன்னாட்டை ஆண்டான் 'பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி; இவன் கடல் தெய்வத்துக்குப் பெரியதோர் விழா எடுத்தான். தமிழகமெங்கும் பாராட்டப்பெற்ற அந்த விழாவை நெட்டிமையார் என்ற புலவர் 'முந்நீர் விழவின் நெடியோன்' என்று பாராட்டுகின்றார்; அதைப்புற நானூறு புகலும்.

இவ்வித தெய்வ வழிபாட்டிலே சிறந்துநின்ற பரதவர் குலத்திலே உதித்தவர் அதிபத்தர். இளம்பிறையைச் சூடியிருக்கும் சிவபெருமானுக்கு அடித்தொண்டு செய்யும் அதிபத்தரை 'மனை வளம் பொலிநுளையர்தம் குலத்தினில் வந்தார்' என்று அறிமுகப்படுத்துகின்றார் தொண்டர் சீர்பரவும் சேக்கிழார் பெருமான்.

அதிபத்தர் கடலிலே மீன் பிடிக்கும்போது முதல் மீனைச் சிவபெருமானுக் கெனக் கடலில் விட்டு விடுவார். இப்படி அன்றாடப் பழக்கத்தில் ஒரு நாள்—ஒரே ஒரு மீன்தான் கிடைத்தது; அதையும் அச்சிவனுக்கே அர்ப்பணம் செய்து வந்தார். பல நாட்கள் ஒரே மீன்தான் கிடைத்தது. அதனால் உணவின்றி அவர் குடும்பம் வாடிற்று. மனந்தளராத அவர் கிடைக்கின்ற அந்த ஒரே மீனைச் சிவனுக்கே அளித்துவந்தார். இப்படி நாட்கள் ஓடியபோது ஒருநாள், வலையிலே 'பொன் மீன்' ஒன்று அகப்பட்டது. அதன் வண்ணத்தையும் — புதுமையையும் கண்ட அவர் அதையும் பெருமானாய சிவனுக்கே விட்டுவிட்டார். அப்போது சிவபெருமான் இடபாருடராகிக் காட்சியளித்தார்; அதிபத்தர் கை தொழுது மேலாம் சிவகதியடைந்தார். அதிபத்த நாயனாரின் வரலாறு பரதவக் குலத்துக்கு மட்டுமின்றிப் பரந்த இவ்வுலகுக்கும் நன்னெறி காட்டி உய்விப்பதாகும்.

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உரை நடை

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 15. இதழ் 11-ன் தொடர்ச்சி)

தையல் நாயகி

குழைய டர்ந்துவடி கணைது ரந்துசெறி
குமிழ்ம றிந்தவிழி நவ்வியைக் கோட்டொடு
குவடெ றிந்தமுத கலசம் வென்றதட
முலைசு மந்தமலை வல்லியைச் சேற்றுளிர்
குமுதம் விண்டசுவை யமுத முண்டினிய
கொழுநர் கொஞ்சுசிறு கிள்ளையைத் தாட்டுணை
குறுகு தொண்டர்பிழை யறம றந்துபிறர்
குணமி கழ்ந்ததக வில்லியைச் சேட்செலும்

எழுபெ ரும்புவன முழுதொ ருங்குதவும்
இறைவி யென்றுமறை கையெடுத் தார்க்கவும்
இடைநு டங்குமட நடையி ளங்குமரி
எனவி ருந்தகன கள்வியைப் பூத்தவென்
இதய புண்டரிக மலரி லெந்தையொடும்
இனித மர்ந்தவொரு செல்வியைப் பாற்றுகும்
இருவர் கண்கள்கது வரிய செஞ்சுடரின்
இடம ருங்குடைய தையலைப் போற்றுதும்

முழுது ணர்ந்துமுணர் வரிய தொன்றையொரு
மொழியின் விண்டசிறு பிள்ளையைச் சூர்ப்பெயர்
முதுப ழம்பகையை யறவெ றிந்தவுணர்
முதற டிந்ததனி வில்லியைப் பாட்டளி

முரல விண்டதரு நிழலெ ரும்புகுடி
புகவ ழங்குகொடை வள்ளலைப் போற்றடி
முடியு மின்றிவெறு வெளிக டந்துமறை
முடிவி னின்றுநிறை செல்வனைக் காத்தொறும்
மழலை வண்டுதட மலர்கு டைந்துபுது
மதுவ ருந்திநறு மல்லிகைச் சேக்கையின்
வடிப சுந்தமிழி னிசைப யின்றபெடை
யொடுது யின்றினிய செவ்வழிப் பாட்டினை
வருவி பஞ்சிபயி றரும தங்கர்தெரு
மரமு ரன்றுநெடு வைகறைப் போய்ச்செழு
மலரி லஞ்சிதொறு முலவு கந்தபுரி
மருவு கந்தனையெ மையனைக் காக்கவே. 4

கலைகள் அனைத்தையும் உணர்ந்தும் உணர்வரியதான பிரணவப்பொருளை ஒரு சொல்லிலே சிவபெருமானுக்குச் சொல்லிய சிறு பிள்ளை வடிவங் கொண்டவனை-சூரன் என்னும் பெயரை யுடைய பழம் பகைவனை அழிந்து போகும்படி வேல் கொண்டு எறிந்து அசுரர் குலத்தை ஒழித்த ஒப்பற்ற வில்லாளியை - இசை பாடுகின்ற வண்டுகள் முரல அதனுல் பூக்கள் விரிந்த கற்பகம் முதலிய மர நிழல்களில் அடியவர்களான தேவர்கள் குடிபுகும் படி வழங்கிய கொடைவள்ளலை - போற்றுதற்குரிய அடியும், முடியும் இன்றி வெறு வெளிக்கு அப்பாற்பட்டு வேதங்களின் முடிவில் நின்று நிறைந்துள்ள செல்வனை-சோலைகள் தோறும் இளமையான வண்டுகள் பொய்கைகளிலுள்ள பூக்களைக் குடைந்து புதுத் தேன் மாந்தி மணமிக்க மல்லிகைப் படுக்கையில் தங்கி வடித்தெடுத்த பசுந்தமிழின் இன்னிசையைப் பயின்ற பெட்டை வண்டுகளோடு துயின்று இனிய செவ்வழிப் பாட்டை நல்ல வீணை பயிலுகின்ற பாணர்கள் வியக்கும்படி இசைத்து நீண்ட வைகறைப் பொழுதிலே போய்ச் செழுமையாகிய மலர் களையுடைய குளங்கள் தோறும் உலாவுகின்ற கந்தபுரியில் வீற்றிருந்தருளும் கந்தவேளை-எமது தலைவனைக் காக்க வேண்டு மென்று, காதுகள் வரை நீண்டு, வடிக்கப்பட்ட அம்புகளை வென்று, பொருந்திய மூக்கின் மேல் மறிந்துள்ள கண்களை உடைய மானை ஒத்தவளை-உச்சியுடன் கூடிய மலையைத் தாழ்த்தி அமுத கும்பத்தை வென்ற பெரிய கொங்கைகளைச் சுமந்த மலை

மகளை-சேற்றிலே விளங்குகின்ற குவளைப்பூவை ஒத்தஅதரங்கள் விண்ட சுவையமுதத்தை உண்டு இனிய கணவராகிய சிவபெருமான் கொஞ்சுகின்ற சிறிய கிளி போன்றவளை-திருவடித் துணைகளை அடைந்த தொண்டர்களது பிழைகளை அறவே மறந்து, தொண்டரல்லாதாரின் குணங்களையும் வெறுக்கின்ற நடுநிலை பிறழ்ந்தவளை-நெடுந்தூரத்திற் செல்லும் ஏழு பெரிய புவனங்கள் அனைத்தையும் ஒருங்கே பெற்றெடுத்த இறைவி என்று வேதங்கள் பாராட்டி முழக்கவும், இடை தளருகின்ற மட நடையை உடைய இளங்குமரி என இருந்த மேலான கள்வியை-மலர்ந்திருக்கின்ற எனது மனத்தாமரை மலரில் எந்தையாகிய சிவபெருமானோடும் இனிதமர்ந்திருக்கின்ற ஒப்பற்ற செல்வியை பக்கத்திலே உள்ள திருமாலும் பிரமனுமாகிய இருவர் கண்களுக்கும் எட்டாத செஞ்சுடரான சிவபெருமானது இடப் பாகத்தைத் தனது வுடமையாகப் பெற்ற தையல் நாயகியைப் போற்றுவோமாக.

கற்பக விநாயகர்

கடாமுமிழ் கைக்கதக் கிம்புரிக் கோட்டொரு
கராசல மிட்டமெய்க் கஞ்சுகிக் கேற்பவொர்
படாமணி மத்தகத் தந்தியைத் தீர்த்தர்கள்
பராவரு கற்பகக் கன்றினைப் போற்றுதும்
வடாதுபொ ருப்பினிற் றுன்றுபுத் தேட்கெதிர்
மனோலய முற்றமெய்ப் பண்பினைக் காட்டிய
சடானன னைத்தலைச் சங்கம்வைத் தாற்றிய
சடாயுபு ரத்தருட் கந்தனைக் காக்கவே. 5

மேரு மலையை நெருங்கியிருந்த தேவர்களுக்கு எதிரே மனோலயம் முற்றும்படியாகத்தமது உண்மை இயல்பினைக்காட்டியருளிய ஆறு முகங்களை உடையவனை-தலைச்சங்கம் வைத்துத் தமிழாராய்ந்த சடாயுபுரத்திலே எழுந்தருளியுள்ள அருள்மிக்க கந்தவேளைக் காக்க வேண்டுமென்று மதம் ஒழுகுகின்ற துதிக்கையை உடைய பொற்பூணிட்ட கொம்புகளைக் கொண்ட ஒரு யானை அளித்த உடற்சட்டையை அணிந்த சிவபெருமானை ஒப்ப, ஒப்பற்ற முகபடாத்தை அணிந்த மத்தகத்தை உடைய யானையை-மேலோர்கள் ஏத்துகின்ற கற்பகவிநாயகப் பெருமானைப் போற்றுவோமாக.

பிரம தேவர்

பைங்காற் கமுகு செம்பழுக்காய்ப்
பவள முதிர்ப்பக் கதிர்ச்செந்நெல்
பனிமுத் துகுக்குஞ் சோணாட்டின்
பரிசு பாடி ஞிமிறிரைப்பக்
கொங்கார்த் திறைக்கு நறைக்காந்தள்
குறிஞ்சி மலரோ டணிந்தநறுங்
குஞ்சிப் பெருமாள் வேதபுரிக்
குமரப் பெருமா டனைக்காக்க
செங்காற் கருங்கட் பைந்தொடியார்
சிற்றூய்ப் பாடிப் பெருங்குடியில்
தீம்பா றிருடிக் கட்டுண்டு
திரியா வண்ணந் திருத்தாதைக்
கங்காப் படங்கப் பாறயிர்நெய்
அருந்தேன் கடலோ டிருந்துண்ண
அகிலம் படைத்துத் தன்க்கேற
அன்னம் படைத்த பெருமாளே. 6

சிவந்த பாதங்களையும் கருமையான கண்களையும் பசிய வளையல்களையும் உடைய பெண்கள் வாழுகின்ற சிறிய ஆயர் பாடியிலுள்ள பெருங்குடி மக்களின் இல்லங்களில் சுவைமிக்க பாலைத் திருடி அவர்களால்கட்டப் பெற்று வருந்தா வண்ணம் தனது தந்தையாகிய திருமாலுக்கு உண்ணுதற்காக வாய் திறப்பது அடங்கும்படி பாலையும் தயிரையும் நெய்யையும் அருமையாகிய தேனையும் கடலோடு இருந்து உண்ண இந்த உலகத்தைப் படைத்துத், தான் ஏறி ஊருவதற்காக அன்னத்தைப் படைத்துக் கொண்ட பெருமாளாகிய பிரமதேவன், பசிய அடிப் பகுதியையுடைய கமுக மரம் சிவந்த பழுக்காயாகிய பவளத்தை உதிர்க்க, கதிர்களை உடைய செந்நெற்பயிர்கள் குளிர்ந்த முத்துக்களைச் சொரிகின்ற சோழ நாட்டினது நல்லியல்பைப் பாடி வண்டுகள் ரீங்காரம் செய்ய நறுமணத்தை அள்ளி வீசுகின்ற தேன் சொரியும் காந்தப் பூக்களைக் குறிஞ்சிப் பூக்களோடு சூடி உள்ள நல்ல திருமுடியைக் கொண்ட தலைவனை-வேத புரியில் எழுந்தருளியுள்ள குமரப் பெருமானைக் காப்பாற்றுவானாக.

(தொடரும்)

HE FEARED CALUMNY.

Thiru. E. S. Varadharaja Iyer Avargal,

Poona.

A Brahmin from Tiruppattur was wending his way to Madura, the Pandyan Capital with his wife and only child. On the way, he rested for a while under a big banian tree. The wife felt very thirsty and so the Brahmin went to a pond near by to fetch water. In the meantime a missile that lay lurked in a branch of that tree dropped down by the action of the wind and pierced right through the breast of that lady who lay asleep, killing her on the spot. The Brahmin returned, only to find his wife defunct immersed in a pool of blood. Quite non-plussed, he went round the tree and met a hunter with bows and arrows in his hand. He at once thought that it was he who had committed the dastardly act of murdering his better-half and immediately asked him to accompany him to the Pandyan Capital. The huntsman pleaded innocence, but, when he saw that the Brahmin stood unconvinced, quietly followed him. The Brahmin with the dead wife in his arms and the child went to the palace gate and raised a hue and cry accusing the King for his misrule. He told him that never in the annals of the Pandya Soverign was such a terrible act perpetuated and that he was surprised to witness such a heart-rending event during his beneficent rule. He further pointed out to the ruler, however when the kings were asleep their sceptre or authority used to move about keeping guard over the peace of the realm and that such a terrible occurcnce especially during his benign adminstration was quite ununderstandable.

The Pandya king listened to his words and asked the hunter to tell him what actually took place. The hunter replied that he was not responsible for the woman's death. The king, however took him for a culprit, gave him severe flogging, and incarcerated him. The hunter repeatedly pleaded not guilty. Thereon the King who listened carefully to his persistant statements and who was struck by the innocence that was perceptible in the hunter's face and look, stood completely bewildered and unable to come to any decision, prayed to his guardian deity Lord Soma Sundara of Madura and implored him to tell him whether the hunter himself was the real assasin or any other body. Down came a reply as if from the air, directing the Pandya to proceed at nightfall to a wedding in the Vaisya street. if he wanted to know the real truth. The King did as he was bid, hurried to the street and stood near the marriage house. Here he overheard the conversation that ensued between two people who were seated on a branch of the tree. Both of them were the agents of Yama the god of death and the ruler of the south. One of them asked his companion, how they could carry out the express mandate of their master and do away with the life of the bridegroom who was completely hale and healthy and who was absolutely free from any kind of malady, observing at the same time that they never used to kill anybody without any specific reason or pretext. His friend told him that it was a very easy affair after all and that there was no need to worry. Here he narrated the banian tree incident, above mentioned and told him 'Did we not direct the arrow that lay hidden in one of the branches of that tree, towards the breast of the Brahmin woman

and put an end to her life? Likewise we should seat ourselves in the horns of the wild cow which yielded a calf quite recently and which stood untetherd, and hit at the bridegroom putting an end to his life, The other man was quite pleased with his suggestion. All on a sudden in the babel noise produced by the drums as well as the eclat of the men and the womenfolk assembled there, the cow got infuriated, rushed towards the bridegroom hitting him with its horns and causing his death. Alas, the bridegroom was now the deadgroom the wedding drum was now the funeral drum, the felicitous marital songs of the women folk gave place to plaintive strains. Hence only those who will realise the instablity of body, youth and wealth can really derive the benefit from the body that has been given to them by the Creator in order that they may experience their karmas in this mundane world. The king who witneseed all that happened in mute surprise offered prayers to Lord Somasundara, released the hunter from the jail and offered rich sums to the Brahmin for marrying again. This is one of the sixty four sports narrated in the Tiruvilayadal Puranam, of Paranjothi Munivar.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 15, இதழ் 12-ன் தொடர்ச்சி]

உன்னைப்பிரிந்து மிந்த — ஊனுடம்பை வைத்துலவ
என்னைப் பணித்தனையீ — தென்விதியோ சற்குருவே 201

உன்முகத்தைக் காணு — லுன்மத்தங் கொண்டலையு
மென்முகத்தைப் பாராத — தென்னற மோசற்குருவே 202

ஊன்புசிப்பை யுள்ளோ — ருடன்சேர வென்றென்னை
யேன்படைத்தா யிவ்வுலகி — லீதற மோசற்குருவே 203

கனவினினின் பொன்முகத்தைக் — கண்டபடி முன்போ
னனவினிலே கண்டுமகிழ் — நாளெது வோசற்குருவே 204

தப்படியாற் றற்போதந் — தன்னுற் செருக்குமெனை
யெப்படியில் வைப்பா — யிராமலிங்க சற்குருவே 205

உன்னைத் தெரிசித்தோர்க் — கூழில்லை யென்னுஞ்சொல்
லென்னைத் தள்ளிற்றே — விராமலிங்க சற்குருவே 206

உன்பேரருட் கருணை — யுண்டென்பா லென்றறிந்து
மென்பேதை நெஞ்சகத்தா — லேக்கமுற்றேன் சற்குருவே 207

உன்றுணை யுன்னைவிட — வோர்துணை நாயேற்கில்லை
நின்றுணை யென்னுமோ — நீதியுள்ள சற்குருவே 208

அன்பாம் பொருள்கொண் — டணையவந்தா லைவரதைத்
துன்பாரக் கொள்ளத் — துடித்தயர்ந்தேன் சற்குருவே 209

இப்பிறவி தன்னில்வரா — தென்று மழியாதவின்ப
மெப்பிறவி தன்னில்வரு — மென்னுடைய சற்குருவே 210

(தொடரும்)

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றியது.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்
மதுரையில் நிறுவப்பெற்ற அகண்டபாராயணத் திருமுறைநிதி, இன்னிசைத் தேவாரநிதி சார்பில்



ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவுநாள் 28-5-64 மதுரையில் நடைபெற்ற அகண்டபாராயண விழா:



8-4-64-ல் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்தில் ஆடிப்பாடும் தேவார நிகழ்ச்சி நடத்தியவர்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஓதுவார் திருமுறை ஆடல்மாமணி திரு. சட்டைநாத முதலியார் அவர்களும், தேவார இசைமணி திரு. சோ. முத்துக்கந்தசாமி அவர்களும்.

இந்நாளைய உலகமும், உய்யும் ஆறும்

சுவாமி பரமாத்மானந்தா அவர்கள்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மைலாப்பூர் – சென்னை,

உலக வாழ்வு, நன்றும் தீதும் கலந்த ஒரு கலவையாக, யாண்டும் போற் காட்சி யளிக்கின்றது. நன்று தீது, என்னும் இருவகை நூல்களால் நெய்யப்பட்ட ஓர் ஆடையனையது வாழ்வு; அவை யிரண்டும் ஒரு நாணயத்தின் இரு புறங்கள் போன்று அமைந்துள்ளன. வாழ்விலே ஊறியுள்ள நெடுங்கால நோயே தீது. எனினும் இந்நாளிலே அந்நோய் அச்சுறுத்தும் அளவிற்குத் தீவிரமாகி வருகின்றது. ஒவ்வொருவனிடத்தும் தன்னையே கருதும் இயல் கழிந்தபல ஆண்டுகளாகத் தலைவிரித் தாடி வந்தமையால், இன்று அடக்க முடியாத அளவிற்கு மீறி விட்டது. அது குடும்ப வாழ்வையும், சமூகத்தையும், நாடுகளை யும் மக்களினங்களையும் பாழ்படுத்தி வருகிறது.

எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும், மனிதனது அறவொழுக்கத்தைப் பேணி வளர்த்தற்குரிய சூழ்நிலையைக் குடும்பமே அளித்துவந்துள்ளது. குடும்பப் பெருமையிலுள்ள விழைவும், முன்னோர் மீது செலுத்தும் மதிப்பும், புண்ணியத்தை யும் நீதி வாழ்வையும் ஒழுங்கு படுத்தவும், சமூக வாழ்வை நல முறச்செய்யவும் உதவிய பெருஞ் சத்திகளாக விளங்கின. குடும் பத்தின் இன்ப வாழ்வு, அதன் அங்கத்தினர் ஒருவர்க்கொருவர் இயைந்து நடப்பதையே பொறுத்து நிற்கிறது; அது தன்னல மறுப்புக்குப் போதிய பயிற்சியை அளிப்பதாகும். அரசியல் துறையிலும் பெருந்தொழில் துறையிலும் பெரும் மாற்றங்களும் பிற நாடுகட்குச் சென்று குடியேறுதலும், மாதர் பொருளாதாரத் துறையில் சுதந்தரம் விரும்பலும் நிகழும் இந்நாளையிலே, இத்த கைய கேடு விளைக்கும் ஏதுக்களால் குடும்ப வாழ்வு நடைபெறு தலே மிக அரியதாகின்றது. இன்னும் மேம்பாடுற்ற மணப் பிணைப்பு வெறும் ஒப்பந்த அளவாகக் கருதப்படலும், வேண்டுங் கால் அதை முறித்துக் கொள்ளும் வசதி பெறலும் குடும்ப

வாழ்வைப் பெரிதும் சிதைத்தற்குத் தூண்டுகோல்களாக அமை கின்றன; இதன் பயனுக, குடும்ப நல்லியல்புகளையும், அவற்ருல் மனிதர் மேன்மை யெய்துதலையும் இழக்க நேரிடுகிறது.

சமுக வாழ்விலே, பொருள் தேடலே மனித வாழ்வில் மிகச் சிறந்த இடம் பெறுகின்றது. தற்காலத்தே மக்கள் மிக்க சிரத்தை காட்டுவது பொருளீட்டுதல் ஒன்றிலே; ஆதலின் பண் பாட்டையும் மேன்மையையும் பெறுதற்குப் பொழுது கிடைப்பது அருமையாகிறது. வாழ்க்கையின் முயற்சிகள் அனைத்தும் பொருளீட்டும் நோக்கத்திற்கு வசப்பட்டனவாகத் தோன்று கின்றன. இப்பழக்கம் நம்மிடம் ஊறியுள்ளமையின், அதன் அளவு மிஞ்சிய நிலை நமக்குப் புலப்படாதொழிகின்றது. ஆனுல் சமுக வாழ்வின் அடிப்படையை அது அழிக்கத் தொடங்கி விட்டது. பொருளீட்டுதலின் நோக்கம் இன்னதென்பதையே - மக்கட்குள் பண்பாட்டையும் இன்பத்தையும் பரப்புதலே அது என்பதை-புறக்கணித்து வருகிருேம்.

இத்தகைய தவருன செயலுக்குத் தத்துவ ஆதாரத்தையும் சில சமயம் நாடுகின்றனர். சமுக முழுவதின் முன்னேற்றம் அதிலுள்ள தனி மனிதர்களின் முன்னேற்றங்களின் கூட்டுத் தொகையே யாதலின், சுய நலனைப் பின்பற்றும் ஒவ்வொரு வனும் அனைவருடைய நலனையும் முன்னேறச் செய்கிருன் என் கின்றனர். "சுய நலனைப் பின்பற்றுவதில், வேறெதனையும் கருதிப் பின்வாங்காது முனைந்து நிற்றலே மனிதனது கடமையா கின்றது; அறநெறிக்குத் தொழில் துறையல்லாத ஒரு தனித் துறையை வகுத்தல் வேண்டும்?' இத்தகைய தத்துவக் கொள்கை யின் பயனுக, மனித வாழ்விலே உலகியல் முன்னேற்றத்திற்கும் அறநெறிக்கும் உள்ள தொடர்பு வேரறுக்கப்படுகிறது. மனிதன் முன் ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரண்டு இலட்சியங்களை வகுக்கின்றனர். தனி வாழ்க்கையில் கடியத்தக்கது தொழில் துறையிலே மதிப்புப் பெறுகிறது. தனிமனிதனிடம் குறைகூறத் தக்கது ஒரு நாட்டின் சமுகத்திலே நீதிநெறியாகப் பேணவும் பல்லோராற் பாராட்டவும் படுகிறது.

மனிதனிடம் தன்னையே கருதும் நோக்கு உள்ளவரை, அவன் பிறரை நலிந்து தான் பயனடையவும், பிறரைத் தனக்

கெனப் பணிசெய்ய வற்புறுத்தவும் துணிவான். நாட்டுச் சட்டங்களைத் துணைக்கொண்டு, தன்னெடும் போட்டியிடுவாரை ஒடுக்குவான். அவன் பெரும் பொருள் குவித்து, தனக்கும் பிறர்க்கும் இடையே பெரும் இடைவெளியிருக்குமாறு வாழ்வான்; இதனுல் எல்லாச் சட்டங்களையும் அறநெறியையும் மிதித்து நசுக்கும் திறமையையும் பெறுகிருன். அரசாங்கத்தாரையும் தனது விருப்பத்தை நிறைவேற்றுமாறு கட்டுப்படுத்தவும் வல்லானுகிருன். உழைப்பாளிகள் முற்றும் அவனுக்கு வசப்பட்டு, அவனது அருளை எதிர்பார்த்து நிற்பர். இதுவே ஏறக்குறைய இன்றைய உலகத்தின் நிலைமை என்னலாம். மக்களின் தொகை பெருகுவதால், பிழைப்பு பெரும்பாடாக, உழைப்பாளி, குறைந்த கூலிக்கு வேலைசெய்யும் நெருக்கடி விளைகின்றது. ஆக, ஒருபால் செல்வம் குவிதலும், மற்றொருபால் அடிமைத்தனம் முறுகுதலும் விளைகின்றன. தமது பொருளையும் போகத்தையும் அன்றி வேறெதையும் பொருட்படுத்தாத பொருளாளர் இவ்வண்ணம் இழிதகையராகின்றனர்.

இது உழைப்பாளரது நெஞ்சிலே உறுத்த, அவர்கள் பழி தீர்க்க நினைந்து, பொருளாளரை எதிர்த்து நிற்கின்றனர். அவர்களும் ஒன்றுகூடித் தொழிலாளர் சங்கங்களை நிறுவுகின்றனர். தம் தேவைகளை வற்புறுத்திப் பெறுதற்காக "வேலை நிறுத்தம்" செய்கின்றனர்; ஆனுல் இம்முறை எப்போதும் வெற்றி தருவதில்லை. ஏனெனில் அரசாங்கத்தார் பன்முறையும் பொது நலன் கருதி, முதலாளியர்க்கு ஆதரவு காட்டுவாராக, உழைப்பாளிகளின் முயற்சி நொறுங்கி நசுக்கப்படுகிறது. ஆக ஏழை மக்கள் பொருளாளரது மாபெருஞ் செல்வாக்கினை எதிர்த்துச் சிறிதேனும் முன்னேற இயலாதவராகின்றனர். இதனுல் ஏழைகளின் உள்ளத்தே பகைமை கிளர, வலுவும் பழிதீர்க்கும் இயலும் செறிந்திருத்தலின் அன்னுர் இறுதியிலே சமூக வாழ்வு முறையையும் நாகரிகத்தையும் தலைகீழாக்கும் நிலையும் வரக்கூடியதாகின்றது.

இந்நாளைய பொறித் தொழில் முறையினுல் நன்மை விளைகிறதா, அது நீதி நெறிக்கு இயைந்ததா என்ற பொருள்கள் வழக்குக்கு இடந்தருகின்றன; இதன் பயனுக சம உரிமைக்

கொள்கை (Socialism) உலவிவருகிறது. இதன் நோக்கம் நீதிமுறை வழுவாத நிறைவுத்தன்மை பெற்ற ஒரு நாட்டைப் படைப்பதே; இதில் ஆளுகையும், சட்டமும், உயிர்வாழும் பொருட்டுத் தனிமனிதனது அரும்பாடும் வேண்டாதனவாம். பொருளுற்பத்தியிலே முழுக்கவனத்தையும் செலுத்துதலும், அதனைச் சமமாகப் பிரித்தளித்தலிற்,கவனமின்மையுமே சண்டை சச்சரவுகளுக்குக் காரணமாம் எனக் கருதப்படுகின்றது. பொது நல அரசியல் அதன் நிதிகள் இவை யிரண்டின் நிர்வாகத்திலும் பொது மக்களுக்கு முன்னினும் மிக்க பங்குவேண்டும் என்ற தேவையை சமவுரிமைவாதியர் ஆதரிக்கின்றனர்; கட்டுப்பட்ட நிலையினின்றும் சுதந்தர நிலைக்கு மனிதனை உயர்த்த வேண்டும் என்பது அவர்களது அவா. சமவுரிமைவாதிகளின் இத்திட்டம் சொத்துரிமையைத் தாக்குவதாகவும், முயற்சியாற் பெறுதலை அடக்குவதாகவும், முதலாளியர்க்குள் தன்னலமற்றவரும் கருதுகின்றனர்; சமுக வாழ்வின் நலனிற்கு ஊறு விளைக்கும் என்றும் அவர்கள் நினைக்கின்றனர். ஆதலால் சம உரிமைவாதியர் தொழிலின் முறிவுக்கு வழிதேடுவதாகவும், வகுப்புணர்ச்சியைத் தூண்டிச் சமுகச் சண்டை சச்சரவுகளை விளைப்பதாதவும் கருதப் படுகின்றனர். வாழ்வு செவ்வையாக வளர்ச்சியடையப் போட்டியும் போராட்டமும் இன்றியமையாதன என்பதை நிலைநாட்ட, விஞ்ஞானியரது பரிணமக் கொள்கையையும் மேற்கோளாகக் காட்டுகின்றனர். எனினும் சம உரிமைக் கொள்கை தலையெடுத்து வருகின்றது, வெற்றிபெறுதற்குரிய விதியையும் பெற்றுள்ளதாகத் தோன்றுகின்றது. ஆனால் பாமரரது சமவுரிமை நாகரிகத்திற்கே ஆபத்து விளைக்கும் இந்நிலையிலே உய்யும் வழியாவது, உயர்வகுப்புகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையே உள்ள பெரும் பிளவினை நீக்கி, இருதிறத்தாரையும் இணைத்தலே எனத் தோன்றுகிறது.

தொகுதி வாழ்விலும் தன்னையே கருதும் இயல்பு தேசீய உணர்ச்சி யெனும் ஆடை யணிந்து, "வலிமையே நீதி" என்ற கருத்துக்கு முதன்மை யளித்து வருகிறது. தேசபக்தி, தேசப்பற்று என்னும் நிலைக்கு இழிதலின் ஒவ்வொரு நாடும் பிற நாட்டைக் கருதாதும் நீதியைக் கவனியாதும் தன் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுதலையே குறியாகக் கொள்ள

வேண்டும் என்ற மனப்பான்மை ஓங்கிவருகின்றது. இத்தகைய கருத்துக்கள் தலையெடுத்து வரும்வரை, பலநாடுகளும் ஒன்றோடொன்று போர் புரிதல் இன்றியமையாததாகும்; சமாதனம் என்பது வெறுங்கனவே யாகும்.

தன்னையே கருதும் இயல்பு இனப்பகையை மூட்டிப் பெருங் கேடு பயப்பதாகிறது; உதாரணமாக வெள்ளையர் கருப்பு மனிதரைப் புகைக்கின்றனர். வெள்ளையர் கருப்பு மனிதரது நாடுகளில் வாழ்ந்து வந்தது காரணமாகக் கருப்பு மனித இனம் மறைந்தமை பரிணாமக் கொள்கையின்படி முறையே யாகின்றது என்கின்றனர்; ஏனெனில் வயிற்றுப் பிழைப்புக்காக நேரும் முட்டுப்பாட்டில், கருப்பு மனிதர் மறைய வேண்டும்; அன்றேல் உயர்தர மக்களான வெள்ளையரின் கீழ்க் கூலிவேலை செய்ய வேண்டும்! இவை யெலாம் இயற்கையின் மாறவொண்ணாத நியதிகளாதலின், மன்னுயிர் நலவிழைவு எத்துணைய தாயினும், அவற்றைத் தடைசெய்யா என்று அறை கூவுகின்றனர்.

மக்களின் தொகுதி வாழ்க்கையிலே தன்னையே கருதும் இயல் இனத்தாரைக் கருதும் இயலுக்குப் பதிலாக அமரும் போதும், சமூக வாழ்விலே அதனால் வேறுபாடுகள் தலையெடுத்து வரவரப் பரந்து விரிந்து வருதலால் பொதுநல உணர்ச்சியும் அனுதாபமும் மறையும் போதும், நாகரிகம் கேடடைகிறது. சமூக முன்னேற்றத்திற்கும் காரிய வெற்றிக்கும் காரணமாவது இனத்தார்க்கென வாழும் பரந்த கொள்கையாயிருக்க, அதற்குப் பதிலாக சமூகவாழ்வும் தன்னையே கருதும் இயலுக்கு வசப்படும் போது, சமூகம் வெளி யுலகத்தினின்றும் தன்னைப் பிரித்து அடைத்து வைத்துக்கொள்கிறது. இந் நாளைய உலகிலே தன்னையே கருதும் இயல் மாபெரும் அளவிற்கு முதிர்ந்து வந்துள்ளமையின் நாகரிகத்திற்கு அழிவுறும் நிலை அணுகி வருகிறது; மக்களிடையே ஒருமைப்பட்டு வாழும் கருத்துக்கள் ஓங்கும் வரை, மனித முன்னேற்றம் தடைப்படும்; பிற்போக்கு விளைதல் தடுக்க வொண்ணாததாகும்.

தன்னலத்தைத் தன்னல மறுப்புக்கும், உலகியல் வாழ்வை ஞான வாழ்விற்கும் உட்படுத்தும் போதுதான் நாகரிக முன்னேற்றமும் சமூக நலனும் உறுதிப்படும். "பெயக்கண்டும் நஞ்

சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்'' என்ற பொய்யாமொழியின் கருத்தை மக்கள் சிந்தனை செய்தல் வேண்டும். போட்டியும் போரும் இறுதியிலே முன்னேற்றத் திற்கு முட்டுக்கட்டையிடும். பரிணும நியதிகள் – உயிர்வாழ் தற்குப் போட்டியும், தக்கது வாழ்தலும் – ஐயறிவுயிர்களாலாய விலங்குலகத்திற்கே பொருத்தமாம் ஆதலின், ஆறறிவுயிர் களாகிய மக்களின் வாழ்விற்கு இயையாதவையாம். இம்மனித வாழ்வை யுந்தும் பெருநோக்கம் தன்னலப் பெருக்கமல்லாது தன்னல மறுப்பே. மனித வாழ்விலே போர் நடப்பது அவனது இதயத்திலேதான்; விலங்கியலை அடக்கி அடிப்படுத்துதற்கும், கல்வியாலும் பண்பாட்டாலும் தன்னிடத்துள்ள தெய்வ இயலை வெளிப்படுத்தற்குமேயாம். நம்முள் குடிகொண்ட விலங்கியலை ஒழித்தல் பிறரை மாய்த்தலால் எய்தலாகாதது, ஞானவாழ்விலே முன்னேறுவதால் மட்டும் இயலுவதாகும். மனிதனிடத்து உறையும் தன்னல விழைவை அறத்தினல் கட்டுப்படுத்துதலும், ஆசைகளை மனச் சான்றினல் மட்டுப் படுத்துதலும், சொத்தின் உற்பத்தியும் பிரிவினையும் நீதிநெறிக்கியைய நிகழ்தலும்-இவை கைகூடாத வரை சமூகத்தின் நிலைபேறு நினைத்தற்கரியதாகும். அறநெறிச் சார்பு அற்றவழி, முன்னேற்றம் என வழங்குவது சமூகத்தின் அழிவிற்கே ஏதுவாகும். நாட்டு வாழ்விலே ஓர் உயர்ந்த நீதியாகிய குறிக்கோள் ஆட்சிபுரிய வேண்டும்; நாட்டின் ஆற்றல்கள் அனைத்தும் அதற்கு அடங்கியே வெளிப் படல் வேண்டும். நீதிக்குறிக்கோளின் உயர்வுக்கு ஏற்ப, சமூ கத்தின் பண்பாடும் உயர்வடையும். இது செயல் முறைக்கு ஒவ்வாததெனல் பிதற்றலே யாம். ஒவ்வொரு நாடும் வாழ்க்கை யிலே ஒரு குறிக்கோளை மேற்கொள்ள வேண்டும். அதன் முயற்சிகள் அனைத்தும் அக்குறிக்கோளோடு முரணுதவாறு அடங்கி நடைபெறுதல் வேண்டும். ஒரு குறிக்கோளை ஆய்ந் தெடுக்கும்போது துறவெனும் குறிக்கோளைப் புறக்கணித்தல் நாட்டிற்கு நன்றன்று. இக் குறிக்கோளின் மாண்பை உணரா மையே இக்கால உலகிலே காணும் மிகப்பெருங் குறையாகும். உண்மையான இன்பம் அறநெறியாலும் தன்னடக்கத்தாலும் விளைவதன்றிச் சிற்றின்ப நுகர்ச்சியாலன்று என்பதைத் துற வெனும் குறிக்கோளே நமக்குத் தெளிவுபடுத்தும். ''அறத்தான்

வருவதே இன்பம்; மற்றெல்லாம் புறத்த, புகழுமில". பிரம்ம சரியம் என்னும் குறிக்கோளின் பெருமையை உலகத்தார் முன்பு எடுத்துரைத்தல் வேண்டும்; முறையான ஐம்புல அடக்கமே தனிவாழ்க்கையிலும் நாட்டு வாழ்க்கையிலும் உள்ள போராட்டத் திற்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

ஒரு நாட்டின் ஜனத் தொகைக்கும் அதன் பொருள் வசதிக்கும் தக்க பொருத்தம் அமைத்துக்கொண்டாலன்றி, பிற நாட்டு மக்களின் நிலங்களைக் கொள்ளையடித்தற்கும் ஆங்கே குடியாக வாழ்தற்கும் அவசியம் இருந்தே தீரும். சமய உணர்ச்சி யும், தன்னடக்க வாழ்வும் மட்டும், தற்காலத்தே எங்கணும் காட்சி யளிக்கும் நிலம்பறிக்கும் இயல்புகளாகிய நோய்களைத் தீர்க்கும். ஜனத்தொகை பொருள் வசதிகளின் எல்லைக்கு மீரு திருக்கவேண்டி பாரத நாட்டுப் பண்டைய இருடியர் இல்லற வாழ்விற்கு ஓர் உயர்ந்த குறிக்கோளையும், அந்நிலையை எய்து முன்னும், அதற்கு அடுத்த நிலைகளிலும் பிரம்மசரிய நோன்பைப் பின்பற்றி வாழ்தலின் அவசியத்தையும் விதித்திருந்தனர். ஜனத் தொகை எல்லை மீருதிருத்தற்கும், அதனுல் கோரமான விளைவுகள் நேராமைக்கும் அவர்கள் கண்ட உபாயம் அதுவே யாகும்.

நிறைவுற்ற இல்வாழ்வின் பழைமையான குறிக்கோளைப் பின்பற்றி வாழ்ந்த மெய்யன்பர்களும் மெய்ஞ்ஞானியரும் தென் ஞட்டில் பலர் தோன்றியுள்ளனர். வடநாட்டிலே நூருண்டு கட்குச் சற்றுமுன்பு 'பன்மை யவதாரப் பண்பொடு' திகழ்ந்த ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரது இல்வாழ்வு உயர்வற உயர்ந்த குறிக்கோளாகக் கொள்ளற்குரியது. துறவிகட்கு வேந்தராய், தியாகத்திலும் தன்னடக்கத்திலும் நிறைவுற்றவராய் விளங்கிய அப்பெரியார் மனையறம் பூண்டு வாழ்ந்தனர். மனைவியரோடு வாழ்ந்த அவர் அந்த அம்மையாரை உலகியல் வாழ்விலும் ஞானவாழ்விலும் பயிற்றித் தம் கடமையை இயற்றியும், ஒரு வரை யொருவர் தெய்வமாகக் கருதிக் காமத்தையும் உடல் நினை வையும், கடந்தும் இறைபணி நின்றும், நீடு வாழ்ந்தனர். அவ் விருபெரும் ஞானச்செல்வரையும் பின்பற்றி வாழும் ஆண்களும், பெண்களும் சமுகத்திற்கு அறிவுச் சுடர்களாக அவிர்பவராவர்; இனம் பெருக்கலைக் குறைத்து, போட்டியையும் போராட்டத்தை யும் ஒடுக்குபவராவர்; இல்லங்களைத் தவச்சாலைகளாக்குபவராவர்.

"பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை, பிறந்து மண்மேல் இறக்கும் பொழுது கொடுபோவதில்லை, இடைநடுவிற் குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்தது" என்றெண்ணி, இரவலர்க்கும் அடியார்க்கும் ஈந்து மகிழும் பேற்றை மக்கள் விழைந்து பெறல் வேண்டும். இக்காலத்துப் பணப்பேய் பிடித்தாட்டும் பரிபவத்திற்கு இதுவே ஓட்டும் முறையாம். வாய்மையும், நேர்மையும், இறைவன் மீது குழந்தையியலுக்குரிய 'நம்பிக்கையும்-இவையே உலகிற்குச் சாந்தியை நல்குந்திறமுடையவாம்.

இன்னும், "வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின், விளங்கு பரம்பொருளே நின் விளையாட்டல்லால் மாறுபடுங் கருத்தில்லை, முடிவில் ஞானவாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா" என்ற பாட்டில் அடங்கிய சமய சமரச மனப்பான்மையும் அனைவர்க்கும் இந்நாளைய வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். மனிதனது உயிர்க்கும் உயிராய் இறைவன் திகழ்கின்றான்; பரமன்மீது அன்பைப் பெருக்கி, ஆங்காரந்தனையடக்கி, ஐம்புல அவாவினை எரித்து, அடங்கியுள்ள தெய்வத்தன்மையை வெளிப்படுத்தும் முயற்சியை ஒவ்வொருவரும் கடமையாக மேற்கொள்ள வேண்டும்; தற்போதம் நம்மிடம் ஒழியும்போது, சிவபோதம்தானே தலையெடுக்கும். எம்மனிதனுக்கும் இத்தகைய நிலையெய்தும் உரிமையும் விதியும் உண்டு. ஆதலின் எத்துணைத் தீயோனும் கையறு நிலையினை ஏற்க வேண்டா. மனிதனது இத்தகைய உரைக்கொணு மாண்பினை நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து முழங்க வேண்டும். அன்றியும் மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாடு அவனிடத்துக் கரந்து நிற்கும் தெய்வத்தன்மையை வெளிப்படுத்தும் அளவிலேதான் நிற்பது. ஆதலால் நிறத்தாலும், இனத்தாலும், ஜாதியாலும், கொள்கையாலும், வகுப்பாலும் வகுக்கும் வேறுபாடுகள் பொருளற்றனவாம், புரையோடியனவாம். அனைவரிடத்தும் உயிர்க்குயிராய்ப் பரம்பொருள் திகழ்தலாலே, எல்லோரையும் சமமாக நோக்கும் மனப்பான்மையைச் சிந்தனையின் மேம்பாட்டால் எய்த வேண்டும்.

ஆன்றவிந்தடங்கி மெய்யுணர்வு பெற்ற சீரிய காட்சியினர் தமது வாழ்வாலும் போதனைகளாலும் நிலைநாட்டியுள்ள மன்னுயிர்ப் பணியை எல்லோரும் இயன்றவரை மேற்கொள்ள

வேண்டும்; இது, பழகுவோர்க்கு மெய்யுணர்வை எய்துவிக்கும் திறன் வாய்ந்தது, பிறரது தகையை உயர்த்துவது; இன்னும் இறைபணி நிற்கும் நலனையும் தரவல்லது. அதுவே ஒருவன் தனக்கும், பிறர்க்கும் இறைவனுக்கும் செய்தற்குரிய கடமையை ஒருங்கே நிறைவேற்றும் உபாயமாகும். இறைவனுக்குச் செய்யும் பணியிலும், அடியார்க்குச் செய்யும் பணியிலும் ஈடுபாடு இருப்பது போன்று, மக்கள் அனைவரையும் இறைவனின் குழந்தைகளாகவோ, நடமாடும் கோயில்களாகவோ கருதி மன்னுயிர்ப் பணியில் முனைந்து நிற்றல் இந்நாளைக்குப் பெரிதும் ஏற்றதாகும். உலக மக்களின் உள்ளங்களிலே ஞானச் சுடர் விளக்கேற்றும் பேருக்கமும், பொது மக்கட்குப் பணிசெய்து பிறர்க்கென வாழும் பெருந்தகையைப் பூணுதற் பொருட்டுத் தனக்கென வாழும் தண்ணிய இயலை மாய்க்கும் பேரவாவும் எங்கணும், தலைதூக்கிச் சிந்தனையாளர் நடுவே பரவிவருகின்றன. இவை மக்களைப் பிரிக்கும் இடைச்சுவர்களைத் தகர்த்து, அன்புறவைப் பெருக்கும். எல்லா மனிதரும்-நல்லோரும் தீயோரும், மிக உயர்ந்தோரும் மிகத் தாழ்ந்தோரும் - ஆன்மாக்களாதலின் சமமே; புறவேறுபாடுகள் எத்துணையுவாயினும், ஒரே இறைவன் அனைத்துயிர்களிலும் எழுந்தருளியுள்ளான். இந்த ஒருமைக் கருத்தே மனிதர்க்குப் பணிசெய்யப் பெருந் தூண்டுகோலாகும். 'படமாடக் கோயில் பரமற்கொன்றியில், நடமாடக் கோயில் நம்பர்க்கங்கா, நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றியில், படமாடக் கோயிற் பகவற்கதாமே'. மன்னுயிரிலே இறைவன் எழுந்தருளியுள்ளான் என்று உணர்ந்து மன்னுயிர்க்குப் பணிசெய்தல் "மகேசுவர பூசை" யாகும். நமது ஒவ்வொரு நினைவும், சொல்லும், செயலும் எவ்விடத்தும் எஞ்ஞான்றும் எந்நிலையிலும் மகேசுவர பூசையாகுமாறு ஒழுகுவதே, நமக்கு, இப்பிறவியில் வாய்த்த அரும்பெறற்பேறு; இதுவே நமக்குப் பிறப்புரிமை; இதனை நுகரச் "சேரவாரீர் ஜகத்தீரே" என்று மெய்ஞ்ஞானியர் மக்கள் அனைவரையும் அழைக்கின்றனர். "மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு இல்லென்ப, தன்னுயி ரஞ்சும் வினை" என்னும் மறைமொழியை மனதிற் பதித்துக் கொள்வோமாக. இதுவே தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் உலகிற்கும் உய்யும் ஆறாகும்.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 15, இதழ் 12–ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

52. நன்றுநோற்கிலென்பட்டினியாகிலென்
குன்றமேறியிருந்தவஞ்செய்யிலென்
சென்றுநீரிற்குளித்துத்திரியிலெ
னென்றுமீசனென்பார்க்கன்றியில்லையே.

52. Why fast and starve, why suffer pains austere?
Why climb the mountains, doing penance harsh?
Why go to bathe in waters far and near?
Release is theirs, and theirs alone, who call
At every time upon the Lord of all.

(தொடரும்)

வேறொன்றும் வேண்டாம்

திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்
அண்ணுமலைநகர்.

நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றுவதைப் பாடுகிருர். தனியொரு பாணனே கூத்தனே இவ்வாறு இன்பத்திலும் துன்பத்திலும் இருப்பதைக் காட்டாமல் உலகமே இந்த இரண்டாட்டமாக இருப்பதைப் பாடுகிருர். ஆனுல் இந்த இரண்டு நிலையிலும் முருகனே விளங்கு கிருன் என்பதையும் கூடவே குறிப்பாகக் காட்டி விடுகின்ருர். "ஒளியின் உள்ளும் விளங்குகிருன்; இருட்டின் உள்ளும் விளங்கு கிருன்; இன்ப அன்பு விளையாட்டிலும் விளங்குகிருன். கொடிய வன்பிலும் விளங்குகிருன், அச்செவ்வேல் சேய் என்று கடவுளைப் புகழ்வது போலப் பாடி இந்த அழகிய உண்மையை நிலைநாட்டி விடுகின்ருர்.

இந்த இரண்டாட்டத்தில் சிக்கி அலையும் ஒருவனை நோக்கிப் பாடுகின்ருர் நக்கீரர். இது எல்லோருக்கும் ஒத்த நிலைமை யாதலின் உலகில் உள்ள எவருக்கும் ஏற்றதாகும். துன்பம் நீங்கி இன்பம் பெறுவது எப்படி? எல்லா இன்பமுமாகத் தோன்றும் அடிப்படையான இன்பம் தூய்மையானதொரு பெரும் பேரின்பமே. அதனை வீடு என்றும் மோட்சம் என்றும் எதிர் மறையாகக் கூறுவார்கள். துன்பமெல்லாம் நீங்கி மேலும் துன்பம் வாராதென்ற உறுதியான பாதுகாப்பிற் புகுகின்ற ஒரு நிலையாக அதனைப் புனைந்துரைப்பதும் உண்டு. பகைவர் கையில் சிக்கி வாடியவன் பெருவீரனுன அரசனைச் சரண் அடை கின்ருன். அடியுறை என்று அவன் திருவடிக் கீழ் விழுகின்ருன். ஆனுல் இந்தப் புகலிடங்கள் எல்லாம் நிலையானவை அல்ல. ஆதலால் இந்த அரசருக்கெல்லாம் அரசராக இருக்கின்ற நிலையும் அழியாது நிற்கின்ற நிலையும் வேண்டும். அரசர்கள் இன்ருெரு வெறுப்பும் நாளை ஒரு வெறுப்பும் காட்டித் திரி

பவர்கள். அவ்வாறில்லாமல் என்றும் நடுநிலையாகச் சரண் அடைந்தரைக் காக்கின்ற ஒருவர் வேண்டும். பேரின்பமயமான ஆண்டவனையே அவ்வாறு கூறி அவன் அடியுறைதலையே மோட்சம் என்று பாடுவது வழக்கம். மணிவாசகப் பெருமானும் "காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம்காட்டி, தாள் தாமரை காட்டித் தன்கருணைத் தேன்காட்டி" எனப் பாடுகிறாரென நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டுகிறார். அது சேவடி; இளமை மாறாது சிவந்து நிற்கும் தாமரை போன்று இன்பத்தேன் பிலிற்றி நிற்கும் சேவடி; நடுநிலைமையினின்றும் திரும்பாத செம்மையான சேவடி. ஆற்றுப்படை நூல்களில் பரிசில் பெற்றவனது சொல்லை நம்பிப் பரிசில் கொடுத்த தலைவனை நினைத்துப்போதலைப் 'படர்தல்' என வழங்குவது உண்டு. இங்கும் இத்தகைய சேவடியை நினைந்து செல்லும் நிலையை வற்புறுத்துகின்றார் நக்கீரர். பழங்காலத்தில் அப்படி நம்பிக்கையில் எழுந்த ஊக்கம் நிரம்பிய மனத்தொடும் புரவலனை நோக்கிப் பரிசிலாளர் போவார்களாம். "செம்மலுள்ளமொடு செல்குவீராயின்" என்று ஆற்றுப் படைகள் பாடும்.

எதை எதையோ நினைக்கின்ற உள்ளம் இந்தச் சேவடியை நினைத்தல் வேண்டும். அதுவே தலையாய மனம். பிரிந்து வாழ முடியாது என்கின்ற துடிதுடிப்போடு இருக்கின்ற ஊக்கத்தின் உயர்ச்சியே தலை சிறந்த உள்ளமாகும். அத்தகைய உள்ளம் உருவாகியதும் தீயன செய்ய அஞ்சும் மனப்பான்மை எழுகிறது. நல்லன செய்கின்ற குறிக்கோள் அந்த நிலையில் அவனது இயல்பாகி விடுகிறது.

ஆற்றுப்படையில் பரிசிலாளன் தன் வீட்டையும் நாட்டையும் விட்டுப் புரவலன் நாட்டிற்குச் செல்லுதல் வேண்டும். அவன் பழகிய இடத்தைப் பிரிந்து தலைவன் ஊரில் வாழப் போகின்றான். எனவே புலம்பிரிந்து உறையும் செலவு அங்கே எழுகிறது. ஆனால் பேரின்பத்தை நோக்கிச் செல்கின்றவன் எங்குமாய் நிற்கின்ற நிலையில் எங்கே போவது? எங்கே வருவது? இருந்தாலும் ஒரு மனமாற்றம் எழவேண்டும். இது வரையிலும் ஐம்புலன்களுக்கும் அடிமையாக் இருந்த நிலை மாற வேண்டும். எனவே இங்கேயும் ஐம்புலத்தின் நின்றும் பிரி

கின்ற பிரிவு உண்டு. அவற்றை அடக்கி ஆள்கின்ற நிலையில் புகுகின்ருன். இந்த நிலையிலிருந்து அந்த நிலையிற் உறைந்து நின்று விடுகின்ருன். அங்கேயே அந்த அப்பாற்பட்ட நிலையிற் செல்வதுதான் அங்கே புலம்பிரிந்து உறையும் செலவு.

மூன்ருவதாக நிற்கின்ற செலவினையும் நச்சினுர்க்கினியர் சுட்டுகின்ருர். அந்தப் பேரின்பநிலையில் பேரறிவாகவே மாறி விடும்போது அதனை அறிவதற்கு முன்னெல்லாம் உதவிய ஞானமும் வேண்டாது போகின்றது. சுட்டறிவாகிய சிற்றறிவு மட்டுமல்ல அங்கே நம்மைவிட்டுப் பிரிவது, பேரறிவும் நமக்கும் வேருக நின்று வழிகாட்டும் நிலையும் அங்கு இல்லை. எனவே மெய்ஞ்ஞானத்தால் அறிதலையும் கைவிட்டு நிற்கும் நிலை அது என்று நச்சினுர்க்கினியர் விளக்குகிருர். எனவே இங்கே இடம் காலம் என்று நாம் அறிபவற்றைத் தாண்டிய நிலையில் மனத்தையும் தாண்டிய நிலையும் சித்சக்தி வழிகாட்டுகின்ற நிலையும் தாண்டிச் சென்று சிவத்தோடு ஒன்ருகும் நிலையே இங்குக் கூறப்பெறுகிறது.

உபநிடதங்கள் பேரின்பம் பெற்ருேனைச் செய்யவேண்டிய கடமையையெல்லாம் செய்து முடித்தவன் என்று பாடுகின்றன. இவ்வாறு செய்து முடித்த உள்ளத்தைச் செம்மல் உள்ளம் என்று சங்கப்புலவர்கள் பாடுவார்கள். "செய்வினை முடித்த செம்மல் உள்ளம்" "அருந்தொழில் முடித்த செம்மல் உள்ளம்" என்ற தொடர்கள் இந்த அழகிய கருத்தை விளக்குகின்றன. இத்தகைய நிலைதான் இங்கேயும் சேவடி படரும் செம்மல் உள்ளமாக விளங்குகிறது.

இதனை எப்படி அடைவது? எங்குமாய் நிறைந்திருக்கின்ற ஒன்றை அடைவதற்கு ஒரு தனிவழி வேண்டுமா? தோள்மேலே ஆட்டுக்குட்டியைப் போட்டுக் கொண்டு போகின்ற இடையன் அதை மறந்துவிட்டு மந்தையில் போய்த் தேடுகிருன்; இழந்து விட்டதாக அழுது புலம்புகிருன். அவன் துன்பம் நீங்க எந்த வழியை அவன் தேடுவது? "மே" "மே" என்று அவனைக் கூவியழைத்துத் தோளின் மேல் இருக்கும் அந்த ஆட்டுக் குட்டியை அவன் அறிதல் வேண்டும். அவ்வளவே அங்குள்ள வழி. சண்டிக்குழந்தை, தாய் பால் கொண்டு வரும்போது எங் கெங்கோ ஓடி அலைகிறது. தாயும் பின்னேயே ஓடிஓடி வருகிருள்.

களைத்துப்போன குழந்தை பசியால் வாடி வருந்துகிறது. அதன் வருத்தம் தீர வழி என்ன? தாயின் முகத்தையும் பாலின் முகத்தையும் பாராது வெறுத்த நிலை நீங்கித் தாயை விரும்பி அவள் பக்கம் திரும்பினுல் அந்தத் துன்பமெல்லாம் ஓடிவிடும். அதே போல எங்கும் நிறைந்த பேரருளை விட்டோடின நாம் விரும்பித் திரும்பிப் பார்க்க வேண்டியதுதான். பெருந்தாயாகிய கடவுள் பேரருட்பாலை நமக்கு ஊட்ட நம்பின்னேதான் ஓடி ஓடி வருகின்ருளே! எனவே வெறுப்பு மாறி விருப்பு வளரவேண்டும். இதுதான் இங்கே வேண்டிய மனமாற்றம். எதை எதையோ நயந்தவர் இப்போது ஆண்டவனை நயத்தல் வேண்டும்.

ஆனுல் அதுதான் எளிதில் முடிவதில்லை. அப்படிப் பழகி விட்டோம்.. அப்படி விரும்புகின்ற நிலை வந்துவிடுமானுல் வெற்றிதான். அப்போது எழுகிறது நல்ல நெஞ்சம். அந்த நெஞ்சம் வாழ்க. அந்த நல்ல நெஞ்சு விரும்புவதெல்லாம் இனியனவே ஆகும்; திண்ணிய நெஞ்சமும் ஆகும். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்'. அது வாய்ப்பாக வந்து அமையும். இன்னும் எத்தனை எத்தனையோ நன்மைகள் எல்லாம் அங்கே வளர்ந்தோங்கும். அந்த நிலையில் இவற்றை எல்லாம் நீ பொருட்படுத்தப் போவதில்லை. நீ எந்தக் காரியமாக வந்தாயோ அந்தப் பேரின்பப் பேற்றினை அடைவாய். என்ருே ஒருநாள் என்று சொல்வானேன்? எங்குமாய் எப்போதுமாய் இருக்கின்ற அந்தப் பேரின்பம் இப்போதே கிடைக்கும். அதனை மட்டும் நீவிரும்ப வேண்டும். வேருென்றினையும் நினையாது அதனையே விரும்பவேண்டும். வேருென்றும் இதற்குமேல் வேண்டுவதில்லை. குளியலும் வேண்டாம்; தவம் செய்யவும் வேண்டாம். அன்பு ஒன்றே வேண்டுவது. விபீடணன் இராமனை அடையவந்தபோது தாண்டிவந்த கடலிலேனும் குளித்தானு? தாயை அடைய அன்பன்றி வேறு ஒன்றும் வேண்டுவதில்லை. நயந்தாற் போதும்.

"சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னிசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"

(திருமுருகாற்றுப்படை – 62-66.)

திருப்புகழில் வள்ளி

தணிகைமணி திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள்
சென்னை.

வள்ளியம்மை திருமாலின் மகள்—"திருமால் அளித்தருளும் ஒரு ஞான பத்தினி"—*(1218).

பிரமன் தங்கை "விதியானவன் இளையாள்"—(1185).

வள்ளியின் பழைய பெயர் சுந்தரவல்லி (சுந்தரகுறம் பெண்)—(65).

அமுதவல்லியின் (தேவசேனையின்) தோழி—"அமுதமாது வின் நல்தோழி"—(788).

சிவமுனிவர் மகள், மான் ஈன்ற மகள்—"முனிபெறுபுன மா்ன், மான் ஈனும் அரிவை"—(513), (1053).

வேட குலத்து விநோத மகள்—"வியாதர்கள் விநோத மகள்"—(352).

2. வள்ளியம்மையின் நிறமும் அழகும்:—வள்ளி-பச்சை நிறத்தி; எழுத அரிய அழகினள்—"பச்சைக் கொச்சைக் குறவி"—(476); "மடலூடே எழுத அரியவள்"—(1199).

3. (i) வள்ளியின் பேச்சின் அழகு:— பண்–இந்தளம் (நாத நாமக்கிரியை) பண்–கொல்லி (நவரோசு) போன்றது. இந் தளாம்ருத வசனம்" (289); "நல்ல கொல்லியைச் சேர்கின்ற சொல்லி"—கந்தரலங்காரம் (10).

(ii) பேச்சின் இனிமை:— "சர்க்கரை முப்பழம் ஒத்த மொழிச்சி, குறத்தி" (300).

(iii) உடை:— மயிற்பீலியும் தழையும்— "பீலியும் இலையும் உடுத்திட்டு"—(1199).

(iv) கருணை:— "கருணை அகலா விழிச்சி"—(521).

---

* எண்கள் – திருப்புகழ் எண்கள் (வ, த, சு. பிள்ளை அவர்கள் பதிப்பின்படி.)

4. வள்ளி பார்வதிக்கு உகந்தவள்:— "பார்வதியார்க்கும் இனித்த பெண் ஆகிய மான் மகள்"—(789).

5. வனதேவதைகள் வள்ளியை மலரிட்டுத் தொழுது வழிபட்டது:- அடவி வனிதையர் தனதிரு பரிபுர, சரண மலரடி மலர்கொடு வழிபட, புனமதில் இனிதுறை தனிமான்"— (516); "அடவி வனிதையர் பரவ......இதணில் இருப்பாள்"— சேவகன் வகுப்பு.

6. வள்ளியும் முருகனும் :— (i) முருகவேள் வள்ளிக்குக் காணிக்கையாக (உடுக்கத்) தழை ஏந்திச் சென்றதும்; (ii) கைத்தாளம் இட்டு வள்ளியை இரண்டு கைகளால் கும்பிட்டதும்; (iii) வள்ளியை அர்ச்சித்து வெட்சிமாலை சூட்டியதும்; (iv) வள்ளியின் காலைக் கூசாமல் வருடியதும்; (v) உலகோர் சிரிக்க லச்சையைவிட்டு வள்ளிக்கு மெய்க்காவற்காரனாய் Bodyguard இருந்ததும்; (vi) வள்ளியைக் கும்பிட்டு இசைபாடித் துதித்ததும்;

i) "வள்ளி புனமே சென்று; கொய்து தழையேகொண்டு
செல்லும் மழவா! கந்த!" — (389)

ii) "கும்பிடகைத் தாளம்எடுத்து...புகழ் அறுமுகப்பெருமாளே";
"இருகை தொழுதுபுணர் மார்பா" (867), (1069)

iii) "அர்ச்சித்து ... கொச்சைத் தத்தைக்குச் செச்சைத்
தொடைசூழ்வாய்" — (474)

iv) "குறமறவர்கொடி அடிகள் கூசாது போய்வருட" – (1143)
"மாதுகுறமகள் பாதம் வருடிய மணவாளா" — (225)

v) "இலச்சையற்று எழுபாரும் வெறுத்துச் சிரிப்ப
நட்பொடு வேளையெனப்புக்கு நிற்கும் வித்தக!"–
"குறத்தி கிங்கரன்" —(1186) (1233)

vi) "வனமாதைக் கும்பிட்டு........இன்பச் சொல்பாடும்
இளையவ!" — (945).

"இசைபாடி....குயிலைக் கைப்பிடித்த பெருமாளே"–(1024)

7. வள்ளியைக் கண்காட்டி வேட்டதும்; வள்ளியைத் தோளின்மேல் வைத்து ஒளித்து ஓடியதும்: — "வேட்டிச்சியைக் கண்காட்டிக் கொண்டு வேட்டு" — (373); "உரத்தோளிடத்திற் குறத்தேனை வைத்திட்டு ஒளித் தோடும் வெற்றிக் குமரேசா!" — (534).

8. தினை காக்கும் தொழிலைப் புதிதாக வள்ளியிடம் கற்றுக் கொண்டு (Apprentice) தினைகாத்தது :— "குயில்கிளி *வம்பிலே கடி தொண்டினேனே!" — (768) "தினைகாவல் கொண்ட முருகா" — (902).

9. வள்ளிக்கு வழியடிமையெனச் சாசனம் (service agreement) முருகன் எழுதிக் கொடுத்தது:- ஒருபத்திரம் எழுதினல் மூல பத்திரம் அதற்குரியவரிடத்தும் அதன் நகல், யாவரும் காணக்கூடிய பொது இடத்திலும் (Public Registry Office) இந்நாளில் இருப்பது போலத்தான் வள்ளிக்கு வழியடிமை என்னும் சாசனத்தை அதற்கு உரியவளாகிய வள்ளியின் காதோலையிலும் அதன் உண்மை நகலை வேதம் அறிய, தேவர்கள் அறிய, உலக மெல்லாம் அறிய மேருமலையிலும் முருகவேள் எழுதி வைத்தனர் என்று அருணகிரியார் அந்த ரகசியத்தை வெளியிடுகின்றனர்.

"குறமாதின்...குழையோலை சாதனம் என்றுரையா"–(1002)

"வேடுவர் சிறுமிஒருத்திக்கு
யான் வழியடிமை எனச்செப்பி
வேதமும் அமரரும் மெயச்சக்ர
வாளமும் அறிய விலைப்பட்டு
மேருவில் மிகவும் எழுத்திட்ட பெருமாளே"–(1199)

10. முருகரைத் தாழ்த்தி வள்ளியை உயர்த்திப் பாராட்டுவர் அருணகிரியார். அங்ஙனம் பாராட்டியது முருகவேளுக்கு மிக விருப்பே ஒழிய வெறுப்பு சிறிதேனும் இல்லை.

சீரேறு தணிமலைத் தெய்வமே!நான் இன்று
செப்புவேன் எங்கள் வள்ளிச்
செல்வநாயகி பெருமை பத்தியோடு, புத்தியின்
செம்மைத் திறங்க ளெல்லாம்;
ஆரேயிவ் வறிவிலி என்பெருமை தன்னிலும்
அவள்பெருமை மேல தாக
அடுக்கடுக் காய்உரைக் கின்றனன் என்றுநீ
அழுக்காறு கொள்ள மாட்டாய்;

* வம்பு – புதுமை.

காரேறு குழல்வள்ளி பெருமையைக் கேட்டஓர்
களிப்பு பூரிப்பினுல் உன்
கவசம் பிளந்திடும் புதுப்புதுக் கவசங்கள்
கட்டினும் பிளந்து வீழும்
ஏரேறு மயிலேறி என்முனே வந்துநீ
எனையும் புரந்தருளுவாய்
இவ்வுண்மை அருணகிரி நாதரறி வாரன்றி
யாவர்பிறர் அறிய வல்லார்!

11. பாலப்பருவத்தில் முருகன் மறக்கருணை காட்டினன்; வள்ளியை மணந்தபின் அறக்கருணை காட்டினன் என்பது:—

கருணைநிறை கடவுள்நீ என்ருலும் உன்கருணை
ஒகோ! மறக்கருணையே!
கார்நிறச் சூரர்களை வேல்கொண்டு மாய்த்தனை
கமலமலர் மேலயனையே
பொருணிறைவு காண்கிலை என்றே புடைத்துப்
புலம்பிடச் சிறையிலிட்டாய்
புனக்கரும் பாகுமெம் வள்ளியை மணந்தபின்
பூண்டனை அறக்கருணையை
இருணிறையும் உள்ளம்உள கீரர்பொய்யாமொழிக்
கின்பந் தனையூட்டினை,
எழிலிவடி வினன்,எகினன், இந்திரன்சேடன்முதல்
யாவர்க்கும் நற்றணிகையில்
அருணிறைவு காட்டினை, அருணகிரி நாதரை
ஆட்கொண்டு பாவகுக்கும்
அந்தஅருள் தந்தனை, செந்தமிழ்த் தெய்வமே!
ஆயி குறமான் மகிணனே!

ஆறுமுகமான பொருள்

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

"மனிதர்கள் கடவுளர்களைத் தங்கள் கருத்து வடிவாகப் படைக்கின்றனர்." என்றார் ஒரு மேலை நாட்டு அறிஞர். தமிழர் கண்ட பெருஇலட்சியம் இரண்டு. இதைத் திருவள்ளுவர் தெளிவாக்கிச் சென்றார். ஒன்று, வையத்துள் வாழ்வாங்கு வாழ்வது; மற்றொன்று வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட வேண்டுவது. முன்னையதற்கு அன்பு அடிப்படை; பின்னையதற்கு அருள் அடிப்படை. அன்பின் வழியதாய் உயிர் நிலை அமைந்துள்ளது: அருளின் வழியதாய் உறுநிலை அமைந்துள்ளது.

அடிப்படை இலட்சியங்களான அன்பும், அருளும் மலரவும் நிலைபெறவும் வேறு சில துணைக் குண நலங்களும் இன்றியமையாதன வாகின்றன.

அவற்றுள் வீரம் சிறந்தது. அன்பின் அடிப்படையில் பிறப்பதே வீரம். இதனை,

> அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை.

என்று விளக்கினார் வள்ளுவர். மறம் என்றது இங்கு வீரத்தை. ஆனால் பின்னே "பாவம்" என்று மயங்கிப்பொருள் கொண்டனர் உரையாசிரியர். தான் வாழ்ந்த பொன்னாட்டை, தான் தோன்றிய குடியைத் தற்காத்துக் கொள்வதற்கு வேண்டும் வீரம் அன்பின் அடிப்படையில் பிறப்பது. அது போலவே அருளுடையர்க்கே மெய்யான வீரம் பிறக்கிறது.

மன்னுயி ரோம்பி அருள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிரஞ்சும் வினை.

என்றார் தெய்வப்புலவர்.

அடுத்து கொடை. "இரப்பார்க்கொன் றீயாமை அச்சம்" என்றார் நாலடியாரில். ஈகையே, பொருள் பெற்றான் அருள் பெறும் வழி என்னும் தமிழ் மறை. அதுவே வாழ்வில் வருகின்ற இணையற்ற இன்பம்; மெய்ப்பயன்; கொடுக்க முடியாத நிலையை விடச் சாதல் நன்று என்பார் வள்ளுவர்.

ஈதலை அடுத்து அருளுக்கு வழித்துணையாகப் புகழை ஆன்றோர் கருதினர். இசையோடு வாழ்வாரே வாழ்குநராவார். ஈதல் இசைபட வாழ்தல், ஆகிய இரண்டு மல்லாது வாழ்வில் காணும் பயன் யாதுமில்லை என்று கொண்டார். நில்லாவுலகில் நிலைபேறு தருவது பொன்றாப் புகழே என்று தமிழர் கருதினர். புகழெனின் உயிரையும் கொடுத்தனர்.

இனி கல்வி. தாம் கண்ட இன்பம் வையகம் காண வேண்டும் என்ற பெரு நோக்கை வளர்க்க வல்லது கல்வியே. அதுவே கேடில் விழுச்செல்வம் ஒருவற்கு; அன்புக்கும் அருளுக்கும் பொன்றாத் துணையாக நிற்பது. மனிதன் இழிதகைமையைப் போக்கவல்லது; பொருளுணரக் கட்டறுத்து வீடு பேறளிக்க வல்லது.

அன்பும், அருளும் தழைக்கத் துணைச் சாதனங்களாகிய இந்நான்கையும் தொல்காப்பியர் பெருமிதங்கள் என்றார்.

"கல்வி, தறுகண் இசைமை, கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமித நான்கே."

என்பது மெய்ப்பாட்டியல் சூத்திரம். ஆகவே அன்பு, அருள், கல்வி, வீரம், புகழ், ஈகை, என்னும் இந்த ஆறும் சங்க காலத் தமிழர்களது இகபர வாழ்வின் குறிக்கோள்களாய் விளங்கின. இந்தக் குறிக்கோள்கள் அவர்கள் உயிரினும் சிறந்த தெனப் போற்றிய அளவிலே நாளடைவில் அவை தெய்வ வடிவம் பெற்றன. ஆறு இலட்சியங்களும் தங்கள் அநாதிக் கடவுளாம் முருகனின் திருமுகங்கள் ஓராறாக அமைந்து விட்டன.

இது திருமுருகாற்றுப் படையைப் படிப்போர்க்குப் புலனுகும். சங்க இலக்கியத் தொகுப்புகளுள் ஒன்றெனப்படும் பத்துப்பாட்டுள் முதல் வரிசையில் இடம் பெற்று நிற்பது நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை. ஆனுல், திருமுருகாற்றுப் படை, சங்க கால இலக்கிய மன்று என்றும், நெடுநெல் வாடை பாடிய சங்க காலத்து நக்கீரர் வேறு, திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் வேறு என்றும், ஆயினும் திருமுருகாற்றுப்படை பாடியவர் சங்க காலத்தை அடுத்து வந்த ஒரு புலவரேயாவார் என்றும், திரு. வையாபுரிப்பிள்ளை போன்ற ஆராய்ச்சிப் பேராசிரியர்கள் சிற்சில அகச்சான்றுகள் கொண்டு நிறுவ முயன்றுள்ளனர்.

அது எங்ஙன மாயினும், திருமுருகாறறுப் படையில் சங்கத் தமிழ் மணம் வீசுவதோடு, சங்க காலத்துத் தமிழரின் இலட்சியங்களும் பொன்னே போல் போற்றப்படுவது காணப்படலாம். திருச்சீரலைவாய் என்னும் சீர்கெழு செந்தூரில் முருகன் தோன்றுவதைக் குறிப்பிடும் இடத்தில்தான் நக்கீரர் ஆறு முகங்களின் உட்பொருள் விளக்கம் கொடுக்கின்ருர். அதில் சங்க காலத் தமிழரின் கண் போன்ற ஆறு இலட்சியங்களையும், ஆறுமுகங்களின் மேல் அவர் ஏற்றிச் சொல்லும் நயம் வியத்தற்குரியதாகப் பொலிகின்றது.

"தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார் மனனேர்பு எழுதரு வாணிற" ஒரு முகமானது ஆறு முகங்களாக விரிகின்றது. முதலில்,

> "மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
> பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்"

இது அருள் முகம். அறிவற்ற மூலமாயைப் பொருளிலிருந்து இந்த உலகத்தை இறைவன் விளங்கச் செய்கின்ருன். தனுகரண புவன போகங்களைத் தோற்றுவிக்கிருன்; உயிர்கள் தங்கள் மலங்களில் நின்று விடுதலை பெற்று உய்ந்து இறையொளி பெறுவதற்கு, உயிர்கள் பால்கொண்ட பெருங்கருணையால்

> "இருள்சூழ் அறையில் இருந்தது நாடிப்
> பொருள்சூழ் விளக்கது புக்கெரிந்தாற்போல்"

அவன் தனது ஐந் தொழிலைச் செய்கின்ருன்.

"இருள்நீக்கி எண்ணில் பிறவி கடத்தி
அருள்நீங்கா வண்ணமே ஆதி அருளும்"

என்ருர், மேலும் திருமூலர். சிவஞான சித்தியாருள்ளும் இது தெளிவிக்கப்படுகின்றது.

"சொன்ன இத்தொழில்கள் என்னகாரணம் தோற்றஎன்னின்
முன்னவன் விளையாட்டென்று மொழிதலுமாமுயிர்க்கு
மன்னிய புத்திமுத்தி வழங்கலும் அருளால்முன்னே
துன்னிய மலங்கள்எல்லாம் துடைப்பதும் சொல்லலாமே."

நக்கீரர் கருத்தை நன்குணர்ந்த அருணகிரியார் சுருக்கமாக "ஏறுமயிலேறி விளையாடுமுகமொன்றே" என்று ஒரு அடியில் கூறிவிட்டார். நக்கீரர் குறித்த "மாயிருண் ஞாலத்துக்கு" மயிலையும், இறைவன் ஐந்தொழிலாற்றப் "பல் கதிர்விரித்த" லுக்கு விளையாடுதலையும் அருணகிரியார் முறையே சுட்டிப் போனுர். இவர்களுக்குப் பின்னே வந்த குமரகுருபரர்,

"எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும்"

என்று பாடிய விடத்தும் அருள் முகத்தைக் குறித்ததாகவே கொள்ளல் வேண்டும்.

அடுத்து, கொடை முகத்தைத் திருமுருகாற்றுப் படை குறிப்பிடுகின்றது.

"ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிதொழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே."

இதனைத் திருப்புகழ் ஆசிரியர்.

"கூறு மடியார்கள் வினைதீர்த்த முகமொன்றே"

என்றும், கந்தர் கலிவெண்பா ஆசிரியர்,

"வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்"

என்றனர்.

மூன்ருவதாக ஞான முகத்தைக் குறிப்பிடுகின்ருர். கல்வி என்னும் தொல்காப்பியரின் பெருமிதத்துக்கு தெய்வ விளக்க மாய்ப் பொலிந்தது.

“ ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி யோர்க்கும்மே.”

அருணகிரியார் இதனை,

“ஈசரொடு ஞானமொழி பேசுமுகமொன்றே”

என்றும், குமரகுருபரர்.

“ சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும்”

என்றும் உரைத்தனர்.

நான்காவதாக நக்கீரர் கூறும் புகழ்முகம்.

“ ஒரு முகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே.”

கலை நிறைதலில் திங்கள் உவமை ஆயிற்று என்பார் உரை யாசிரியர், நச்சினுர்க்கினியர். வசையிலாவண் புகழைத் திங் களுக்கு உவமை கூறுதலும் தமிழ் இலக்கிய மரபாகும். புறப் பாட்டில், “உவவுமதி கண்டு விறலியும் யானும் வளவன் வெண் குடையை யொக்குமெனத் தொழுதனம்” என வருவது இங்கு ஒப்பு நோக்கற்குரியது. முருகன் பெரும் புகழ் அவன் வென்றி கொண்டு வேலொடு நிற்கும் காட்சியில் விளங்குவதைக்கண்ட அருணகிரியார்:

“குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகத்தையே”

புகழ் முகமாகக் கொண்டார் என்று கருதலாகும். அங்ஙனமே,

“விடுத்தகலாப்
பாச இருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்”

என்னும் குமரகுருபரர் திருவாக்கும், இருளை வென்ற ஒளி முகத்தைக் குறிப்பதாகவே கொள்ளக்கிடக்கிறது.

இனி வீரமுகம்

“ ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே ”

என்றார். இங்கு புறநானூறு வகுத்த

“ ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே ”

என்னும் தமிழர் வீர இலக்கியத்தின் திருவுருவம் பொலியக் காட்டுகின்றார் நக்கீரர். தமிழன்னை ஒருத்தி கூறுவாள்:

“ செம்மால் வனப்பெல்லாம் நுந்தையை யொப்பினும், நுந்தை
நிலைப்பாலுள் ஒத்த குறியென்வாய்க் கேட்டொத்தி
கன்றிய தெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்
வென்றி மாட்டொத்தி பெரும ”

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின் பின் தோன்றலன்றோ வெஞ்சூரனைத் தடிந்த வேலவன், இதனையே

“ மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே ”

என்று திருப்புகழிலும்,

“ விண்மலிதோள்
வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத் தடிந்து
தெவ்வர் உயிர்சிந்தும் திருமுகமும்”

என்று, கந்தர் கலிவெண்பாவிலும் விளக்கினார்.

இறுதியாக அன்பு முகம், காதல் முகம்.

“ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே”

என்றார் நக்கீரர். அருணகிரியார் “வள்ளியை மணம் புரிய வந்த முகமொன்றே” என்று இரத்தினச் சுருக்கமாக அருளினார். ஆனால் குமரகுருபரரோ,

"போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும்"

என்று வள்ளியோடு தெய்வயானையையும் இணைத்துக் கூறினார். நக்கீரரும், அவர் அடிச்சுவடுபற்றிய அருணகிரியாரும் வள்ளியை மட்டுமே குமரன் தெய்வக் காதலுக்குரியவராகக் கொண்டார்கள். வள்ளி திருமணமே தமிழ் அகத்துறையில், களவு, கற்பு என்னும் இரு நெறிகளையும் தழுவிய திருமண மாகும். தலைவன் பால் தலைவி கொள்ளும் காதல் ஏக போக உரிமை கொள்கின்றது. பகிர்ந்தளிக்க மறுக்கின்றது, என்ற நுட்பம் அறிந்தவர்கள் சங்க காலத் தமிழர். ஆகவே தான், இளங்கோவடிகளும், குன்றக் குரவையில் வள்ளியொருத்தி யையே குறிஞ்சி மங்கையர் குறிப்பிடச் செய்கின்றார்:

"வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து
நீலப் பறவைமேல் நேரிழை தன்னோடும்
ஆலமர் செல்வன் புதல்வன் வரும்"

என்றும்,

"குறமகள் அவளெம் குலமகள் அவளொடும்
அறுமுக வொருவநின் அடியிணை தொழுதேம்"

என்றும் வந்துள்ள சிலப்பதிகார அடிகள் சான்று தரும்.

இங்ஙனமாக ஆறு முகத்தினையும் தங்கள் வாழ்வின் ஆறு இலட்சியங்களின் தெய்வ வடிவாகத் தமிழர் கண்டனர். அந்த ஆறு இலட்சியங்களும் ஒன்றையொன்று பிரியாதன; ஒன்றி லாது மற்றொன்றிலாதன. இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி பயப்பன. இதுவே,

"ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்" என்னும் அருணகிரியார் வேண்டுதலுக்கு முத்தமிழ் முதலாசிரியன் முருகவேள் தரும் விடையாயிருக்கலாம்.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

Then Sundarar proceeded to Chidambaram and on his way to Tiruvarur visited many Siva shrines. At Tiruvarur, Parameswara declared Himself to be a friend of Sundaramurti and since then the latter came to be known as 'Tambiran Tozhar' also. Tiruvarur had an attraction for Sundaramurthi. Hence he made it his home.

Before taking birth in this world, Sundaramurthi was an attendant of Lord Siva at Kailasa. There he fell in love with two damsels who were the maids of Parvathi. He was ordered to be born in the world, marry those two damsels and then return to Kailasa. When he made a request to be saved from the snares of the world, Lord Siva told him that He would save him at the opportune moment. So did He come down to the earth in the form of an old Brahmin and nullified the marriage of Sundarar with the daughter of Sadangavi Sivachariyar.

One of the maids of Parvathi, Kamalini by name, was born at Tiruvarur. She was called Paravaiyar and was of marriageable age. Sundaramurthi saw her one day in the temple and with the help of his Master married her.

One day as usual Sundaramurthi went to the temple at Tiruvarur. There in the Devasiriya Mantapam many devotees were together singing the praise of Siva. Sundaramurti unconsciously went past them without offering his respects. One of the devotees, Viranmindar, derided Sundarar for this. Sundaramurthi was deeply hurt and prayed to God in the shrine to make him fit to be a slave of those devotees. Lord Siva spoke of the glory of the Bhaktas and at the request of Sundarar supplied him with the first line of the Tiruttondattogai, which served the basis for the Peria Puranam by St. Sekkizhar.

திருவாரூர்: பண்; கொல்லிக் கௌவாணம்:

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனுர்க் கடியேன்
இல்லையே என்னுத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

"I am the slave unto the slaves of the Brahmins of Chidambaram, I am the slave of Tiruneelakantar, the potter; And slave am I to Iyarpagai, who never said 'no' to any, and to the slaves of Maran of Ilayan kudi. I serve Meipporul Nayanar who won every battle and Viranmindar of Kunrai. The slave of Amar neethi am I, the servant of the Lord at Arur".

(Translation of all the eleven stanzas which deal with the lives of the saints will appear at the end of this serial.)

(To be continued)

திருவெம்பாவை

திரு. A. C. ஷண்முக நயினர் அவர்கள்,
அட்வகேட், தென்காசி.

சைவ சமய குரவர்கள் நால்வர்; திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர். பல நூற்ருண்டுகளுக்கு முன்னே இவர்கள் தோன்றி அவ்வக்காலத்தில் பரவி மக்களை மயக்கிய புத்த சமண மதங்களை வென்று அநேக அற்புதங்கள் செய்து சைவ சமயத்தை நிலை நாட்டினுர்கள். இவர்கள் தோன்றி இப்பணிகள் செய்யவில்லையாயின் சைவ சமயம் எங்கே? திருநீறு எங்கே? சிவ மணியாகிய அக்கமாலை எங்கே? எல்லாம் மறைந்து புறச்சமயங்களே தாண்டவமாடியிருக்கும். சைவ சமயக் கருத்துக்களையும் தத்துவக் கருத்துக் கருத்துகளையும் இசையுடன் கலந்த தோத்திரப் பாடல்களாக அருளிச் செய்து மக்களுக்கு சிவபெருமான் பெருமையையும் அப்பெருமான் திருவடியடையும் வழியையுங் காட்டி உண்மையறிவுச் சுடர் கொழுத்திஞர்கள். இந்நான்கு தலைவர்களில் காலத்தால் முற்பட்ட மாணிக்கவாசக சுவாமிகளால் திருவெம்பாவைஅருளிச் செய்யப்பெற்றது. இது அவர் இயற்றிய திருவாசகத்தில் ஓர் பகுதியாய்த் திகழ்வது.

திருவாசகத்தில் உருகாதார் ஒரு வாசகத்திலும் உருகார் என்றும் இதைப்பாடும்போது ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்குமென்றும் பொல்லா விலங்குகளும் கீழ்ப்பறவைச் சாதிகளும் மெய்ஞ்ஞான நாட்டமுறும் என்றும் புகழப்படுவதாயின் இதன் பெருமையை என்னென்று கூறுவது! கருங்கல் மனமுங்கரைந்துருகக்கண்கள் தொடுமணற்கேணியிற் சுரந்து நீர்பாய மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி அன்பராகுவர்: பிறவித்தளை நீக்கி அல்லலறுத்து ஆனந்தமாக்குந் தேனல்லவா? பாவை பாடிய வாயால் கோவைபாடுக என்று

இறைவனே ஆணையிட்டால் மாணிக்கவாசகர் பெருமையும் அவர் அருளிய திருப்பாக்களின் அருமையும் அளக்க ஓர்கோலுண்டோ? இறைவனே பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து தானே ஏட்டில் எழுதி இறுதியில் திருச்சிற்றம்பலமுடையார் என்று கையெழுத்துச் செய்து மறைந்தார் என்று படிக்க நாமும் அதனை நினைந்து நம்மையே சற்று மறந்து விடுகிறோம்.

திருவெம்பாவை என்பது திரு + எம் + பாவை யெனப் பிரிக்கப்படும். இத்தலைப்பே தத்துவப் பொருளை உள்ளடக்கியது. திரு = இறைவன் தன்மை, எம் = உயிர்த்தன்மை, பாவை = வழிபாட்டிற்கு அமைந்த திருஉருவத்தின் தன்மை. இங்கே பார்வதிதேவி. உயிரானது அருள் உருவமாகிய பார்வதி தேவியை வழிபட்டால் திருவாகிய தெய்வத்தன்மையை அடையலாமென்பதைக் குறிக்கும்.

திருவண்ணாமலையில் கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து ஒருவரையொருவர் எழுப்பி நீர்த்துறை சென்று நீராடி மணலைக் கூப்பிப் பாவையாக அமைத்து அப் பாவையைப் பார்வதி தேவியாக நினைந்து வழிபட்டார்கள். வைணவப் பெண்களும் மலைமகளைப் பண்டு வழிபட்டனர் என்று பாகவதம் கூறுகின்றது. வழிபடுவதின் முக்கிய நோக்கம் தங்களுக்கு நல்ல கணவர்கள் கிடைக்க வேண்டுமென்றும் நல் வாழ்வு வாழ மழை பொழிந்து நாடு செழிக்க வேண்டுமென் பதுவே. இந்தப்பாவை நோன்பைக் கண்டார் மாணிக்க வாசகர்: வியந்தார்: இறைவனைப் புகழ்ந்தார்: இவரிடம் பாவை நோன்பு திருவெம்பாவையாகப் பரிணமித்தது. நாட்டுப் பழக்க வழக்கங்களை நன்குணர்ந்து அவைகளைப் பயன்படுத்தி இறைவனுடைய அனந்த குணங்களையும் பாடுவது இவருக்கு ஓர் வழக்கம் உண்டு. உதாரணமாக திருஅம்மானை, திருப்பொற் சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி திருவுந்தி, திருத் தோணோக்கம், திருப்பொன்னூசல் முதலியவற்றைக் கூறலாம். இவை தவிர, தும்பி, குயில், கிளியினங்களையும் கருவிகளாய், வைத்து பாக்கள் அருளுவார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இவ்வாறு கிளி, குயில், கோழி, புரு முதலியவைகளைப் பயன்படுத்தி அவற்றை விளித்து இறைவன் பெருமையை

பாடியிருக்கிறதை நாம் காணலாம். மகா கவிகள்தான் இவ்வாறு கற்பனை செய்து பாடுவார்கள்.

தேவாரப் பாக்களில் தத்துவக் கருத்துக்கள் அதிகமாக யிரா. திருவாசகத்தில் அவற்றை மிகுதியாகக் காணலாம். திருவாசகத்தின் நடையும் தேவாரப் பாக்களைவிடச் சற்றே இறுகலாகயிருக்கும்.

திருவெம்பாவையை மார்கழி மாதத்திற்குள் பாடுவதும் சிறப்பாகத் திருவாதிரைத் திருநாட்களிற் பாடுவதும்நம்நாட்டில் வழக்கம். திருவாதிரைத் திருநாட்களில் மற்றத் திருப்பாசுரங் களுக்குத் திருக்காப்பிட்டு திருவெம்பாவை மட்டும் பாடுவார்கள். இது ஒன்றே மாணிக்கவாசகருக்குச் செய்யும் சிறப்பு. மாணிக்க வாசகர் அறிவாற் சிவனே ஒப்பர் என்பதாலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களில் ஞானத்தால் இவர் வீடு பெறு அடைந்தார் என்பதாலும் இச்சிறப்புச் செய்யப்படு கிறது. எனினும் வேறுஒரு முக்கிய காரணம் உண்டு. திருவெம் பாவை "சக்தியை வியந்த"தென்று கூறப்படுகிறது. சக்தி யென்பது இறைவனருள். "அருளது சத்தியாகும் அரன் தனக் கருளையின்றித்-தெருள் சிவமில்லை அந்த சிவமின்றிச் சத்தி யில்லை யென்று அருணந்தி சிவம் கூருநிற்கும். சக்தியை வியந்ததென்ருலும் இறைவனை வியந்ததாகவே கொள்ளுதல் வேண்டும். சக்திக் கென்று திருவெம்பாவையில் தனியாக ஒரு பாட்டுமில்லை. சக்தியே பிரபஞ்ச சிருட்டிக்குக் காரணமாக நிற்கின்றது. மார்கழிமாதமும் சிருட்டி ஆரம்பமாகும் காலம். நமக்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒருநாள். தெற்கணுயன மாகிய ஆடி-மார்கழி அவர்களுக்கு இரவு நேரம். உத்தராயண மாகிய தை-ஆனி முடிய அவர்களுக்குப் பகல்வேளை. அழிப்புக் காலத்திற்கும் படைப்புக் காலத்திற்கும் பிரயாணமாக இந்த 6 மாதங்கள் பிரிந்து நடக்கும். இவ்வகையில் மார்கழிமாதம் உதய காலம். இது காலை 4 மணி முதல் 6 மணி வரை (4 am-6 am) படைப்புக்கு ஏதுவாயிருக்கு மென்பர் சமய தத்துவ ஞானிகள். இம்முறையில் மார்கழி மாதம் சிறப்புடைத்து; கண்ண பிரானும் கீதையில் 'நான் மாதங்களிலே மார்கழி மாதமாயிருக் கின்றேன்' என்று கூறுகிருர். ஆகவே மார்கழி மாதம் சிருட்டி

காலமானதாலும் பாவை நோன்பு மார்கழி மாதத்தில் நிகழ்வதாலும் அதைக்கண்டு மாணிக்கவாசகர் திருவெம்பாவையை அருளிச் செய்ததாலும் மார்கழி மாதத்தில் விடியுமுன் 5நாழிகை நேரம் நாம் துயில் நீங்கி நீராடி நீறிட்டு இப்பாக்களை ஓதி வருகின்ரும். ஆனுல் மார்கழி மாதம் தவிர மற்ற மாதங்களில் ஓதக் கூடாதென்பதல்ல. மற்றக்காலங்கள் பொது. மார்கழி மாதம் சிறப்பு.

எழுப்புகின்ற கன்னிப் பெண்கள் மலம் நீங்கிய உயிர்கள். எழுப்பப்படும் கன்னியர் மலமுடையவர்கள். மலம் நீங்கியவர்கள் மல முற்றவர்களைத் தட்டி யெழுப்பி மலங் கழுவச் செய்து அவர்களைத் தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்கிருர்கள் என்று ஓர் தத்துவ வியாக்கியானமுங் கூறப்படும்.

திருவெம்பாவைப் பாக்கள் இருபதும் பக்திப் பெருக்கை நன்கு காட்டும். பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட நம் மனதை உருக்கிவிடும். இச்சுவையை அனுபவிக்க முடியுமே தவிர எழுத்தால் எழுத இயலாது. பக்திச் சுவையுடன் தமிழ்ச் சுவையும் நம் மனதைக் கவரும்.

1–4 பாக்கள் உரையாடல். கன்னிப்பெண்கள் ஒருவர்க் கொருவர் பேசுவார்கள் ஏசுவார்கள். 5-8 பாக்கள் கன்னிப் பெண்கள் தனித்தனி பாடுதல். 9 முதல் எல்லோரும் சேர்ந்து பாடல். 1-8 பாக்கள் இறைவன் தன்மையைப். பொதுவாகக் கூறும். 9-ம் பாட்டு கடவுளின் அருவநிலை கூறும்.10. அரு உருவ நிலை 11. உருவநிலை 12. இறைவனுடைய முத்தொழில் 13. அம்மையப்பர் வடிவமும் தீட்சைமுறையும் 14, 15. மறைத்தல் அருளல். 15. பக்தி எதிர்வையும் குறிக்கும் 16. அருள் மறை 17, பேரின்பம் 18. அத்துவித நிலையும் இறுதிநிலையும். 19. உத்தமக் கற்பு நிலை. 20. ஐந்தொழில் குறிக்கும். இவை ஒவ்வொன்றையும் விளக்குவதாயின் அதே ஒரு நூலாகி விடும். விரிவுக்கு அஞ்சி ஒன்றிரண்டு பாக்களை ஆராய்வோம்.

இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். முன்னைப் பழம் பொருட்கு முன்னைப்பழம்பொருள். முன்னே போகப் போக அவனுடைய ஆதியை அறிய முடியாது; ஆதியிருந்தால்தானே!

பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியன். பின்னே வர வர எதற்கும் புதிதாகயிருக்கின்ருன். இதனுல் இவனுடைய அந்தமும் அறியமுடியாது. அந்தமில்லை யென்பது பொருள். இது இவனுடைய அருவ நிலை. (9)

இறைவன் சிவந்தநிற முடையவன் (செய்ய)வெண்ணீறணிந்தவன், செல்வன், மையணிந்த கண்களை யுடைய தேவியின் மணவாளன். இது அவன் உருவநிலை. (11) உருவமிருந்தால் தானே இன்ன நிறம். இன்ன அணிந்திருக்கிருன் இவன் யார் என்று சொல்ல முடியும். இந்த இரண்டு நிலைகளுக்கும் மத்தியில் ஓர் நிலை உண்டு. அரு உருவநிலை. ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உரு ஒன்ருதலால் அரு உருவநிலை. சதாசிவநிலை. 7 பாதாளங்களுக்குக் கீழே சென்ருலும் அவன் பெருமை சொல்லொணுதது. சொல்வதற்குச் சொல் இல்லை. மேலே சென்ருலும் எல்லாப் பொருட்களும் அவனிடம் முடிவடைவதால் அங்கும் இவன் தன்மையென்னவென்று கூற முடியாது. இங்கே அருவ நிலையைக் குறித்தார். இதே பாட்டில் இந்நிலையைக் கூறியபின் பெண்களை ஒரு பாகத்தில் வைத்திருப்பவன். திருமேனியோ ஒன்றல்ல பல வகை: உண்மைப் பக்தர்களுக்குத் தோழன். தொண்டர் உள்ளத்தில் உள்ளவன் என்று உருவ நிலையைப் பேசுகின்ருர் மாணிக்கவாசகர். (12) இதையுங் கூறிவிட்டு இறைவனுக்கு ஊர் எது, பெயர் எது, உற்ருர் யார், அயலார் யார், அவனைப் பாடுவது எப்படி என்று வினவுகின்ருர். இந்த வினுவிலேயே ஊர் இல்லை, பெயரில்லை, உற்ருரும் அயலாரும் இல்லை. பாடவும் முடியாது என்ற விடை அடங்கிக்கிடக்கிறது. நாம் கேட்கும் முறையிலேயே விடையையும் அறிந்து கொள்ளலாமல்லவா!

"பாதளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே!"

"பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணேரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்"

ஒரு மகான் இவ்வுலகத்திலுள்ள மரங்களையெல்லாம் பேனு ஆகவும் பூமியைக் காகிதமாகவும் கடல் நீரையெல்லாம் மை

யாகவும் வைத்துக் கொண்டால் கூட இறைவன் தன்மையை எழுத முடியாதென்று கூறுகின்றார். திருமாலும், நான்முகனுமே காண முடியவில்லை யென்றால் குடும்பங்களில் அமிழ்ந்து கிடக்கும் நாம் எங்கே? மாலறியா நான்முகனுங் காணு மலை யல்லவா இறைவன்?

இறைவனுக்கும் இறைவிக்குஞ் சேர்த்துப் பொதுவாய் ஒரு பாட்டு அருளியிருக்கின்றார். (13)

"பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்?"

இது நயத்திலும் நயமானதோர் திருப்பா ஆகும்.

——— (அடுத்த இதழில் முடியும்)

இருவர்

திருப்புகழமிர்தம் ஆசிரியர்,

திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்

தமிழ்ப் புலவர்களுக்கு அளவில்லாத சிறப்புண்டு. அவர்கள் அரும்பெருங் குணங்களையுடையவர்களாக வாழ்ந்தார்கள். கவியரசரைப் புவியரசரும் போற்றி செய்தார்கள்.

புலவர்களால் பாடப்பெறுவதைத் தமது பெறலரும்பேருக (அக்காலத்தில்) மக்கள் கருதினார்கள். தக்க புலவர்களால் பாடப்பெற்றவர்கள் அழியாத புகழுடம்பைப் பெற்று வாழ்வார்கள். இமயம் உள்ளவரை அவர்களுடைய பெருமை குன்றாது.

மதுரை நகர்.

மதுரை மாநகரம் (அக்காலத்தில்) தமிழ்நாட்டின் தலைநகரம். சங்கம் இருந்த தண்டமிழ்ப்பதி. அங்கயற்கண்ணம்மை அவதரித்த அரிய திருத்தலம். அறுபத்திநான்கு திருவிளையாடல்கள் புரிந்து அரனார் அமர்ந்து அருள்புரிந்த புண்ணியபுரி. அத்தலத்திலேயுள்ள சிவபெருமானுடைய திருநாமம் சொக்கலிங்கம்.

அரசவைத்தியர்.

இத்தகைய திருத்தலத்திலே ஒருசிறந்த மருத்துவர் வாழ்ந்தார். அவர் கைராசியுடையவர். அரசவைத்தியர்: உயர்ந்த மருந்துகளைத் தயாரித்து நுணுக்கமாக ஆய்ந்து நோய்களைத் தீர்ப்பதில் வல்லவர்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

என்று திருவள்ளுவர் கூறியபடி, நோயையும் நோய்வந்த காரணத்தையும், அதனை நீக்கும் தன்மையையும் நன்கு நுணுகி யுணர்ந்து மருந்தைத் தருவார்.

நற்குணசீலர்.

அவரிடத்தில் எளியவர்கள், ஏழைகள் சென்று அணுக முடியாது. மன்னவருக்கும், அவரை யொத்த செல்வர்க்குமே, அவர் வைத்தியம் புரிவார். மிகப்பெருத்த செல்வாக்கு படைத் தவர். அவர் பெயர் சொக்கலிங்கப் பண்டிதர்.

இவர் நற்குண சீலர். தூய உள்ளம் உடையவர். ஏற்றமும் தோற்றமும் படைத்தவர். பாண்டிய மன்னருடன் பழகுவதால் சிறந்த ஆடை அணிகளுடன் விளங்கினுர். இவருடைய தந்தை வீரபத்திரர்.

புலவர் மருதனுர்

இவர் காலத்தில் மதுரையில் ஒரு பெரும்புலவர் இருந்தார். அவர் பெயர் மருதனுர். இவர் சிறந்த பண்பாடும் தமிழ்ப் புல மையும்உடையவர். அரசர்களால் மதிக்கப்பெற்றவர். இவருடைய புகழ் எண் திசைகளிலும் பரவியிருந்தது. அக்காலத்தில் அவ ருடைய திருவாக்கினுல் பாடல் பெறுவதைத் தமது பெரும் பேருகத் தக்கவர்கள் கருதினுர்கள்.

சொக்கலிங்கம் என்ற மருத்துவருக்கும் மருதனுரிடம் ஒரு பாடல் பெறவேண்டும் என்று நெடு நாட்களாக அவாவிருந்தது. அதற்கு என்ன வழி? என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

நோயால் வாடிய மருதனுர்

மருதனுர் ஒரு சமயம் கொடிய நோயினுல் பீடிக்கப்பட்டார். அதனுல் மெலிந்து விட்டார். எத்தனையோ மருத்துவர்கள் பார்த்தும் பலப்பல மருந்துகள் அருந்தியும் நோய்தீரவில்லை. எல்லோரும் கை நழுவ விட்டார்கள். பிழைக்க மாட்டார் என்று கருதினுர்கள். அந்தோ! இவர் மறைந்தால் தமிழ் உலகுக்கே பெரிய இழப்பு. தமிழின் கருவூலமாகிய இவர் வாழ்ந்தால் தமிழ்ப் பண்பாடும் வாழுமே என்று கூறி மக்கள் இரங்கினுர்கள். தமிழ்ப்பெரும் புலவர் நிலையைக் குறித்து வருந்தினுர்கள்.

ஏங்கிய புலவர்:

மருதனூர், மாபெருஞ் சிறப்புடைய மருத்துவர் சொக்கலிங்க பண்டிதரிடம் தனது உடம்பைக் காட்டி மருந்து உண்டால் ஒரு வேளை நலமாகக்கூடும் என்று எண்ணினூர். ஆனூல் அவரோ அரசவைத்தியர். எளியவனுகிய எனக்கு அவர் மருத்துவம் புரிய மாட்டாரே; இதற்கு என்ன செய்வோம்? அவர் பெரும் பொருள் கேட்பாரே. என்னிடம் ஒரு சல்லியும் கிடையாதே. சொக்கேசர்தான் இதற்குத் துணைபுரியவேண்டும் என்று எண்ணினூர்.

நண்பரின் முயற்சி:

மருதனூருடைய நலத்தில் கருத்துடைய ஒரு நண்பர் சொக்கலிங்கப்பண்டிதரிடஞ் சென்றூர். 'ஐயா! வணக்கம்: நமது மதுரையம்பதியில் பெரும்புலவராகிய மருதனூர் என்பவர் பிணி வாய்ப்பட்டுப் பெரும் துயரம் உறுகின்றூர். அவர் வாழ்ந்தால் தமிழ் வாழும். அவருக்குச் செய்யும் உதவி தமிழ்த்தாய்க்குச் செய்ததாகும். தாங்கள் தயவுசெய்து அவரைப் பார்த்து மருத்துவம் புரியுமாறு வேண்டுகின்றேன் என்றூர்.

புலவரிடம் பாடல் பெறவேண்டுமென்று நெடுங்காலமாகக் கருதியிருந்த மருத்துவர், உடனே மருந்துப் பெட்டியை எடுத்துக் கொண்டு நண்பருடன் மருதனூர் இருக்குமிடம் போனூர்.

புலவரின் வியப்பு:

மருதனூர் நோயில் கிடந்து துள்ளித் துடித்துக் கொண்டு பாயில் கிடந்தார். வைத்தியரைக் கண்டதும் அவருக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அரசருடைய அரண்மனைக்குச் செல்லும் அருமை பெருமை நிறைந்த சொக்கலிங்கரா நம்முடைய வீட்டுக்கு வந்தார்? நான் அழைக்கவும் இல்லையே! ஏதோ தெய்வத்தின் கருணை போலும் எனக் கருதினூர்!

படுத்த வண்ணமே பண்டிதரை நோக்கி கரங்களைக்கூப்பிக் கும்பிட்டார். சொக்கலிங்கப்பண்டிதரும் அவர் உடலைச் சோதித்தார். நாடிகளைப் பார்த்தார். நோயின் நுட்பத்தை யுணர்ந்தார். சிறந்த மருந்துகளைக் கொடுத்தார். படிப்படியே நோய் நீங்கியது.

உடல் நலமுற்றது. முற்றிலும் நன்மையுற்றார். மருத்துவருக்கு பணம்தர அவரால் இயலவில்லை. என்செய்வார்? உடனே தன்னைக் காத்தருளிய மருத்துவர் மீது ஒரு நேரிசை வெண்பா பாடினார். அதனை எழுதிய ஏட்டை வெற்றிலைபாக்கு, பழம், கற்கண்டு முதலியன நிறைந்த தட்டில் வைத்தார்: மருத்து வரிடம் தந்து தனது நன்றியறிதலைத் தெரிவித்தார்.

மருத்துவரின் மகிழ்ச்சி:

அப்பாடல் வருமாறு:-

மிக்கமது ரைச் சிவனும் வீரபத்தி ரன்சுதனும்
சொக்கர் இருவரெனத் தோன்றினர்— அக்கோன்
பிறவாமல் காப்பான்; பிறந்தவரை மீண்டும்
இறவாமல் காப்பான் இவன்.

இப் பாடலைப் பெற்ற மருத்துவருக்கு மட்டில்லாத மகிழ்ச்சியுண் டாயிற்று. பதினாராயிரம் பவுன் தந்தாலும் அவருக்கு அத்தனை திருப்தி உண்டாகியிராது. அப்பாடலை லட்சம் பவுனைக் காட்டி லும் பெரிதாக மதித்தார்.

மதுரையில் சொக்கலிங்கம் என்று இருவருண்டு; ஒருவர் சிவபெருமான்; மற்றொருவர் வீரபத்திரன் புதல்வராகிய மருத்துவர்.

முன்னவராகிய சொக்கலிங்கம், தன்னையடுத்தவரைப் பிற வாமல் காத்தருளுவார்; பின்னவராகிய மருத்துவச் சொக்க லிங்கம், தன்னையடுத்தவர்களை இறவாமல் காத்தருளுவார்; என்ற பொருளுடைய பாடலால் அம்மருத்துவரும் இறவாத வராயினார்.

பெண்ணின் பெருமையும் கடமையும்

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்

"ஏகம் பத்துறை எந்தாய் போற்றி!
பாகம் பெண்ணுரு ஆனாய்! போற்றி!" —மாணிக்கவாசகர்.

உலகம் ஆண்—பெண் வடிவில் அமைந்துள்ளது. சரம் அசரம் என்னும் இரு பகுதிகளிலும் இதனைக் காணலாம். பரம் பொருளும் தன் தூய தன்மைக்கு மாறிலா வகையில் ஆண் பெண் வடிவங்களைக் கொள்ளுகிறது.

"உமையொரு பாகம் உடையான்"
"உமையாளொடும் உடனாகிய ஒருவன்"
"பெண்ணாகிய பெருமான்".

என்றெல்லாம் திருஞானசம்பந்தர் தாம் நேராகக் கண்ட சிவ பெருமானைக் குறிக்கின்றார்.

பெண்மை தண்மைச் சக்தி; ஆண்மை வெம்மைச் சக்தி. ஆண், பெண் உடம்பின் வேற்றுமை, சில உறுப்புக்களின் வேறு பாட்டளவில் நிற்பதன்று; அது ஒரு அடிப்படையான வேற்றுமை என்று அலெக்ஸிஸ் கேரல் என்னும் ஒரு மேனாட்டு பெரிய விஞ்ஞானி கட்டுரைக்கின்றார்:

"They (the differences) are of a more fundamental nature. They are caused by the very structure of the tissues and by the impregnation of the entire organism with specific chemical substances secreted by the ovary...... In reality woman differs profoundly from man. Every one of the cells of her body bears the marks of her sex. The same is true of her organs, and above all, of her nervous system."

—Ch. III. Sec. 9 of Man The Unknown.

பெண் என்பது வெறும் பெண்ணுடம்பன்று. பெண்ணுடம்புடன் பெண்மை எனப்படும் பல நல்லியல்புகளின் செறிவையும் பெற்றிருப்பவள்தான் பெண். "அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும். அவ்வுறுப்புக்கள் சேர்ந்த இன்பம் பெண்மையின் உடல்...அதற்கு என்பு தோல் போர்த்த ஒரு பருவுடல் இறைவனால் அமைக்கப்பட்டிருக்கிறது. பெண்மை என்னும் இன்பத் தெய்வத்தை ஏந்தி நிற்கும் பெண்ணை வெறும் பெண்ணெனக் கொள்ளாது, பெண்தெய்வம் என்றும் போற்றலாம்" என்று பெண்ணின் பெருமை என்னும் பெருநூலின் ஆசிரியர் திரு. வி. க பேசுகின்றார்.

"A beautiful and chaste woman is the perfect workmanship of God" என்கிறார் ஹெர்மிஸ் என்னுமோர் பேரறிஞர்.

"Married life, if lived in a perfectly ideal manner, is no bar to the attainment of mukthi" என்று ரிஷிகேச மாமுனிவர், சுவாமி சிவானந்தரும் அறிவுறுத்தியுள்ளார்.

ஆணும் பெண்ணும் தன்தன் சிறப்பு நல்லியல்புகளைச் சீரிய முறையில் பாதுகாத்துக் கொண்டு, ஒருவர்க்கொருவர் வாழ்க்கைத் துணையாய் அமைந்து, இல்லறத்தை நல்லறமாய் நடத்தி, இருவரும் நற்குண பூரணராகித் தெய்வ நிலைமை அடையவேண்டும் என்பதே இறைவன் திருவுள்ளம். இதனை யாவரும் உணர வேண்டும்.

கற்பன கற்றும், நற்கேள்வி பெற்றும், பெண்ணின் தனிப் பண்புகளாகிய நாணம், மடம்[1], அச்சம், பயிர்ப்பு[2], என்னும்

---

1. மடம்=அறிந்தும் அறியாதுபோல் அடங்கியிருத்தல். அவசியம் நேரிட்டபோது வெளிவந்து தன் அறிவைப் புலப்படுத்திக் குடும்ப நலம் காத்தல்.

"பேதைமை என்பது மாதர்க் கணிகலம்" என்ற ஔவையார் திருவாக்குமிங்கு கவனிக்கத்தக்கது."பேதைமை"என்பது அறியாமையன்று; அறிந்தும் அறியாது போலிருத்தலே. அணிகலத்தைப் போட்டுக் கொள்ளலாம்; கழற்றியும் வைக்கலாம், அது போன்றது பேதைமை.

2. பயிர்ப்பு=கண்டறியாதன கண்ட போது உண்டாகும் மனங் கொள்ளா நிலை.

நான்கினையும், காத்தும், அன்பும், பொறுமையும், தூய்மையும் தெய்வ வழிபாடும் உடையவளாய் கடமையுணர்ச்சியுடன் இல்லறம் நடத்தும் பெண்ணின் பெருமையைப் பாரதநாடு மிகப் பழைய காலந்தொட்டே பெரிதும் போற்றி வந்துள்ளது. சீதை, சாவித்திரி, சந்திரமதி, தமயந்தி, காரைக்காலம்மை, மங்கையர்க்கரசி, வானவன்மாதேவி, ராணி பத்மினி போன்ற புனிதப் பெயர்கள் பல நம் நினைவிற்கு வரும். கண்ணகியை,

> "இன்றுணை மகளிர்க்கு இன்றி யமையாக்
> கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது
> பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்"

என்று கௌந்தி அடிகள் பாராட்டியிருப்பதை ஓர் எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

மகளாய்ப் பிறந்து, மங்கையாய் வளர்ந்து, மனைவி நிலை எய்தி, பின்பு தாயாய் உயர்ந்து தெய்வ நிலையை எட்டும் பெண்ணின் பெருமை பெரிது! பெரிது!!

> "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
> போஒய்ப் பெறுவ தெவன்?"

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவர் பெருமிதத்துடன் வினவுவது பலருமறிந்ததே.

அழுக்கடையாப் பாரதப் பண்பாட்டில், பெண்ணுக்குப் பெருமதிப்புத் தரப்பெற்றிருப்பதைச் சில பெயர்களாலும், சமு

3, (i) "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப."

(ii) "பெருமையும் உரனும் ஆடூஉ மேன" என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களும் [களவியல் 99ம் 98ம்], நச்சினார்க்கினியர் இவற்றிற்கு எழுதியுள்ள உரைகளும் கற்றோர்க்கு மகிழ்ச்சி தருவனவாகும். இவ்விருவகைப் பண்புத் தொகுதிகளும் ஒன்றற்கு ஒன்று உதவுவனவாய் அமைதல் வேண்டும். முழு மானிடப்பண்பு அப்போதுதான் விளங்கும். இல்லறம் காய் போன்ற நிலையில் தொடங்கி, பண்பில் வளர்ச்சி பெற்று, அருள் பழுத்த கனியாகி, அகத்துறவு நிலையை அடைந்து, திருவருள் செலுத்தும் வகையில் சேவை புரிவதையே தன் கடமையாகக் கொள்ளும்.

தாயப் பழக்கங்களாலும் எளிதில் அறியலாம். இந்து ஆண் மகன் தனது மனைவியைத்தவிர மற்றெல்லாப் பெண்களையும் 'அம்மா' என்று அழைப்பான். ஒருவன் வாழ்க்கைத் துணைவிக்கு, "மனைவி" "இல்லாள்", என்னும் பெயர்கள் பெரு வழக்கில் இருக்கின்றன. இவற்றின் பொருள், 'மனைக்கு உரியவள்', 'இல்லத்தை (வீட்டை) ஆளுபவள்' என்பதாம். 'வீட்டரசி', 'வாழ்வரசி', என்னும் பெயர்களும் மனைவியைக் குறிக்கின்றன. கணவன் தேடிய பொருள் கொண்டே மனை வாழ்க்கை நடை பெற்றாலும், அவ்வில்லத்துள்ளிருந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தும் அவனது தருமபத்தினிக்கே முதலிடம் தரப்பட்டுள்ளது. 'மனைவன்', 'இல்லான்', 'வீட்டரசன்', 'வாழ்வரசன்', என்ற ஆண்பாற் பெயர்களே இல்லை. ஒரு வீட்டில் பிச்சைகேட்க வருபவனும் "அம்மா" என்றுதான் அழைக்கின்றான். ஐயமும் பிச்சையும் இடுவதற்குப் பெண்தான் உரியவள் என்பது கருத்து. தானங் கொடுக்கும் சடங்கு நிகழும்போது மனைவியும் உட னிருந்து கொடுத்தல் நம் பண்பு. "தர்மபத்தினி", "சகதர்ம சாரிணி" என்னும் அழகிய பெயர்களும் அவளுக்கு உண்டு. "In India the woman is the mother" என்கிறார் சுவாமி சிவானந்தர்.

இன்னும் ஒரு மரபைக் குறித்துவிட்டு மேற் செல்லலாம்: ஒரு நாமம், ஓருருவம், ஒன்றுமில்லாத பரம்பொருள், உயிர்களை உய்வித்தற்காக ஆணுருவும் பெண்ணுருவும் திருமேனி தாங்கு கிறது. "தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்" என்பது வள்ளலார் திருவாக்கு. அத்தெய்வப் பெயரைக் குறிக் கும்போது நூல்கள் பெண்வடிவின் பெயரைத்தான் முதலிற் குறித்து, பின்பு அதனோடு இணைந்துள்ள ஆண் வடிவப் பெயரைக் குறிக்கின்றன.

(உ-ம்) (1) உமா மகேசுவரன், (2) இலட்சுமி நாராயணன்.

இவ்வளவு பெருமைக்கு உரிய பெண்ணினத்திற்கு அதற் கேற்பக் கடமைகளும் இருத்தல்தானே இயல்பு! கடமையின்றி உரிமை ஏது? "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை, பண்பும் பயனும் அது" என்ற திருக்குறளில் இக்கடமைகள் மிகச் சுருக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளன.

" தற்காத்துத்* தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்ற அரிய குறட்பாவில் நற் பெண்டிரின் நான்கு தகுதிகள் திட்டமாய் குறிக்கப்பட்டுள்ளன. இவைகளே உடையவர்கள் தாம் பெண்கள். மற்றல்லாதார் யாரோ? அறியோம்.

இம்மாண்புடைய மனையாள், தன் கணவனைத் தன் கண் எனவும் உயிர் எனவும் கொண்டு போற்றிப் பணிபுரிந்து மகிழ் வாள். தன் கணவனது நலத்தையும் புகழையுமே நாடுவாள். தனக்கெனத் தனிப்புகழ் பெற விரும்பமாட்டாள். கண்ணிரண் டும் ஒன்றையே காண்பது போலவும், வண்டியிற் பூட்டிய எருது களிரண்டும் அதனை நன்முறையில் ஒத்து இழுத்துச் செல்லுதல் போலவும், கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து உயரிய குறிக்கோளை நிறைவேற்றி இனிது வாழ்வர். இல்லறத்தை நல்லறமாய் நடத்துவோர்க்கு இறைவன் இகபர சௌபாக்கியங் களை ஈந்தருளுவான்.

நம் நாட்டுத் தெய்வப் புலவர் சேக்கிழாரும் இல்லறத்தில் மனைவிக்குள்ள தனிப்பெரும் பங்கினை மிகத் திறம்படச் சிறுத் தொண்டநாயனர் சரித்திரத்தில் வைத்துப் புலப்படுத்தியிருப்பது கருத்தூன்றிக் கவனிக்கத் தக்கதாகும். நாயனரது அருமை மனைவியாராம் திருவெண்காட்டு நங்கையின் சிறப்பைக் கூறு கையில், "பெருகு திருமனையறத்தின் வேராகி விளங்கு திரு வெண்காட்டு நங்கை'' என்று, பொருள் செறிந்ததோர் உருவ கத்தால், அவர் அப்பெண்மணியின் கடமையுணர்ச்சி மாண்பினை நாம் உய்த்துணர வைக்கின்றார்.

மரத்தின் அடிவேர், மரமுழுவதற்கும் உரிய உணவைப் பக்குவப்படுத்தி மரத்தின் உச்சியிலுள்ள கொழுந்து வரையில் காணும் எல்லா உறுப்புகட்கும் அளித்துக் காக்கின்றது. தான் மட்டும் பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் தரையின் கீழிருந்து பணிபுரிகின்றது. இவ்வாறு மறைந்து நின்று மரத்தின் உயிரை வளர்க்கும் வேரானது, "மரத்தின் பிறபகுதிகளெல்லாம் பலர்

* இது கணவனது உடல் நலத்தைப் பாது காத்தலை மட்டும் குறிப் பதன்று' அவன் குணநலத்தையும் கவனித்துத் தக்க முறையில் அதைப் பாதுகாத்து வருதலையும் குறிக்கும். (உ-ம்) மங்கையர்க்கரசியார்.

போற்ற வெளிப்பட்டிருப்பது போல, நாமும் ஏன் வெளிவரலாகாது''என்று நினைத்துத் தரைக்குமேல் வந்து விட்டாலோ?.... ....மனையறத்தின் வேர் ஆகி விளங்குவதற்குரிய மனைவி, எந்த நிலையிலும் மனையறத்தில் வேறு ஆகி நிற்றல் வருந்தத்தக்கது என்பது தேற்றம்.

"A Woman's greatest glory is to be little talked about by men, whether for good or evil''என்றார் பண்டைக் கிரேக்கப் பெருந்தலைவர் பெரிகிலிஸும்.

" The dignity of woman consists in being unknown to the world. Her glory is the esteem of her husband, her pleasure, the happiness of her family'' என்றார் அறிஞர் ரூஸோவும்.

——— (அடுத்த இதழில் முடியும்)

பொங்கலே வருக!

நல்ல தமிழ்ப் பொங்கலே வருக — தமிழ்
நாட்டுவளம் செழிக்கவே வருக
எல்லையில்லா இன்பமே வருக — எழில்
என்றென்றும் நிலைத்திடவே வருக

அள்ளிஅள்ளிப் பருகிடவே வருக — உந்தன்
அறுசுவையில் திளைத்திடவே வருக
தெள்ளுதமிழ்ச் செல்வமே வருக — தமிழர்க்குத்
தெம்பூட்டும் திருநாளே வருக

உழைப்போரின் கண்களே வருக — உலகில்
உயர்ந்தோரின் எண்ணமே வருக
விளைந்திடுக நன்மையென வருக — உள்ளம்
வீறுகொள்ளப் பொங்கலே வருக!

ஏ. பி. எஸ். மணி
29, உஸ்மான் ரோடு, சென்னை - 17.

நீறணி அம்பலவன்

பேராசிரியர், திரு. ஜி. சுப்பிரமணியம் அவர்கள் M. A. ,B. L.
அண்ணமலைநகர்.

-oo○oo-

ஒரு தலைமகள் ஒரு தலைமகனைத் தனியாய் ஒரு சோலையில் தற்செயலாய்ச் சந்தித்தாள். இருவரிடையும் காதல் பிறந்தது. பிறகு பல நாட்கள் அவனை அவ்வாறே அவள் சென்று கண்டு பழகி வந்தாள். எப்பொழுதும் அவனுடன் பிரியாது இருக்க முடியவில்லையே என்று வாடினாள். இது அவள் தோழிக்குத் தெரியாது. தலைவி பிரிந்து சென்று வந்த பொழுதெல்லாம் தோழி கேட்டதற்குத் தான் ஓர் அழகான மயில் நின்று ஆடுவதைச் சென்று கண்டு வந்ததாகக் கூறி உண்மையை மறைத்தாள். மகிழ வேண்டிய அதற்கு வாட்ட முறுவானேன் என்று தோழி கேட்ட பொழுது தலைவி 'நீயும் அந்த மயிலைக் காணப் பெற்றிலையே என்று வாடினேன்' என்றாள். இதைக் கேட்டதும் தோழிக்கு ஐயம் உண்டாகியது. ஒரு நாள் அவள் தலைவியின் பின் மறைவாகச் சென்று உண்மையை அறியலானாள். தலைவி கண்டு வந்த மயில் உண்மையில் மயில் அன்று என்பதையும், தலைவியின் காதலனே அந்த மயில் என்பதையும் தோழி உணர்ந்து கொண்டாள் அதன்பின் தலைவனே தோழியிடம் சென்று குறையிரந்து, தலைவியுடன் தன்னைச் சேர்த்து வைக்கும்படி வேண்டவும், தோழியும் குறைநேர்ந்து பகற்குறியின்கண் குறியிடத்திற்குத் தலைவியை அழைத்து வருவதாக வாக்குக் கொடுத்தாள். அவ்விதம் ஒப்புக் கொண்டபடி தலைவியைத் தலைவனிடம் எவ்வாறு அழைத்துச் செல்வது என ஆராயலானாள். தலைவனைத் தான் கண்டு கொண்டதாகத் தலைவியிடம் கூறினால், ஒரு வேளை அவள் நாணத்தால் மறைக்கக் கருதி மறுத்துவிடக் கூடும். அவ்விதம் நேர்ந்து விடாதபடி அவளைத் தந்திரமாய்க் கூட்டிச் செல்ல வேண்டும்.

எனவே, "தினைப்புனங் காத்து வருவோம், வா" என்று தோழி தலைவியை அழைக்கிருள். தினைக்காவலைத் திடீரென்று இவள் ஏன் பெரிதாகக் கருதினுள் என்ற ஆராய்ச்சி தலைவிக்கு நிகழாதபடி உடனே, "நாம் விளையாடியும் வரலாம், வா"என்று அழைக்கிருள். என்னென்ன விளையாட்டுகள்? அது மலைப்பக்கம் ஆனதால் குகை வாயிலில் கூவியழைத்து எதிரொலி கேட்டு மகிழ்தலாகிய சிலம்பெதிர் கூவுதல் என்னும் விளையாட்டு, சிறு வீடுகட்டிச் சிறுசோறு சமைத்தல், சுனைநீர் பொங்கக் குளிர் புனலிற் பாய்ந்து குள்ளக்குடைந்து குதித்துக் குளித்தல், மலர் களைப் பறித்து மாலை தொகுத்தல் ஆகிய இவற்றை யெல்லாம் செய்துகொண்டு, பிறகு, தினமும் தலைவி கண்டதாகச் சொன்னுளே அந்த மயிலையும் பார்த்துவிட்டு வரலாம் என்று தோழி அழைக்கிருள். இவ்வாறு அவள் அழைப்பது எவ்விடத் திற்குத் தெரியுமா? பணிவார் வினையைப் போக்கத் திருநீறு அணியும் சிவபெருமானின் மலையாகிய கயிலாய மலைக்குத்தான். இதோ பாடல் வருமாறு:—

"தினைவளங் காத்துச் சிலம்பெதிர் கூய்ச்சிற்றில் முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர் கொய்து தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணி அம்பலவன் மலையிற்
புனைவளர் கொம்பரன்னு யன்ன காண்டும் புனமயிலே."

(திருச்சிற்றம்பலக் கோவை).

மயிலையுங் கண்டு வருவோம் என்று சொன்னுள், தலைவி மருது வருவாள் என்னுங் கருத்தாலும், தனக்கு உண்மை ஒரு வாறு தெரியும் என்பதைக் காட்டவும் என்க. தலைவனையும் கண்டு வரலாம் என்று தோழி கூறுவது நாகரிகமாகாது ஆதலால், குறிப்பாக, 'அன்னகாண்டும் புனமயிலே' என்ருள்.

இது சிற்றின்பத் துறையில் 'குறியிடத்துக் கொண்டு சேறல்' என்பதாகும். ஆனுல் இதுவெறும் அகத்துறையில் அமைந்த ஊனப்பாடல் அன்று; பேரின்பத் துறையில் அமைந்த பெருஞானத் திருப்பாடல் என்பதை நாம் அறிதல் வேண்டும். 'அருமையிற் சிவத்தை உயிரிடத்துய்த்தல்' என்பது இந்தப் பேரின்பத் துறையாகும். இதில் மாணிக்கவாசகர் நம்மை நேரே சிவனிடத்துக்கே அழைத்துச் சென்று சிவ தரிசனம் செய்து

வைக்கிறார். தில்லைக் காட்சியைக் காட்டி நம்மைக் கயிலாய மலைக்குக் கைகாட்டி அழைக்கிறார். சிவனை அடைவதற்குரிய வழி வகைகளை உள்ளுறையாக அமைத்து அழகுபெற அவர் காட்டுவது வியத்தற்குரியதாகும். ஆகவே சிவத்தை உயிரிடத் துய்த்தல் என்று சொல்வதைவிட, உயிரினைச் சிவத்திடத் துய்த்தல் என்று துறையமைதி கூறுவது மிகவும் ஏற்புடைய தாக இருக்கும். இதனைச் சிறிது விளக்குவாம்.

உலகியலில் தினைவளங்காத்தல் என்பது விளைந்து கிடக்கும் தினைப்புனத்தைப் பறவைகளும் விலங்குகளும் வேடர்களும் சூறைகொண்டு விடாமல் காப்பதாகும். பேரின்பத்துறையில், உண்மை என்னும் உழவைச் செய்து, அன்பு என்னும் விதையை விதைத்துப் பொய்ம்மை என்னும் களையைக் களைந்து, பொறுமை என்னும் நீரைப்பாய்ச்சித் தகவு எனும் வேலி கட்டித் தம்மையும் நோக்கிக் கண்டு செம்மை மனத்தராய்ச் செயற்படுவதுதான் புனங்காத்தலாகும். இங்ஙனம் செம்மை மனத்தராய் ஒழுகும் சீவன் முத்தர்களுக்குச் சிவானந்தம் மேலிடுவதை விளக்க எழுந்ததுதான் வள்ளியம்மை திருக்கலியாண வரலாறு என் பதையும்நாம் இங்கு நினைவு கூர்தல் தகும். இதனை அப்பரடிகள் விளக்கியுள்ளமையும் ஈண்டு அறிதற்பாலது.

"மெய்ம்மையா முழவைச்செய்து விருப்பெனும் வித்தைவித்திப்
பொய்ம்மையாம் களையைவாங்கிப் பொறையெனு நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற் சிவகதி விளையுமன்றே."

சிலம்பெதிர் கூவுதல் என்பது மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று. மலைக்குகை வாசலின் முன்நின்று கூவி, அங்ஙனம் கூப்பிட்ட குரலே மீண்டும் புரண்டு எதிரொலியாய்த் தம்மிடம் வரக்கண்டு சிறுமிகள் மகிழ்வார்கள். பின்னர்க் கணவன் கூறுவதையே தானும் கூறி வாழும் வாழ்க்கையை மேற் கொள்ளும் ஒரு பெண்ணுக்கு இது ஒரு நல்ல பயிற்சியாகப் பண்டைக்காலத்தில் கருதப்பட்டது. இது உலகியல். பேரின்பத் துறையில், உயிர் தன்முனைப்பு அடங்கித் தன் அறிவு இச்சை செயல்களை யெல்லாம் இறைவன் வசம் கொடுத்துவிட்டு, அவ னுடைய அறிவு இச்சை செயல்களிலே அருள் அறிவு கொண்டு

பணியாற்றுதல் வேண்டும். இதற்குப் பயிற்சியாக, இதயமாகிய குகையிலே சிவாய நம ஓம் என்னும் ஐந்தெழுத்தோடு கூடிய ஓங்கார மந்திரத்தை ரீங்காரம் செய்யவிட்டு எதிரொலிகேட்டு உயிர்ப்பு அடங்கியிருத்தலே சிலம்பெதிர் கூவுதலாகும்.

சிற்றில் முற்றிழைத்தலாவது, சிறுவீடு கட்டிச் சிறு சோறு சமைத்துச் சிறு பெண்கள் விளையாடும் விளையாட்டு; பின்னர்த் தாம் நடத்தும் இல்லற வாழ்க்கைக்கு வழி கோலுவதாக உள்ள தொரு சிறந்த பயிற்சி இது. பேரின்பத் துறையில், சீவன் முத்தர்களாக உள்ளவர்கள் இன்பமாகிய வீட்டினை இம்மையிலே அடைந்து வாழ்தல். சிவன் திருவடிக்குத் தொண்டு செய்து வாழ்தலே இத்தகைய நிலையைத் தரும். அதுவே இங்குச் சிற்றில் இழைத்தல் என்பதாகும்.

உலகியலில், மகளிர் பொய்கையில் குளித்துப் போதுபோக்குதல் சுனைவளம் பாய்தலாகும்; பேரின்பத்துறையில் சுனை பாய்தலென்பது, மலபரிபாக முற்ற உயிர்கள் சிவனருளில் தோய்ந்து குடைந்துகுடைந்து ஆடுதலாகும். இதனைத் திருவெம்பாவைப் பாடல்களிற் பரக்கக் காணலாம்.

துணை மலர்கொய்தல் என்பது பெண்கள் விளையாடவும் தலையிற் சூடவும் வேண்டும் மலர்களைப் பறிப்பதாகும்; பேரின்பத் துறையில் சிவனடியார்கள் சிவனுக்குகந்த மலர்களை முறைப்படி கொய்து அர்ச்சனை செய்தலைக் குறிக்கும்.

இவையனைத்தும் சிவனை அடைவதற்குரிய நெறிமுறைகள். இவற்றைக் குறிப்பாக நமக்கு உணர்த்தியதோடு சிவனை அடைவதற்குச் சிறந்த சாதனமான மற்றும் ஒன்றை வெளிப்படையாகவும் கூறியுள்ளார். எவ்வாறு கூறினர்? "தொழுதெழுவார் வினைவளம் நீறெழ நீறணி அம்பலவன்" என்றார். தொழாநின்று துயிலெழுவாருடைய வினையினது பெருக்கம் பொடியாகத் தன் திருமேனிக்கண் திருநீற்றையணியும் தில்லைச் சிற்றம்பலவன் - என்பது அதன் பொருள். துயிலெழுவார் என்றது, துயிலெழுங் காலத்தல்லது முன்னுணர்வின் மையான், உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார் என்றவாறு. நீறணிந்த கோலம் நெஞ்சம் பிணிக்கும் எழிலுடைமையான் அக்கோலம் தொழுதெழுவார் உள்ளத்து நீங்காது நிற்றலான்

ஆண்டுள்ளவினை நீறும் என்னும் கருத்தான், வினைவளம் நீறெழ நீறணியம்பலவன் என்றார். குழந்தையினது பிணிக்குத் தாய் மருந்துண்டாற் போலத் தொழுதொழுவார் வினைக்குத்தான் நீறணிந்தான் என்க. நம்முடைய வினைச் சுமையானது மலை போலக் குவிந்து கிடத்தலான் நாம் அணியும் திருநீறுமட்டும் அதனைப் பொடியாக்கப் போதாது என்று சிவபெருமானும் நம் மீது கொண்ட பெருங் கருணைப் பெருக்கால் திருநீறு நிறையப் பூசுகின்றான் என்க. சிவன் அணிகின்ற திருநீறு அவனது பேரருளையே காட்டுவதாகும். இதனால் சிவனை அடைதற்குத் திருநீறு அணிவதும், சிவனது திருநீறணிந்த கோலத்தைத் துயிலெழும் பொழுது பணிவதும், அத்திருக்கோலத்தை இடை விடாமல் சிந்தித்திருத்தலும் சிறந்த சாதனங்களாகும். இப் பயிற்சியால் நம் வினைகள் பொடியாவது திண்ணம். இவ்வாறு தீராத வினைகளை எல்லாம் தீர்த்து வைப்பது திருநீறு என்பதை அப்பரடிகளும் குறிக்கின்றார்:-

"சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாம வேதி
அந்தரத் தமரர் பெம்மா னானல்வெள் ளூர்தி யான்தன்
மந்திரம் நமச்சி வாய வாகநீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட் டன்றே."

நீறணிந்த கோலம் நெஞ்சைப் பிணிக்கும். அதை நினைக்க நினைக்க நெஞ்சை உருக்கும். சிவன் தோளில் திருநீறு பூசி யிருக்கும் கோலத்திலே மனத்தைப் பறிகொடுத்து அக்காட்சி மறையவும் நெக்கு நெக்குருகி நீள நினைந்து தவித்து மணி வாசகர் எவ்வாறு பாடுகிறார் பாருங்கள்.

"மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையையெம் மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றில மினியுனைச் சிக்கெனச் சிவனவன் திரள்தோள்மேல்
நீறு நின்றது கண்டனை யாயினும் நெக்கிலை இக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது கேட்கவுங் கில்லேனே."

தில்லையம்பலத்திலே சடையை விரித்தாடுகின்ற கூத்தப் பெருமான் கயிலாயத்திலும் மயில்போல் ஆடற் கோலத்தை அருளுவான் என்பார்' "அன்ன கான்டும் புனமயிலே" என்றார். சடையை விரித்தாடும் சிவபெருமானுக்குத் தோகையை விரித் தாடும் மயில் பொருந்துவதாயிற்று.

பேராண்மை

திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள் M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
சரபோசி மன்னர் கல்லூரி, தஞ்சாவூர்.

ஆண்மை, அஃதாவது வீரம் இருவகையினதாகும். ஒன்று உடம்பை யொட்டி எழுவது; இன்னொன்று உள்ளத்தை யொட்டி எழுவது. முன்னது விலங்குணர்வின் வலிமை; பின்னது ஆன்மீக பலம். முன்னது அழியும் தன்மையது, பின்னது அழியாத் தகைமைத்து. உடம்பினை ஒட்டிய ஆண்மை எத்துணைதான் ஆற்றல் சான்றதாகவும், பெருங்காட்சி, படைப்பதாகவும் இருப்பினும், நிலையில்லாதது-நீடுநிற்க இயலாதது. ஆனால் இதயத்தைச் சார்ந்தெழும் ஆண்மையோ தோற்றத்தில் வலிமை இல்லாதது போன்று தோன்றிடினும் நிலையாயது, தலையாயது, உலையாதது. விலங்கு வீரம் விரைவில் பரவி, விதந்தோதப்படும் வளமையது; அதேபோல் விரைந்து மறைந்து சிதைந்தும் ஒழியக் கூடியது. ஆன்மீக பலமோ எளிதே ஏற்றம் பெறாதது—மெதுவாக வலுப்பெறும் வளமையது; என்றாலும் என்றும் மாறாதது-மறையாதது. சுருங்கக் கூறின் உடல் பலம் முதலில் வெற்றி பெற்று இறுதியில் படுதோல்வியடைவது; ஆனால் ஆன்ம பலமோ முதலில் வெற்றி பெறாது இறுதியில் வெற்றி பெறுவது. இங்கே, 'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், தருமம் மறுபடி வெல்லும்' என்ற அடி நினைவுகூரற்பாலது.

இங்கே, நெப்போலியன், அலெக்சாண்டர், ஹிட்லர் போன்றாரின் உடம்பினை யொட்டிய வெறி-வீரம் எங்ஙனம் அவர்கள் காலத்தே கண்டு அஞ்சப்பட்டு, பின் எவர் மனத்திலும் தங்கா வகையில், நினைக்கப்படாத் தன்மையதாய் மாய்ந்து மறைந்து மறக்கப்பட்டது என்பதையும், ஏசு, புத்தர், நபிகள் நாயகம், ஆபிரகாம் லிங்கன், காந்தி, கென்னடி போன்றாரின் உள்ளத்தை

யொட்டிய நெறி-ஆண்மை முன்னே உணரப்பெருது இன்று எல்லோர் நெஞ்சத்திலும் நிலேத்து நின்று இதயத்தை இளகச் செய்கின்ற திறத்தையும் கருதின், உடல் பலத்தைக் காட்டிலும் உள்ளபலம் உயர்ந்தது, அழியாதது - அல்லதைக் காட்டிலும் நல்லதே வன்மையானது என்பதறியலாம்.

இதுகாறும் கூறியதன் பிழிவு: மாந்தனுக்கு உடலே யொட்டிய விலங்குணர்ச்சியும் உள்ளத்தை யொட்டிய ஆன்மீக உணர்வும் உண்டென்பதும், முன்னது பேராற்றல் வாய்ந்ததாகத் தோன்றிடினும், உண்மையில் வலிமை சான்றது பின்னதே என்பதுமாகும். எடுத்துக் காட்டு ஒன்று காண்போம்: நம்மைச் சிலர் சூழ்ந்துகொண்டு தடிகொண்டு தாக்குகின்றனர் என்று வைத்துக் கொள்வோம். எதிர்த்துத் தாக்குவது உடலாற்றல்; இதற்குத் திறம் வேண்டியதின்று; வலிபொறுக்க மாட்டாமையால் நம்மையும் மீறி எதிர்க்கின்றோம். ஆனல் அந்த அடியையும் பொறுத்துக் கொண்டு வாளா இருப்பதற்கு நெஞ்ச உறுதி வேண்டும்; அதைவிட அத்துன்பம் செய்தோனுக்கு நன்மையும் செய்வதற்கு நெஞ்சப் பாங்கு நிறைந்திருத்தல் வேண்டும். நம் கன்னத்தில் அடித்தவனேத் திருப்பி அறைவது எளிது; ஆனல் அறைந்தவனுக்கு மறு கன்னத்தையும் காட்டுதல் அரிது. நம்மினும் வலியார் நம்மைத் தாக்குங்கால் நம்மால் ஒன்றும் செய்ய இயலாமையால் வறிதே இருந்து விடுவோம்; இதற்கென நெஞ்ச உறுதி வேண்டுவதில்லே. எதிர்த்துத் தாக்குவோமாயின் அழிந்து விடுவோம், ஆதலின் வாளாவிருந்து விடுகின்றோம். ஆனல் நம்மினும் எளியார் நமக்கு ஊறு செய்தக்கால் நாம் உடனே சினந்து சீறி எழுகின்றோம். 'செல்லிடத்துக் காப்பான் சினம் காப்பான்' என்பதற்கேற்ப இங்கே அடங்கி இருக்க இயலுமா? இயலாத ஒன்றைச் செய்வதற்கு மனவலிமை வேண்டும். ஒறுப்பதற்கு உளவலிமை தேவையில்லே; பொறுத்துக் கொள்வதற்கே உளவலிமை வேண்டும். இன்ன செய்தார்க்கு இன்ன செய்வது எளிது; இனியன செய்வது அரிது. உடல் வலிமையைவிட அதனேயும் அடக்கும் மன வலிமையே உயர்ந்தது; ஒண்மை சான்றது.

இதனுற்ருன் வள்ளுவர் உடல் பற்றியதை ஆண்மை என்றவர், உளம் பற்றியதைப் பேராண்மை என்ருர். வீறுகொண்டு

எழுவது வீரம்; ஆற்றல் இருந்தும் அடங்கி இருப்பது பெரு வீரம். சுருங்கக் கூறின் வீரம் என்பது உடலாற்றல் மட்டு மன்று மனவாற்றலையும் குறிக்கும். மல்யுத்தக்காரரின் ஆற்றலும் வீரமே; காந்தியடிகளின் அடங்கிய அருள் நிலையும் அகிம்சையும் வீரமே. முன்னதைக் காட்டிலும் பின்னதே பேராற்றல் வாய்ந்தது. உடலை அடக்கிவிடலாம்; உள்ளத்தை அடக்க இயலாது. எனவேதான் பெண் வழிச் செல்லும் உள்ளத்தை எவராலும் அடக்க இயலாது. அதனை அடக்குவது பேராண்மை என்றார் வள்ளுவர். ‘பிறன்மனை நோக்காத பேராண்மை’ என்பது காண்க.

பிறன்மனை நோக்காத ‘ஆண்மை’ என்று கூறியிருக்கலாம். பிறன்மனை நோக்காது இருப்பது எல்லோர்க்கும் எல்லாக் காலங் களிலும் இயலுமா என்பது ஐயமே! ‘மனமென்னும் குரங்கை இழுத்துக் கட்டினாலும் அது பல்லை இளிக்கத்தான் செய்யும்’; அம்மனத்தை அடக்கின் அஃது ஆண்மை மட்டுமன்று பேராண்மையுமாகும். இங்கே இன்னொன்றையும் நோக்குதல் வேண்டும். பிறன்மனை பார்க்காத பேராண்மை என்று கூறாது, நோக்காத என்கிறார். பார்ப்பது வேறு, நோக்குதல் வேறு. பார்ப்பது கண்கொண்டு பார்ப்பது (glance) அவ்வளவே; மனத் திற்கு அங்கு அவ்வளவாக வேலையில்லை. ஆனால் நோக்குதல் என்பது மனத்தைச் செலுத்திக் காண்பது, கருத்துடன் காண்பது (look). எத்தனையோ பொருள்களை நாளும் காண்கிறோம்; கண்ட அளவே மறந்து விடுகின்றோம். அங்கே கண் மட்டும் பார்க் கிறது, மகிழ்கிறது, மறக்கிறது. ஆனால் சிற்சிலபோது கண் ணோடு மனமும் ஒன்ற ஒன்றினைக் காண்கிறோம். காட்சிப் பொருள் மறைந்தாலும் காட்சி கருத்தை விட்டுமறைவதில்லை நெஞ்சத்தோடு சென்று நினைவுக்கு வந்து அலைக்கழிக்கின்றது. இது பார்ப்பதற்கும் நோக்குதற்கும் உள்ள ஒரு வேறுபாடாகும். இதனால்தான் வள்ளுவர் ‘பிறன்மனை நோக்காத பேராண்மை’ என்றார்.

பிறன் மனைநோக்காத பேராண்மை தமிழ்ப் பண்பாட்டின் தனிப் பெருந்தலையாய நிலையாகும். பிறன் ஒருவனுக்குரிய மனை வியை எண்ணத்தோடு ஏறெடுத்துப் பாராத இப்பண்பு இனிய

பண்பு! இன்தமிழர் பண்பு! வள்ளுவருடைய இவ்வினிய இலக்கணத்திற்கு இன்தமிழ் இலக்கியங்கள் சில அணி செய்து விளங்குகின்றன, விளக்கம் தந்து ஒளிர்கின்றன. வள்ளுவர்தம் 'பிறன்மனை நோக்காத பேராண்மை' எனும் ஒளிக்கற்றை திணைமாலை நூற்றைம்பது, திருக்கோவையார், கலிங்கத்துப் பரணி, வேதநாயகர் நீதிநூல் போன்ற இலக்கியப் பனுவல்களில் ஊடுருவி ஒளிவீசி நின்று ஒண்தமிழ் இன்ப மூட்டுகின்றது. தமிழரின் விழுமிய பண்பின் பிழிவாம் பிறன்மனை நோக்காத பேராண்மை என்ற இவ்வரி, பின்னைய இலக்கியங்களில் விளக்கமுற்று அமைந்தொளிரும் இவ்வழகும் அதன்கண் பிறங்கும் பைந்தமிழரின் நெஞ்சக் கனிவும் மென்மையும் காண்போம்:

தலைவன் தான் காதலித்தவளை மணம் புரிந்து கொள்ள அவளது பெற்றோர் மறுக்கும் சூழலில், தோழியின் உதவி கொண்டு காதலியை அழைத்துச் சென்றுவிடுகிறான்–உடன் போக்கு நேர்கின்றான். செய்தியறிந்த செவிலித்தாய் இடைச் சுரம்வரை சென்று இருவரையும் தேடினாள். அதுபோது தொலைவில் ஆணும் பெண்ணுமாய் இருவர் வரக் கண்டனள். ஒரு வேளை தன்மகளும் அவளது காதலனும் வருகின்றனரோ என ஆர்வத்தோடு நோக்கினாள். அண்மையில் வந்ததும் தம்மவர் இல்லையெனத் தெளிகின்றாள். ஒரு வேளை தன் மகளையும் மருமகனையும் வரும் வழியில் எதிர்ப்பட்டிருத்தல் கூடும் எனக் கருதி அவர்களை வினவி அறிய முற்படுகின்றாள். 'உம்போல் இருவர் இவ்வழியே செல்லக் கண்டதுண்டோ?' என வினவினாள். விடை தருகின்றான் ஆண் மகன் 'ஆதவனை யொத்த ஆற்றல்; அதற்குசான்ற ஓர் ஆண்மகனை யான் பார்த்தேன்; என் துணைவி, சந்திரனை யொத்த அமைதி மிக்க பெண்ணைக் கண்டனளாம்' என்று கூறுகின்றாள். இவ்வாண் மகன் தான் துணைவியுடன் வரும்போது எதிரில் ஆணும் பெண்ணுமாக இருவரைப் பார்த்தான்; அதிலும் தன்னையொத்த ஆண் மகனை நோக்கினான்; உடன் சென்ற பெண்ணை உற்று நோக்கினான் இல்லை. எனவே தான் சூரியனை யொத்த வெம்மை சான்றவனைத் தானே கண்டதாகக் கூறினான். அங்ஙனம் கூறின் செவிலித்தாய் கேட்ட கேள்விக்கு முழுவிடை யிறுத்ததாகாது அன்றோ? ஆதலின்

ஒருவர் பற்றிச் சொல்லியவன் இன்னொருவரைப்பற்றிச் சொல்ல வேண்டும். இன்னொரு உருவமோ பெண்; அதனை இவன் நோக்கவுமில்லை; நோக்க வேண்டிய அவசியமுமில்லை. ஆயினும் வயதில் முதிர்ந்த தாய் ஒருத்தி வினவும் போது பதில் கூறு திருத்தல் ஒல்லுமோ? ஆகலின் தன்மனைவி அப்பெண்ணைக் கண்டது அறிந்து, தண்மை பொருந்திய சந்திரனை யொத்த பெண்ணைத் தன் மனைவி கண்டதாகக் கழறுகின்றான். இங்கே தான் கண்டதாகவே கூறாது மனைவி கண்டதாகக்கூறுகின்றான், அப்பிறன்மனை நோக்காப் பெருவீரன். இது திணைமாலை நூற்றைம்பது தரும் ஒவியம் :

வெஞ்சுட ரன்னானை யான்கண்டேன்; கண்டாளாந்
தண்சுட ரன்னாளைத் தான். (திணைமாலை நூற்-89).

திணைமாலை நூற்றைம்பது தலைவன், தான் கண்டதாகக் குறிக்காது, தான்கண்ட தலைவனோடு இன்னொரு பெண் சென்றதாகத் தன்மனைவி கண்டு கூறியதாகக் கூறுகின்றான். இதனால் தெரிவது யாதெனில், ஆண் மகன் ஆணையே கண்டான்; பெண் பெண்ணையே கண்டாள். இத்தலைவன் இவ்வாணுடன் ஒரு பெண் சென்றதாகக் கூறியதாகக் கூறுகிறான். ஆனால் திருக்கோவையார் தலைவனோ ஒரு பெண் சென்றாளா என்று தன் துணைவியிடம் கேட்கவுமில்லை, கேட்டறிந்து தான் கண்ட தலைவனோடு ஒரு பெண் சென்றதாக உரைத்தானுமில்லை. பெண் என்று கூடத் தன் வாயால் கூறாது. தனக்குத் தெரிந்ததை-தான் ஆண்மகனைக் கண்டதை மட்டும் கழறி, தெரியாததைத் தன் மனைவியையே இயம்புமாறு செய்து விடுகின்றான்-பெண் என்று கூட இயம்பும் அளவிற்குச் செல்லாது அமைகின்றான்.

(அடுத்த இதழில் முடியும்)

குற்றஞ் செய்யினும் குணம் எனக் கருதும் கொள்கை

கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்,

வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,

திருவையாறு.

வன்றொண்டப் பெருந்தகையார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இவர்கள் தேவாரங்களை நன்கு ஆராய்ந்து செம்பொருள் கண்டவர். நாவுக்கரசர் பாடிய பாடலின் தொகையை "இணைகொள் ஏழெழுநூறு இரும்பனுவல் ஈன்றவன் திருநாவினுக்கரையன்" என்று முதலில் வெளிப்படுத்தியவர் இவரே ஆவர். பல கூறுதல் வேண்டாம்.

நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்
　　நாவி னுக்கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
　　கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினும் குணம்எனக் கருதும்
　　கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
　　பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே.

என்ற இவரது திருப்பாட்டு ஒன்றே அடியார்களின் வரலாற்று நுட்பங்கள் எவ்வாறு இவரால் அறியப்பட்டுள்ளன என்பதற்கு உறு சான்றாகும். ஆகையால்தான் சேக்கிழார், இவரை "நுணங்கிய கேள்வி மேலோன்" என்றார்.

திருப்புன்கூர்ப் பெருமானே! ஞானசம்பந்தர் முதலிய எண்மரும் செய்த குற்றங்களைக் குணமாகக் கொண்டருளிய உமது கொள்கை கண்டு உமது திருவடி அடைந்தேன் என்னும் கருத்

தமைந்த இத்திருப்பாட்டில் இவர்கள் செய்த குற்றங்கள் யாவை? அவை எங்ஙனம் குணமாகக் கொள்ளப்பட்டன என்பனவற்றை ஒரு சிறிது ஆராய்வாம்.

சம்பந்தப்பெருமான் செய்த குற்றம் யாது? சமணர்களைக் கழுவேறவிட்டு, பல உயிர்க் கொலைக்குக் காரணமாய் இருந்தனர் என்பர். இக்கொலைப்பாதகம் எவ்வாறு குணமாகக் கருத இடந் தருகிறது என்னில், சமணர்கள் தாங்கள் தோற்ருல் கழுவேறு வோம் என்று சபதங் கூறினர். ("தனிவாதில் அழிந்தோமாகில் வெங்கழுவேற்றுவான் இவ்வேந்தனே" என்று சொன்ஞர், திருஞானசம்பந்தர் புராணம் பாடல் 798). அன்றியும், அவர்கள் தங்கள் சமய நெறியாகிய கொல்லாமையில் ஒழுகிற்றிலர். அதோடு அமையாமல், அயல் மதத்தார்க்குப்பல இன்னல்களையும் செய்து துன்புறுத்தினர். உதாரணமாகச் சம்பந்தப்பெருமான் அடியார் திருக்கூட்டத்தோடு எழுந்தருளியிருந்த மடத்தில், நள்ளிரவில் நெருப்பிட்டனர். சம்பந்தப் பெருமான் அல்லது, பிறர் அங்குத் தங்கியிருந்தால் எத்தனை உயிர்கள் இறக்க நேர்ந் திருக்கும். ஒரு கொலை செய்வதினும் தூங்குவோர் இருக்கும் வீட்டில் நள்ளிரவில் தீ வைப்பது ஒரே சமயத்தில் பலரைக் கொன்ற பாவத்தினும் கொடியதாகும். ஆதலின் மதுரையில் சமணர்கள் அத்தனைபேரும் கொலைஞர்களும் கொலைக்கு உடன் பட்டவர்களும் ஆவர். ஆதலில்,

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனெடு நேர்"

என்றபடி அவர்களைக் கொல்ல வேண்டியது அரச தர்மம் ஆயிற்று. அவர்கள் உயிரோடு இருப்பின் இன்னும் பல பாத கங்கள் செய்து பாவத்திற்கு ஆளாகாமல் இருக்கவேண்டு மென்ற தன்னலமற்ற உயர் பெருங்கருணையினுல் அக்கொலைத் தண்டனையை விலக்காது இருந்தனர். அவ்வாறு சம்பந்தப் பெரு மான் அவர் கொலைக்கு உட்பட்டது சிவஞானசித்தியாரில்,

"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள்"

எனத்தொடங்கும் பாடலின்படி (சிவஞான சித்தியார் சுபக்கம் 106) சம்பந்தப்பெருமான் விலக்காமை அவர் பேரருளையே

குறிக்கும். ஆகையால் மெய்யுணர்வில்லார்க்குக் குற்றமாகக் காணப்படும் இச்செயல் குணமாகக் கருதப்படுதற்கு உரியது என்க.

திருநாவுக்கரசர் செய்த குற்றம் யாது? சைவ சமயத்தில் பிறந்த இவர் சமணம் புக்கமை.

அம்மதத்தில் தமக்கு ஓர் உயர்ந்த பதவி (தருமசேனர்) தந்தவர்களை அலட்சியஞ் செய்து நள்ளிரவில் அவரை விட்டு ஓடிவந்து துரோகஞ் செய்தது.

தம்மை ஆதரித்த சமணர்க்குப் பலதீமை விளைதற்குக் காரணமாய் இருந்தமை, குணமாகக் கருதுவதற்கு இடம் தருவது யாங்ஙனம்?

"பண்டுபுரி நற்றவத்துப் பழுதினளவிறை வழுவின"

தன்மையால் இவர் சமண சமயம் புகுந்தார்.

கொல்லாமை மேற்கொண்டொழுகுதல்,

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்ற திருக்குறளின்படி சிறந்த அறமாகிய கொல்லாமையையே தங்கள் சமயக் கொள்கையாகக் கொண்ட தன்மையை அறிந்தார். அந்நெறியில் நின்று கொல்லாமையை நாட்டி உலகினற்கு நன்மை செய்ய நாடினர். சமணர்களது கொள்கை வெறும் பேச்சளவில் இன்றி முழுவதும் கொலையே என்பதை முற்படவே அறிந்திருப்பாராஞல் ஒருக்காலும் சைவத்தினின்று சமணம் புகார். இதனைச் சேக்கிழார் பெருமான் "கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயங் குறுகுவார்" எனத் தெரிவித்து அருளுகின்றார்.

இவர்க்குச் சகித்தற்கரிய கொடிய சூலைநோய் உற்றது. சிறிதளவேனும் பொறுத்துக் கொண்டிருக்க அவரால் முடியவில்லை. கொடிய துன்பத்தை நீக்குவதற்குரிய வழி எத்தகையதாயினும் அவ்வழியில் முயல்வது உலக இயற்கை. ஆகவே தாம் புக்க சமண சமயவழி, மந்திர தந்திரங்களால் நீக்கிக் கொள்ள முயன்றார். அதனால் தம் நோய் நீங்காது என்று

கண்ட பின்புதான், தமக்கையாரை நினைந்தார். ஆகையால் சமண சமயத்தை அழிக்க வேண்டும் என்பதும், நிந்திக்க வேண்டு மென்பதும், அவர் கருத்தன்று. நள்ளிரவில் வாராமல் பிறநேரங்களில் புறப்பட்டிருப்பரேல் அச்சூலையால் சமணப் பள்ளியிலே உயிர் துறந்திருப்பர். தற்காப்புப் பொருட்டு, பிறர்க்குத் துன்பம் நேராத வழியில் அவர்செய்த முயற்சி (ஓடி வந்தது) ஒரு துரோகமும் ஆகாது.

இடறவந்தயானை சமணரைக் கொன்றது போன்ற தீமைகள் அப்பருக்குத் தெரியாது. (இவர் காரணல்லர்).

சமண மதத்தைக் கைக்கொண்டிருந்த அரசனே சைவத்தின் உயர்வும், சமணத்தின் இழிவும் பகுத்துணர்ந்து சைவம் புக்கமை யால் பிறரும் தாமாகவே சைவம் புக்கமையின் திருநாவுக்கரசு பெருமானுர் அம்மதத்துக்குத் துரோகம் செய்தவரும் ஆகார்.

ஆகையால் அவர் பால் குற்றம் எனத்தோன்றுவது குண மாகக் கருதுதற்கு ஏற்றதாய் இருந்தது.

சூதன் — மூர்க்கநாயனுர். இவர்க்குக் கொடுத்த அடை மொழி கற்ற என்பது. நிதி தேடுவதற்கு வழியாக, சூதாட்டம் ஒன்றையே கற்ற என்பது இதற்குப் பொருள். இதனைச் சேக் கிழார் சுவாமிகள் "தங்கும் வகையாற் ருமுன்பு கற்ற தன்மை நற்சூதால்" என்று கூறுவர்.

இவர் செய்த குற்றம்—

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு

என்றபடி விலக்கப்பட்ட தீய ஒழுக்கத்தை மேற்கொண்டமை. அத்தொழில் இயற்றும் தீயவர் கூட்டத்தோடு பழகியிருந்தமை.

சமாதானம்:இவர் சூதாடியது அடியார்க்கு அன்னமளித்தல் (மகேசுவர பூசை) என்னும் திருப்பணியின் பொருட்டன்றி வேறு தன்னயம் முதலியன கருதாமையால் இவர் நற்சூதர் என்றே கூறப்படுவர். அதனைச் சேக்கிழாரும், உமாபதி சிவா சாரியாரும் கூறினமை காண்க.

சூதாடி வந்த பொருளில் முதலில் சிவனடியார்களுக்கு உணவு ஊட்டிக் கடைப் பந்தியிலே எஞ்சியதை உண்டும் மகிழ்ந்தது. எனவே எஞ்சாமல் முற்றும் புசிக்கப்படுமாயின் அன்று மகிழ்வொடு பட்டினியிருந்தும் அன்னம் ஊட்டும் பணியை முட்டாது புரிந்து வந்தமையால் இது குணமாகக் கொள்ளப்பட்டது.

சாக்கிய நாயனர்: இவர் செய்த குற்றம் — நாடோறும் சிவலிங்கத்தின் திருமேனியில் படும்படி கல்லெறிந்து வந்தமை.

அது குணமாகக் கொள்ளுமாறு — புறச் சமயிகளிடையிருந்து சிவனை வழிபட்டு உய்ய நினைந்த இவர் தம்மவர் அறியின் இதை நிறுத்துதற்கு இடையூறு அனைத்தும் செய்வார் என்று எண்ணி, அவர் அறியா வண்ணம் புரிய மேற்கொண்டது கல்லெறிதல். அவர் இதைக் கல்லாகக் கருதவில்லை. கல்லெறியும் போது அவர்மன நிலை இருந்தமை "அகநிறைந்த பேருவகை அடங்காத வாதரவான்" என்று சேக்கிழார் பெருமான் கூறிய படி இருந்தது. அவர் அகங்குழைந்து சிவத்தியானத்தோடு கல்லெறிந்தமை மலர் அணிந்ததாகவே கருதப்படும். சிவத்தியானத்தோடு செய்யும் பிறதொழில்கள் எல்லாம் தவமாகப் பயன் கொடுக்கும். "சித்தம் சிவமாக்கி செய்தனவே தவமாக்கும் அத்தன் கருணையினல் தோள் நோக்கம் ஆடாமோ" என்பதனுல் கொள்க. கல் மலராகவே கொள்ளப்பட்டது. இதனை, "அவர் செய்கை அன்பாலே நயந்ததனை அல்லாதார் கல்லென்பார் அரனர்க் கஃது அலராமால்" என்னும் சேக்கிழார் வாக்கால் அறியலாம்.

'எந்நிலையில் நின்ருலும் எக்கோலங் கொண்டாலுங்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்என்றே'

என்ற உண்மைக்கு (சாக்கிய நாயனர் புராணம் பாடல் 6) இவர் வரலாறு எடுத்துக்காட்டாக விளங்குவதாலும் இது குணமாகக் கொள்ளப்படும்.

சிலந்தி செய்த குற்றமென்ன? அது குணமாகக் கொள்ளப்பட்டது? எவ்வாறு?

அது யானையைக் கொன்றது பஞ்சமகாபாதகங்களுள் ஒன்று. "ஒன்ருக நல்லது கொல்லாமை' என்பது தமிழ்மறை. அதுவும் தன் சுய நலம்பற்றிக் கொன்றதன்று.

அது நாடோறும் காவிரி நீரைப் புழைக்கையால் கொண்டு வெண்ணுவல் பெருமானுக்கு அபிடேகித்து வழிபட்டு வந்த சிவனடியாரைக் கொன்றது கழுவாய் இல்லாத பெரும்பாவம். அது குணமாக்கப்பட்டவாறு:—

வெண்ணுவல் பெருமான் திருமேனியில் சருகு உதிரா வண்ணம் தன்வாய் நூலால் இயற்றிய பந்தரை அழித்த யானையைக் கொன்றது ஒரு அறமே. சிவபெருமான் திருமேனியில் சருகு உதிருமே என்ற பரிவால் கொன்றதே யன்றித் தான் இயற்றிய பொருள் அழிந்தது என்பதற்காகக் கொல்லவில்லை. சிவத்துரோகம் நிகழின் தன் உயிரைக் கொடுத்தேனும் அது நிகழாமல் போற்றுக என்பது ஆகமவிதி. பல நாள் பொறுத்துப் பார்த்து, பின்னரே கொன்றமையால் கொலைக் குற்றமாகாது. புண்ணியமே யாகும்.

இங்குக் குறித்த வரலாற்றையே "தெருண்டவாயிடை நூல் கொண்டு சிலந்தி சித்திரப்பந்தர் சிக்கென இயற்ற-என்று தொடங்கும் திருவாவடுதுறைப் பதிகத்தில் இவரும் (வன்ருெண்டரும்) 'சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற்பந்தர் செய்து' என்று அப்பரடிகளும் கூறியுள்ளனர்.

கண்ணப்பர்: இவர் செய்த குற்றம். வாயில் கொணர்ந்த நீரை அபிடேகித்தது. மயிரில் முடிந்து வந்த மலரைச் சாத்தியது. செருப்புக் காலை முகத்தில் வைத்தது. எச்சிலாகக் கொணர்ந்த மாமிசத்தை நிவேதனஞ் செய்தது. இவை அநுசிதமான செயல்கள்.

குணமாகக் கொண்டவாறு:

புலாலுணவு தனக்கு விருப்பமானது, சிவனுக்கும் விருப்பமென்று கருதினர். வாயில் நீரும், மயிரில் மலரும் அநுசிதமென்று இவர்க்குத் தெரியாது. அவர் எண்ணமெல்லாம் சிவபெருமான் ஒருவரையே பற்றியிருந்தது. 'சித்தம் சிவமாக்கிச்

செய்தனவே தவமாக்கும் அத்தன்' (திருவாசகம்) என்பதனாலும் "பாதகத்தைச் செய்திடினும் பரிவாகக் கொளுமே" (சிவனவன்-எனத் தொடங்கும் சித்தியார் பாடல்) என்ற சாத்திரப்படியும் குணமாகவே கொள்ளப்பட்டது. தற்போதம் ஒழிந்த நிலையில் இவர் செயலும் கொள்கையும் கொள்ளப்பட்டன. இதனைச் சேக்கிழார் பெருமான்,

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வா றறிநீ"என் றருள்செய்தார்

எனக் கூறியது கொண்டு உணரப்படும்.

கணம்புல்லர்:

தற்கொலை செய்துகொண்டது. சிவபுண்ணியம் பண்ணின உடம்பை நெருப்பில் கொளுத்தியது

குணமாகக் கொண்டவாறு—தமது பணிவிடை முட்டுப்பட நேர்ந்தது. முட்டாது செய்ய வேறு வழியுமில்லை. பணிவிடையை நிறுத்தி உயிர் வாழ்வதினும் இறத்தலே நலமென்று துணிந்தது தக்கதே. அதுவும் தமது பணிவிடையாகிய விளக்கெரித்த வழியாகவே நிகழ்ந்தது குணமாகக் கொள்ளத் தக்கதே.

குறிப்பு: திருநாளைப் போவாரைப் பற்றித் தனியே எழுதும் கருத்துடையேன்.

திருவருட்பயன் – தெளிவுரை

பண்டித வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்,

(மலர் 15. இதழ் 12-ன் தொடர்ச்சி)

96. உள்ளும் புறம்பும் ஒருதன்மைக் காட்சியருக்(கு)
எள்ளும் திறம்ஏதும் இல்.

(தெ–ரை) அகமும் புறமும் ஒருதன்மைத்தாகக் காண வல்லார்க்கு ஏதனையும் இகழ்தல் தோன்ருது என்பதாம்.

வேண்டுதல் வேண்டாமையிலான் அடி சேர்ந்தமையால் தாமும் அந்நிலையைப் பெறுவர்; பெறவே,

"அவரவருக் குள்ளபடி ஈசனரு ளாலே
அவரவரைக் கொண்டியற்று மாறல்–அவரவரை
நல்லார்பொல் லார்என்று நாடுவதென் நெஞ்சமே
எல்லாம் சிவன்செயலென் றெண்"

என்னுமாப் போல எல்லாம் சிவன் செயலாகக் கருதுவர் என்பதாம்.

"மாட்சியிற் பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

என்னும் புறநானூற்றுப் பகுதியும் ஈண்டு நினைவு கூர்தற் குரியதாகும்.

'உள்ளும் புறம்பும் என்பதற்கு' உயிர்க்குயிராய் விளங்கும் இறைவனையும், வெளியே குருவாய் எழுந்தருளி வந்த திருமேனியையும்' எனப் பொருள் உரைப்பாரும் [1] உளர்.

---

1. சிந்தனையுரைகாரர்; திரு தே.ஆ. சினிவாசன் அவர்கள்.

97. உறுந்தொழிற்குத் தக்க பயனுலகம் தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன்.

(தெ-ரை) பயன் கருதியும், யான் என்னும் பற்றுக் கொண்டும், செய்யும் செயல்களுக்கெல்லாம் தக்க பயன் உலகியலின்பமே யாகும்; அவையிரண்டுமின்றிச் செய்யும் செயல்கள் முத்தியின்பத்தைத் தரும் என்பதாம்.

உறுந்தொழில்-பற்ருேடும்பயனேடும் பொருந்தும்தொழில். ஈண்டு உலகம் என்பது அதன் காரணமாக விளைகின்ற இன்பங்களைக் குறிக்கும். வறுந்தொழில்-பற்றும் பயன் கருதலும் இன்றிச் செய்யும் தொழில்கள். வாய்மை-வீட்டின்பம். "யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானேர்க்கு உயர்ந்த உலகம் புகும்"

என்பதனுலும் இவ்வுண்மை விளங்குதல் காண்க.

இதற்கு இவ்வாறன்றி, "உலகத்திலே வாழும் மக்கள், தாம் தாம் செய்த தொழிலுக்குத் தகுந்த பயனை அடையும். அதுபோல தொழிலேதும் புரியாத ஞானிகளுக்குச் சத்தியப் பொருளாகிய ஞேய அடைவே பயனுகும்" என்று உரைப்பாரும் [2] உளர்.

98. ஏன்ற வினைஉடலோ டேகும்இடை ஏறும்வினை
தோன்றில் அருளே சுடும்.

(தெ-ரை) ஞானிகளுக்குப் பிறந்த உடம்பால் முகந்து நின்ற வினை உடலோடு கழியும்; அவையனுபவிக்கும் பொழுதே இடையே ஏறும் வினை தோன்றின் அதனைத் திருவருளே நின்று சுட்டொழிக்கும் என்பதாம்.

உயிர்களால் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளுள், பிறந்த உடம்பால் முகந்து நின்ற வினையைப் 'பிராரத்தம்' என்பர். இதனையே ஆசிரியர் 'ஏன்றவினை' என்பர். அது ஞானியர்களுக்கு எடுத்த உடம்பால் அனுபவித்தற்கு வரும்; அவற்றைத் துய்க்கும் பொழுதே தோன்றும் வினையை 'ஏறும்வினை' (ஆகாமியம்) என்பர். அதனைத் திருவருள் அழிக்கும் என்பதாம்.

---

2. திரு. தே. ஆ. சீனிவாசன் அவர்கள்.

99. மும்மை தரும்வினைகள் மூளாவாம் முதறிவார்க்கு
அம்மையும் இம்மையே ஆம்.

(தெ–ரை) முதிர்ந்த ஞானம் உடையார்க்கு மனம், மொழி, மெய்களால் செய்யும் எவ்வினைகளாலும் வினை ஏறப் பெருதாம். அவர்கள் வீட்டின்பத்தையும் இம்மையிலேயே அனுபவிப்பர் என்பதாம்.

ஞானியர்கள் செய்யும் செயல்கள் எல்லாம் பற்றும் பயனும் இன்றித் திருவருளுக்குத் தம்மை அடிமைப்படுத்திச் செய்வன வாதலின் அவற்ருல் வரும் நன்மை தீமையும் இலவாகின்றன.

மும்மை என்பது 'இருமை வகை தெரிந்து' என்புழிப் போல ஈண்டு எண்ணைக் குறித்தது. அவையாவன: மனம், மொழி, மெய் என்பன. அம்மை முத்தியின்பம்.

"சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகிற்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள் இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுஎன்? இம்மையிலே உயிரின்
பற்றறுத்துப் பரத்தையடை பராவுசிவ ரன்றே
ஆக்குமுடி கவித்தரசாண் டவர்கள்அரி வையரோ(டு)
அனுபவித்தங் கிருந்திடினும் அகப்பற்றற் றிருப்பர்
நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற் ருலும்
நுழைவர்பிறப் பினின்வினைகள் நுங்கி டாவே."
(சித்தியார்–287).

"இவனுலகில் இதமகிதம் செய்த வெல்லாம்
இதமகிதம் இவனுக்குச் செய்தார்பால் இயையும்
அவனிவனுய் நின்றமுறை ஏக னுகி
அரன்பணியின் நின்றிடவும் அகலுங் குற்றம்
சிவனும்இவன் செய்தியெலாம் என்செய்தி யென்றும்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல உடனுகி நின்றுகொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே."
(சித்தியார்–304)

என்னும் திருவாக்குகள் இவர்தம் மாண்பை விரித்து நிற்பன வாகும். அவை ஈண்டு நினைவு கூர்தற்குரியன.

'மும்மை' என்பதற்கு இம்மை மறுமை, அம்மை என்னும் மூவகைப் பயன்களையும் தரும் வினை [1] யென்றும்; பழவினை, நுகர்வினை, வருவினை [2] என்றும் பொருள் உரைப்பாரும் உளர்.

100. கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத்(து) அலைவர் மிக.

(தெ-ரை) பொறிகளின் வயப்பட்டு வஞ்சனையைச் செய்கின்ற உயிர்களின் துன்பத்தைக் கருதி அவை அதனின்றும் நீங்க ஞானியர்கள் தம்கருணைப் பெருக்கால் கலுழ்வர் என்பதாம்.

உயிர்கள்படும் துன்பத்திற்காக ஞானியர்கள் மிக வருந்துவர் என்பதாம்.

—"உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர் கொல்என்று
பரிவதூஉம் சான்ரோர் கடன்"

"அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்ருக் கடை"

என்பவற்றிற்கேற்ப ஞானியர்கள் உள்ளம் அமைந்து நிற்கும்.

வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்

(முற்றும்)

---

1. நிரம்ப அழகிய தேசிகர்; சு. சிவபாத சுந்தரம்.
2. கா. சு. பிள்ளை; திரு. தே. ஆ. சீனிவாசன் அவர்கள்.

A